முத்தாரம்

[இலக்கியத் திங்கள் ஏடு]

ஆசிரியர்:

மு. கருணாநிதி

வெளியிடுபவர்:

மாறன் எம். ஏ.,

அச்சிடுவோர்:

'முரசொலி' அச்சகம்,

சென்னை—6.

அலுவலகம்:

4-128, மவுண்ட் ரோடு,

தபால் பெட்டி எண்: 712

சென்னை—6.

'டெலிபோன்' எண்:

85225

ஆண்டு சந்தா

உள்நாடு ரூ. 6—0—0

வெளிநாடு ரூ. 7—0—0

ஆறுமாத சந்தா

உள்நாடு ரூ. 3—0—0

வெளிநாடு ரூ. 4—0—0

198952

ஆரம்: 1 | ஏப்ரல், 1957 | முத்து: 7

கதை:

மு. கருணாநிதி ... 4

அதிகமான் ... 38

வி. ஜி. விசுவநாதன் ... 70

அன்புவாணன் ... 93

முல்லை சத்தி ... 102

கட்டுரை:

அறிஞர் அண்ணா ... 18

அர. சு. நாராயணசாமி ... 26

புலவர் குழந்தை ... 33

அனுசூயா மோகனசுந்தரம் ... 62

முதல்வன் ... 65

செல்வக்கோன் ... 78

சிவ. இளங்கோ ... 90

கவிதை:

கவிஞர் வாணிதாசன் ... 8

கருணானந்தம் ... 10

பெருங்கதை:

டாஃப்னேடு மாரியர்—தமிழில்:
அ. ராஜா ... 112

சித்திரத் தொடர்கதை ... 46

இரவில் சென்னை ... 81

அறிக்கை

"முத்தாரம்"

1. வெளியாகும் இடம்	:	4-128, மவுண்ட் ரோடு சென்னை—6.
2. வெளியிடும் நாட்கள்	:	மாதம் ஒரு முறை
3. அச்சிடுவோரின் பெயர்	:	மு. கருணாநிதி
இனம்	:	திராவிடர்
முகவரி	:	4-128, மவுண்ட் ரோடு, சென்னை--6.
4. வெளியிடுவோரின் பெயர்	:	எஸ். என். மாறன் எம். ஏ.
இனம்	:	திராவிடர்
முகவரி	:	4-128, மவுண்ட் ரோடு, சென்னை—6.
5. ஆசிரியரின் பெயர்	:	மு. கருணாநிதி
இனம்	:	திராவிடர்
முகவரி	:	4-128, மவுண்ட் ரோடு, சென்னை—6.
6. பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்.		மு. கருணாநிதி, 4-128, மவுண்ட் ரோடு, சென்னை—6.

என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று எஸ். என். மாறனாகிய நான் அறிவிக்கிறேன்.

(ஒப்பம்) **எஸ். என். மாறன்,**

1—4—57

வெளியிடுவோர்.

முத்துக்கள்

சென்ற இதழில் ஆசிரியரின் கவிதை நடைச் சிறுகதை இல்லையே—என்று குறை பட்டுக் கோண்டீர்கள். இந்த இதழிலே அந்தக் குறை நீக்கப்பட்டு, கறையில்லாத நிலவாகத் திகழ்கிறது எப்ரல் 'முத்தாரம்'!

சென்ற இதழில் முத்தாரத்திற்கே உரிய எழில் சிறிது குறைந்து காணப்படுகிறதே—என்று அட்டைப் படத்தைக் காட்டி உங்களில் சிலர் எழுதியிருந்தீர்கள்.

தேர்தல் நேரம் அப்போது. அதனால்தான் அப்படி! இனிமேல் நாங்களே 'தேர்தல்' நடத்தி; கடைந்தெடுத்த கனிச் சாற்றை இனி ஓவியமாக; காவியமாக உங்கள் முன்னே வைப்போம்!

இதில் அறிஞர் அண்ணா அவர்களது சென்னைச் சோற்போழிவு தரப்பட்டிருக்கிறது!

புலவர் குழந்தை ஆராய்ச்சிக் கட்டுரை வழங்கியிருக்கிறார்!

இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வார்த்தை மோழிபெயர்ப்புக் கதைகளை மட்டும்தான் அனுப்ப வேண்டுமேன்பதில்லை. சோந்தக் கற்பனையில் உதித்த கருத்துள்ள கதைகளையும் அனுப்பி வையுங்கள். நிச்சயம் வேளியிடுவோம்.

முத்தாரம் வளர்ச்சி பற்றிய உங்கள் கருத்தினையும் தேரிவியுங்கள்; வரவேற்கிறோம்; சேயற்படுத்த முயல்கிறோம்.

நகை நட்டு ஏதுமின்றி எழில் சொட்டும் பருவத்தாள். புகையொத்த கொடிபோல நெளிந்தாடும் உருவத்தாள். இடையோ ஒரு பிடிக்குங் காணாத இளம்பிடி! இதழ் களிலோ தேன் ஒருபடி!... இல்லை இவளுக்குக் குறையெனும் புகழ் பெற்ற முல்லை. பேச்சிலோ கிள்ளை!...அவளை விடுமோ காதல் தொல்லை!

★

அமுதம் உண்ணப் பிறந்தவன் ஒருவன்...அவன் பேர் மருதன். குமுதம் சிரித்திடக் கோல நிலவென வந்திடும் குமரன். "வேலெடுத்தால் உந்தன் விழி நினைவு வாட்டுதடி; வாளெடுத்தால் முத்துப்பற்கள் ஒளி தலைகாட்டுதடி; வேழம் ஏறிவிட்டால் மத்தகந்தான் மெத்த தொல்லை அளிக்குதடி!" எனக் கொஞ்சிப் பஞ்சணையில் அஞ்சுகத்தைப் புலன் மாற்றிப் போடுகின்ற பொல்லாக்காளை! போர் முகத்துப் பெருவீரன்! தானைத் தலைவன்!

★

அவன் ஒருநாள் பகைப்புலத்தினை அழிப்பதற்கு அரசின் ஆணை—காதல் அரசியாணைப் பெற்றுச் சென்றுேன், பத்து கிழமை சென்ற பின்பும் வந்தானில்லை. பசலை நிறம் படர்ந்ததாலே பாவை வாட, பருவமெய்ய நாள் நோக்கும் தோழிக் கூட்டம் கேலி பாட "தருணமிதே தாகந் தீர்க்க; வருவீ" ரென்றே அவளும் ஓடி, நிழல் கண்டு ஏமாந்து—ஏங்கி நின்ருள்.

ஆலையிட்ட கரும்பாக ஆன மனம் தேறுதற்கு மாலையிட்ட கண்ணாளன் வரைந்த ஓலை மட்டும் கிட்டியது அவள் கையில்!...அதில்,

"குளிர்தருவே! பனிமலரே! வெற்றியுடன் திரும்புகிறேன். கொற்றவனைக் காணுதற்கு முன்பாக கொவ்வைக் கனி கொத்துதற்கு வருகின்றேன்."

—எனக் கண்ட எழுத்தெல்லாம் நனைந்தன முத்தம் பெற்று!...உயர்வான நெஞ்சகத்தில் ஒட்டிக்கொண்ட ஓலைக்கு ஊமைக்குணம் இல்லையேல்...ஓராயிரம் கதை சொல்லும் உவமை காட்டி!

★

தோழிகள் வந்தனர். கோழி போல் குடிலுக்குள் அடைகாக்க வேண்டாம்; காலையில் ஆடிப்பெருக்கிற்கு ஆற்றினிலே விழா எடுக்க வருவாய் என்றனர். காலையில்தான் அவர் வருவார்; ஆடிப் பெருக்கினும் அன்பைப் பெருக்குபவர் என்ருள் முல்லை. "அட கிறுக்கே! ஆளன் எப்போதும் இருப்பான்; ஆடிப்பெருக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான்" எனக்கூறி காவிரியை வாழ்த்துகின்ற கவிதையொன்றை இசை கூட்டிப் பொழியலானுர். பாட்டியொருத்தி பவளம் என்பாள்; அவள் நீட்டி முடுக்கிக் கூறலுற்

ருள்; ஆடிப்பெருக்கிற்குத் தடையின்றிப்போக வேண்டுமென்ற அறிவுரையை!...முல்லையும் வருவேன் என்ருள்...அனே வருமே அடுத்த கொல்லையிற் சென்று மருதாணி இலே பறிக்கப் பறந்துவிட்டார்.

★

கிள்ளிவந்த மருதாணி கொழுந்துகளே அள்ளிவைத்து, அறைத்தெடுத்து அம்மாவின் துணேயோடு, அழகான கைகளிலும், அந்தமிகு தந்தக் கால்களின் நுனிகளிலும் தடவிக்கொண்டாள். உள்ளங் கை தனிலே உதய சூரியன்போல் மருதாணி! வீணே மீட்டும் விரல்களிலே........குறிபதிக்கும் நகங்களிலே மருதாணி! கண்ணகியின் சிலம்புபோல் காலினிலே மருதாணி! இங்கெல்லாம் இட்டுக் கொண்டு மருதாணி இடாமலே சிவந்து நிற்கும் கன்னத்தில் இனமறியா வெட்கந் தேக்கிப்படுத்துக் கொண்டாள். "இரவெல்லாம் மருதாணி ஈரம் காய்ந்து காலேயிலே உதிர்ந்து விட்டால்...

—புது எழிலோடு வரவேற்போம்; போர் முடிந்து வருகின்ற காதலனே...என நினேத்து மகிழ்ந்துகொண்டாள்.

★

உறங்காமல், ஒருபுறமும் அசையாமல், மருதாணி கலேயாமல் படுத்திருக்கும் அவள் காதில் மருதன் அழைக்கின்ற குரல் கேட்க...எழுந்து நின்ருள்; அவன் எதிரே நின்ருன். அசைவற்ருள். "பாய்ந்து வந்து தழுவிடுவாய்; படைமுகத்துச் சேதியொன்றும் சொல்லுதற்கு வழியின்றி வாய்மூடி இதழ் பதிப்பாய்! என நினேந்து ஓடி வந்தேன்; ஏன் முல்லே தயக்க" மென்ருன், காதல் மயக்கத்தால் சுழலுகின்ற மனமுடையோன்.

"காலேயிலே வருவீர் என்று மருதாணி பூசிக்கொண்டேன்—ஓலேயிலே விபரம் இல்லே...ஓடி வந்து தழுவிக்கொண்டால்; மருதாணி கலேந்துவிடும்—ஊர் முழுதும் தோழிகள், நாளேக் காலே முதல் நமைப்பற்றி தம் பட்டம் போட்டிடுவார்; அதனுல்தான் தயங்குகிறேன்; தழுவாமல் இதழ் குவிப்போம் இப்போதெ"ன்ருள். தடையா சொல்வான்-முத்தமிட்டுத் தனியாக முற்றத்திலே படுத்துக் கொண்டான். கலேயாத மருதாணி—கலங்கி நின்ற இளம் நெஞ்சம்—இந்நிலேயில் உறங்காமல், புரளாமல் விடிவெள்ளி வருவதெப்போ என எண்ணி விண்ணுேக்கி வீழ்ந்திருந்தாள், விழியழகி முல்லேப் பெண்ணுள். ஓரிரவு போயின் என்ன; நாளே உண்டு—என்னருகே அந்தக் காளேயுண்டு—இனி நாளெல்லாம் தேன் மொள்ளும் இன்பமுண்டு—எனச் சொன்னுள், அழுகின்ற இதயத்துக்கு ஆறுதலாய் ஒரு வார்த்தை!

★

விடிந்தது பொழுது—வெண் சக்கரக் குடையானேக் காணுதற்கும், வெற்றிச்சேதி கூறுதற்கும் காதலிபால் விடை பெற்று வேந்தனது தலேநகரம் பயணப்பட்டான் வீரர் தலேவன் வெள்ளி நிலவு முளேப்பதற்குள்

வருவதாக வாக்களித்து. மருதாணி உலர்ந்ததாலே...உதிர்த்து விட்டு அழகான கைகளையும், கால்களையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டாள் மங்கை நல்லாள். செங்கோடு—சிலம்புக்கோடு—சித்திரக் கோடு—இவைகளோடு—பத்தரை மாற்றுத் தங்கமேனி பொலிவுசிந்த புறப்பட்டாள் ஆறு நோக்கித் தோழிகளுடன்!...விழா எடுத்தனர்—ஆடினர்! பாடினர்!... விரிந்த பகல் இரவாய்ச் சுருங்குவதெப்போ என வினைந்தனள் முல்லை !

★

இருண்டது உலகம்—ஒளி பெற்றது அவள் உள்ளம்!... வெள்ளி நிலவே வாராயோ என்றாள்; அதுவும் வந்தது... "அவரெங்கே...வந்தவுடன் அணைத்து மகிழ்வதற்குத் தடையில்லை; மருதாணி இலையில்லை; ஈரமில்லை...அது தந்த எழிலுண்டு கையில்!...இன்ப விருந்துண்டு இரவெல்லாம் கழிப்போம்..."

முல்லை பாடினாள் நிலவு நோக்கி.....புரவியொன்று வேகமாக தலைவாயில் பக்கம் வருவது கண்டாள். அவரே யென்று கூவினாள். ஆவி நிகர் ஆளனுக்குப் பதிலாக அவன் தந்த ஓலைகொண்டு தூதன் வந்தான். அதில்;

"தமிழே! தண்பொழிலே!... கடாரத்தில் படையெடுப்பு ! கடல் கடந்து செல்லுகின்றேன். உடல் மெலிந்து வாடாதே...ஓராண்டில் திரும்புகின்றேன்"

—என்ற எழுத்துக்களை நனைத்தாள் கண்ணீரால்!......கட்டிலிலே குப்புற வீழ்ந்துவிட்டாள் ...வீணாக்கி விட்டேனே நேற்றிரவை...விரலுக்கும் காலுக்கும் அழகு தேவையென்று விருந்துண்ண மறுத்தேனே—இனி ஓராண்டு யாருக்கு அழகு காட்ட இந்த மருதாணி தேவையென்று... கசக்கிக்கொண்டாள், கைகளையும் கால்களையும் !...

இதுபோல நேற்றிரவே ஈர மருதாணியைக் கலைத்திருந்தால் அது கலைந்திருக்கும்...கலவி நடந்திருக்கும். இன்று கலையுமோ?...கலையவில்லை !... "ஓராண்டு!" எனச் சொல்லி கொட்டிவிட்டாள் மழைக் கண்ணீர்!...அப்போது 'கலகல' சிரிப்புக் கேட்டு 'மளமள' என எழுந்தாள்—எதிரே மருதன் நின்றான்...ஏனத்தான் அழவிட்டீர் எனக்கேட்டபடி அணைத்துக்கொண்டாள். கடாரம் போவதுண்டோ எனக் கதறியழும் பாவை நோக்கி; "மருதன் பெரிதோ—மருதாணி பெரிதோ?...இதற்கு விடை தேவை" எனச் சிரித்தான் வீரர் குலத்தான்.

"மன்னிப்பீர்; கலைகின்ற வண்ணக்கோடு மருதாணி—கலையாத சித்திரந்தான் தாங்கள் எனக்கு"'

—எனச் சொல்லி விம்மிவிட்டாள்—விம்முகின்றவடிவழகில் மனம் பறிகொடுத்து முத்தம் பதித்துவிட்டான் கணக்கின்றி! முல்லைமணம் குடிலெங்கும் கமழ்ந்தது! காதல் வாழ்ந்தது!

★

உணர்ந்தான் இல்லையே!

கவிஞர் **வாணிதாசன்**

என்னை உணர்ந்தான் இலேயே! தோழி!
என்னை உணர்ந்தான் இலேயே!

அன்னை உணர்ந்தனள்! அவனைத் தெரிந்தனள்!
தென்னை சிறுதோப்புச் செல்லாதே என்றனள்!

தீம்புனல் ஆறென்றால் செழும்வெள்ளம் என்கின்றாள்
செந்தா மரைஎன்றால் உன்கைப்பார் என்கின்றாள்
வேம்உயிர்த் தன்மையை அன்னைக்கோ அவளுக்கோ
விளக்கடி என்னுயிர் இன்றைக்கோ நாளைக்கோ!

காரிருள் மிகஉண்டு கதவினில் தாழுண்டு
காற்றடித் தாலும்போதும் அன்னைக்கோ விழிப்புண்டு
வேரில் பழுத்தபலா வீணே அழியுமுன்பு
விருந்திற்கிங் கேற்பாடு செய்என்று சொல்சென்று!

ஓட்டுச் சாவடியில் . . .



'' அந்தப் புள்ளியை இங்கே வையுங்களேன்;
அழகா இருக்கும்!''



ஓய்வு கிடைத்தது!

கருணாநந்தம்

காட்டூரின் பணிமனைக்கு மாற்ற லாகிக்
கணக்காக ஓராண்டு கழிந்துங் கூட,
வீட்டில்போய் மனைவிமக்கள் முகத்தைக் கண்டு
மீள்வதற்கும் ஓய்வுபெறாச் சங்க ரையர்—
எட்டினிலே, எழுத்தினிலே மனம்வைக் காமல்,
என்னதான் மார்க்கமென எண்ணி யெண்ணிக்—
கோட்டையினைப் பிடித்தவர்போல் குதித்தெ ழுந்தார்!
குறும்பாகப் புன்னகையை அரும்ப விட்டார்!

அடுத்ததினம் முதல்தேதி ஆகை யாலே
அமைதியுடன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு,
கடுத்தமுகம் காட்டாமல் கனிவாய்ப் பேசி,
கடிகார முள்மீதே கண்ணாய் நின்றார்!
தொடுத்துவிட்ட அம்புபோல் தந்திக் காரர்
துடிப்போடு சங்கரையர் பேரைச் சொல்லி
எடுத்தளித்த உறைபிரித்துப் பார்த்தார்—"பாட்டி
இறந்துவிட்டாள்! உடன்வருக, அடக்கம் செய்ய!"

மகனளித்த தந்தியினால் பத்து நாட்கள்
மனமார மேலாளர் ஓய்வு தந்தார்!
அகங்களிக்கப் புறப்பட்டார் சங்க ரையர்;
'அவசரம்ஏன்? போய்த்தந்தி தானே!' என்று—
முகஞ்சுளிக்கும் மனைவிக்குப் புடவை, தாய்க்கு
முழுவெள்ளைச் சேலை,மற்றும் தின்பண் டங்கள்,
சுகமளிக்கும் கடைச்சரக்கு யாவும் வாங்கிச்—
சுவைபெருகத் திரைப்படமும் பார்த்து விட்டு—

நள்ளிரவில் மெள்ளவந்து வீடு சேர்ந்து,
நயமாக மனையாளை அழைத்த போது:—
"உள்ளபடி உங்களன்னை மாண்ட செய்தி
உங்களுக்குத் தெரியாதா? ஓய்வு வேண்டிக்
கள்ளமுறை கையாண்டு, தாய்மு கத்தைக்
காணாமல் ஏமாந்து கோட்டை விட்டீர்!
கொள்ளிவைக்கப் பிள்ளைவராக் குறையைத் தீர்க்கக்
குழந்தைதான் கருமங்கள் செய்தான்"—என்றாள்!



தேம்ஸ் நதி தீரத்தில்...

லண்டன் நகரத்திலே இப்போது வீடற்று; தெருவோரத்திலே; பொதுப் பூங்காவின் பெஞ்சுகளிலே தூங்கிக் காலத்தைக் கழிப்பவர்களின் தொகை குறைந்து விட்டது; இல்லையென்று சொல்கிற அளவுக்குக் குறைந்து விட்டது.

ஒரு சமயம் கிருஸ்துமஸ் இரவில் வீடற்று தெருவோரத்தில் தூங்குவோரைக் கண்டு பிடித்து; அவர்களுக்குப் பொருளுதவி செய்ய 'சால்வேஷன் ஆர்மி' என்னும் பொதுநலச் சங்கம் ஒரு குழுவினரை அனுப்பியது. அந்தக் குழுவினர் கண்களுக்குத் தெருவோரத்திலே தூங்கிக் கொண்டிருந்த நபர் ஒரே ஒருவர்தான் தென்பட்டார். அவரை நெருங்கி அவரிடம் சிறுதொகை ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினர். ஆனால் அவர் மறுத்துவிட்டார். ஏனெனில் அவர் ஒரு போலீஸ்காரராம்!

அந்த அளவுக்கு நடைபாதை வாசிகளின் தொகை லண்டன் மாநகரத்திலே குறைந்து விட்டது. இதற்குக் காரணம் அரசாங்கத்தின் பொருளுதவியும் பல சமூக ஸ்தாபனங்களின் உழைப்புமேயாகும்! லண்டன் நகரசபையே இதற்குத் தக்க முயற்சி செய்து நடைபாதை வாசிகள் இல்லாத அளவுக்கு நிலைமையைச் சமாளித்து வருகிறது.

பொதுவாக வீடற்றவர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவதாக, சில தொழிலாளிகள் எந்தக் குறிப்பிட்ட தொழிலிலும் நிலையாக இராமல் தொழிலுக்குத் தொழில் மாறிக் கொண்டே வருகிறார்கள். சிலர் கோடைக்காலத்தில் பட்டணத்திலே வந்து வேலை பார்ப்பார்

கள்; பருவக் காலம் வந்ததும் கிராமத்துக்குச் சென்று அங்கும் பயிர்த் தொழில் புரிவார்கள்!

...இந்த 'வீடற்ற வாசி' களில் பெரும்பான்மையோர் எந்த விதப் பொறுப்பில்லாமலும் வாழ்க்கை நடத்த முயலும் 'மைனர்' பேர்வழிகள்தான்! இந்த ரகத்தவர் ஊர் சுற்றிக் கொண்டிருப்பார்கள்; செலவழிக்கப் பணம் போதவில்லை யானுல் வேலை பார்ப்பார்கள்; பிறகு திரும்பவும் ஊர் சுற்றுவார்கள்! லண்டன் ஓட்டல் தொழிலாளர்களில் பெரும்பாலோர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களே!

அடுத்தபடியாக வீடற்றவாசிகளாயிருப்போர் வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர் நிற்க முடியாமல் பாதிக்கப்பட்டவர்களாகும். அதிகப்படியான குழந்தை குட்டிகள் காரணமாக வாடகை கொடுத்து ஒரு வீட்டில் குடியிருக்க முடியாதவர்கள்; மனைவி மக்களோடு கோபித்துக் கொண்டு வெளியேறியவர்கள்; அதிகமாகக் கடன் வாங்கி விட்டு அதைத் திருப்பிக் கொடுக்க சக்தியில்லாமல் திரிபவர்கள் — இவர்கள் இந்த ரகத்தில் சேருகிருர்கள்.

உதாரணமாக 'சால்வேஷன் ஆர்மி' என்னும் சமூக ஊழியம் புரியும் சங்கம் ஆதரவற்றவர்களுக்காக நடத்தி வரும் விடுதியில் ஒருத்தி தன் குழந்தைகளுடன் அடைக்கலம் புகுந்தாள். தான் இன்னது என்று விபரம் தெரியாமல் வாரம் ஆறு பவுன் திருப்பிக் கொடுத்து விடுவதாகக் கூறி கடன் வாங்கியதாகவும்; பிறகு தாங்கள் சம்பாதிப்பது முழுவதும் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கே சரியாக இருக்கிற தென்றும் அவள் காரணம் காட்டினுள்.

இன்னெரு ரகத்தவர் இருக்கிருர்கள்; அவர்கள் அரசாங்கத்தின் உதவி நிதியிலிருந்து உதவி பெறுவதற்காகவே உழைக்காமல் ஊர் சுற்றுவதிலே பிரியம் காட்டுகிருர்கள்! ஆனுல் இவர்கள் தொகை குறைவுதான்!

அரசாங்கம், நகரசபை, பொது நல ஸ்தாபனங்கள் – இவற்றின் மூலம் லண்டனிலே வீடற்ருேர் நலன் பாதுகாக்கப்படுகிறது.

வீடற்றுத் திரிய வேண்டியதற்கான காரணங்கள் முற்றிலும் களைந்தெறியப்படா விட்டாலும் அங்கே வீடற்ற நடைபாதை வாசிகள் இல்லை.

ஏன்?

நடைபாதை வாசிகள் வாழ்வதை அங்கே அவர்கள் நாட்டின் அவமானச் சின்னமாகக் கருதுகிருர்கள்!

இங்கே...?

—[ஆதாரம்: 'எக்கனுமிஸ்ட்']

★சென்னையிலே ஆதரவற்ற நடைபாதை வாசிகள் ஆயிரக்கணக்கானவர்கள். ஆனுல் நடைபாதை வாசிகளே இல்லாத நகரமும் இருக்கத்தான் செய்கிறது!

★ எறும்புக் கூடு ★

எறும்பைப்போல் சுறு சுறுப்பு வாய்ந்த பிராணிகள் உலகத்தில் கிடையாது. அதனிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன.

இங்கிலாந்திலே திருமதி மே பிரியண்ட் என்று ஒரு அம்மையார் இருக்கிறார். அவர் எறும்பை வைத்துக் கொண்டு வியாபாரமே நடத்துகிறார்!

எப்படி என்று கேட்கிறீர்களா?

புல்வெளியில் வசிக்கும் எறும்புகளை அவர் தனியாக 'எறும்புக் கூடு' ஒன்று ஏற்படுத்தி அதில் வளர விடுகிறார்.

பின்னர் அந்த எறும்புக்கூடுகளை நல்ல விலைக்கு பள்ளிக்கூடங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும், ஆராய்ச்சிக் கூடங்களுக்கும் விற்றுவிடுகிறார்.

இதுபோல் ஒரு சமயம் வாரமொன்றிற்கு நூறு கூடுகளைச் செய்திருக்கிறார்.

—இது நீங்கள் நினைப்பதைப் போல் சாதாரண விஷயமல்ல. எறும்புகளைக் கூண்டோடு கைது செய்து; அவைகளை வளர விடுவது மிகக் கடினம்.

இந்த எறும்புக் கூடுகள் கண்ணாடிக் கூறைகளால் வேயப்படுகின்றன. இந்தக் கண்ணாடி வழியாகப் பார்த்தால் உள்ளே எறும்புகள் அன்றாடம் வாழ்க்கை நடத்தும் விதம் தெற்றெனப் புலப்படும்.

முதலில் இந்த எறும்புகள் உயிரோடு புல் வெளிகளிலிருந்து பிடித்து வரப்படும். இதில் ராணி எறும்பை மிகவும் சிரமப்பட்டுப் பிடிக்க வேண்டும்.

பொதுவாக ராணி எறும்புகள் எறும்புப் புற்றின் அடிப்பாகத்தில் — அதாவது மூன்றடிக்கும் கீழாக இருக்கும். மத்தியான நேரங்களில் சுமார் மூன்று மணிக்குள்ளாகத்தான் இவை மேல் பாகத்திற்கு வருகின்றன. அந்த நேரம் பார்த்து அவைகளைப் பிடிக்க வேண்டும்.

இந்த எறும்புகள் எல்லா மண்ணிலும் வசிக்காது.

விற்பனை பெருகிற்று; இறுதியில் அமெரிக்க அரசாங்கமே இதைத் தடுத்து விட்டது!

ஆகவே கண்ணாடிக் கூட்டிற்குள் குறிப்பிட்ட மண்ணையே சேர்க்க வேண்டும்.

—எறும்புகள் வாழ்வதற்குரிய இந்த மண்ணைத் தயார் செய்வது திருமதி மே பிரியண்ட் வீட்டாருக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாகவே இருக்கிறது.

—இது போன்ற செயற்கை எறும்புக் கூடுகளுக்கு பிரிட்டனிலே நல்ல கிராக்கி இருந்தது. லண்டன் கடைகளிலும் இதற்கு நல்ல விற்பனை இருந்தது. இவைகளைப் பெற்றோர்கள் அதிகமாக வாங்கினார்கள். அவர்கள் எறும்புகளின் நடவடிக்கைகளைத் தங்கள் குழந்தைகள் கவனித்தால் நல்ல பலன் அளிக்கும் என்று நம்புகிறார்கள்.

இந்த எறும்புக்கூடு அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்து இதற்கு மிக அதிகமான கிராக்கி ஏற்பட்டு; திருமதி பிரயண்ட்டினால் தேவையைப் பூரத்தி செய்ய முடியாத அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தியது. இன்னும் சொல்லப்போனால் அமெரிக்க டாலர்களைப் பெறும் அளவிற்கு இந்த எறும்புக்கூடு வியாபாரம் பெருகியிருந்தது.

பிறகு அமெரிக்காவிலே ஒரு சட்டம் செய்தார்கள். எறும்புக்கூடு இறக்குமதியினால் மண்ணைப் பற்றிய தொத்து வியாதிகள் பரவுவதாக புகார் கூறி எறும்புக் கூடு விற்பனையைத் தடை செய்து விட்டார்கள்.

[ஆதாரம்: 'மான்செஸ்டர் கார்டியன்']

●●●

ஒரு மண்புழு விளையாடுவதற்குத் துணையின்றி தவித்துக் கொண்டிருந்தது. அங்கும் இங்கும் சுற்றி அலைந்தது. கடைசியில் அதைப் போலவே ஒரு புழு தென்பட்டது. மகிழ்ச்சியுடன் வினவிற்று: ''என்னுடன் கொஞ்சம் விளையாட வருகிறாயா?''

அந்த மற்றொரு புழுவோ சிரித்துக்கொண்டே பதில் சொன்னது: ''கேலி செய்யாதே! நான் உன்னுடைய வால்!''

— 'டிட்பிட்ஸ்'; லண்டன்.

பட்டுப் புடவை வேணும்னு எத்தனை நாளா கேட்டுக்கிட்டு இருக்கேன்? நான் சொல்றதை யெல்லாம் இந்தக் காது வழியா வாங்கி அந்தக் காது வழியா விட்டுடுங்க!

1. நாக்கிற்கு சுவையைத் தெரிந்து கொள்ளும் சக்தி உண்டா?

2. பாம்பினுடைய வாய்க்கும்; மனிதனுடைய வாய்க்கும் உள்ள வித்யாசம் என்னவென்று கூறமுடியுமா?

3. சாதாரண நிலையில் ஒரு மனிதனுக்கு எவ்வளவு நேரம் தூக்கம் அவசியம்?

4. எரிமலைக்குள்ளே இருக்கும் சக்தி வீணாகத்தானே போகிறது; அதை ஏதாவது ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முடியுமா?

5. மனிதன் களைப்படைகிறான்; மிருகங்கள் களைப்படைகின்றன. இதைப் போலவே உலோகங்களும் களைப் படைவதுண்டா?

6. **உலகிலேயே அதிகப் பிரதிகள் அச்சான புத்தகம் என்ன?**

7. **சில சமயங்களில் இரவு நேரங்களில் கட்டில், மேஜை போன்ற மரச் சாமான்களிலிருந்து திடீரென்று சப்தம் வருவதைக் கேட்கிறோம். இது ஏன்?**

விடை 31-ம் பக்கத்தில்

பதினேழு இலட்சம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 15 பேர்தானே வெற்றி பெற்றார்கள் என்று கேலி பேசுகின்றனர்; ஏளனம் செய்கின்றனர்; 'திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி அதிகமா, குறைவா?'—என்ற சர்ச்சையில் ஈடுபடுகின்றனர்; அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன்—'நாங்கள் பெற்ற வெற்றி குறைவானதுதான் என்றாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்,'—என்று!

இன்று கேலி பேசுகிற அதே தலைவர்கள், நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று அறிவித்ததும், 'இவர்களுக்கு' என்றுகூட அல்ல—'இதுகளுக்கு, தேர்தலில் போட்டியிட யார் கிடைப்பார்கள்?' — என்று பேசினார்கள். கழகத்தின் சார்பில், நமது பொதுச் செயலாளர் தலைமையில், நமது தோழர்கள் ஐந்து பேர் நாடெங்கிலும் சென்று, தேர்தல் சூழ்நிலைகளை ஆராயப் புறப்பட்டனர்.

அறிஞர் அண்ணா

அப்போது கூறினர்—'பஞ்ச பாண்டவர்'கள் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு, சென்னையிலேயே தங்கியிருக்கிற கண்ணனை வந்து பார்த்து, 'கண்ணா கண்ணா! தேர்தலுக்கு நிற்க ஆளே கிடைக்கவில்லை' என்று கூறுவது போலவும், கண்ணன் பஞ்சபாண்டவர் வடிக்கும் கண்ணீர்த் துளிகளைத் துடைப்பது போலவும் கேலி மொழி பேசினார்கள்!

பின்னர், 150 இடங்களில் நாம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது என்று அறிவித்தான பிறகு, '150 பேர் போட்டியிட்டால் என்ன? இவர்களில் ஒருவர்கூட வெற்றி பெறமாட் மாட்டார்கள்' என்று ஏளனம் செய்தனர்.

நாம் இப்போது 15 இடங்களைப் பெற்றிருப்பது கண்டு, '15 இடங்களைத்தானே பெற்றார்கள்?' என்று பேசுகிறார்கள்.

எனவே இன்று ஏளனம் செய்வோர்—கேலி பேசுவோர் என்றுமே நம்மை வாழ்த்தியவர்கள் அல்லர்! நமது வளர்ச்சி அவர்களின் வீழ்ச்சி!

அவர்கள், நம்முடைய வளர்ச்சியில் அவர்களுடைய வீழ்ச்சி இருப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள்.

மற்ற மற்ற கட்சியினர் நம்மைக் கேலி பேசும்போது—'15 இடங்களில்தானே பெற்றனர்?' என்று ஏளனம் செய்யும் போது, அதில் துக்கம்தான் தொக்கி நிற்கிறது. அவர்களது கேலி மொழிகள், நமக்கு மேலும் உற்சாகத்தைத் தரட்டும்!

அவர்களது கேலி மொழியில், நமது நாவலர் வெற்றிபெறவில்லையே என்ற துக்கமும் கலந்திருக்கிறது. நாங்கள் 15 பேர் சட்ட சபைக்குச் செல்லும்போது, ஈட்டி பாய்ந்த இதயத்துடன்தான் செல்கிறோம்.

நமது நாவலரையும் என்றைக்கு நாம் சட்ட மன்றத்திற்குள் அழைத்துச் செல்கிறோமோ அன்றுதான் நாம் மன நிம்மதி பெற முடியும்.

சட்ட மன்றத்திற்குச் செல்லும் நமது தோழர்களுடைய பொறுப்புகள் மூன்று வகையானவையாகும். ஒன்று—அங்கே நடைபெறக்கூடிய விவாதத்தை நாகரீகமாக தாக்குவது; இரண்டாவது—அவரவர்கள் அவரவர் தொகுதி நலன்களுக்கான காரியங்களைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு; மூன்றாவது—நமது தி. மு.கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாதிருப்பது. இந்தப் பொறுப்புகளை நாம் சரிவர நிறைவேற்றியாக வேண்டும்.

எனவே, கேலி பேசுகிறவர்கள் தயவு செய்து நாங்கள் வெட்கப்படும் அளவுக்குக் கேலி பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'நாற்பது இடங்களில் டெபாசிட் இழந்தவர்களே' என்று பேசுங்கள்!

அப்போதுதான், எங்களின் ஆர்வம் மேலும் பெருகும்; திராணி மேலும் வளரும்!

வேகமாக ஓடுகிற குதிரையைக்கூட சவுக்கால் தட்டிக் கொள்கிறார்களே, எதற்காக?

''மேலும் வேகமாக ஓடக்கூடியது அந்தக் குதிரை,' என்பதினால்தான்!

அதேபோலத்தான், இன்று நம்மைப்பற்றிப் பேசும் கேலி மொழிகளும் நம்மை மேலும் வேகமாக ஓடச்செய்ய, அந்தச் சவுக்கடிபோல பயன்பட வேண்டும்.

பெரியார் கேலி பேசுகிறார் என்றால், அது கேலி அல்ல! 'என்னிடத்தில் பாடம் பெற்றும் பதினைந்துதானா? எத்தனை ஆற்றல் தந்தேன் — அப்படியிருந்தும் பதினைந்துதானா?' என்று கேட்பது போலத்தான் பெரியார், நம்மைக் கேலி செய்வது இருக்கிறது.

இதனால்தான் நான் அடிக்கடி கூறுகிறேன்—'ஒரே கம்பெனிதான்; லேபிள்தான் இரண்டு'—என்று!

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெற்ற வெற்றியின் தன்மை குறித்து, தலைமையுரை ஆற்றிய பொதுச் செயலாளர் அவர்கள் நன்றாக ஆராய்ந்து, தெளிவாக எடுத்துக் கூறினார்.

நாம் பெற்றுள்ள இடங்கள் 15-தான் என்றாலும், நாம் பெற்றுள்ள வாக்குகள் 17 இலட்சம் என்பதை அவர் விளக்கினார்.

நமக்கு 17 இலட்சம் பேர் இந்தத் தேர்தலில் ஆதரவு தந்திருக்கிறார்கள்.

நம்மைப் பற்றி மாற்றுக் கட்சிகள் அனைத்தும் எல்லாவிதமான கெட்ட பேச்சுக்களையும் பேசினர்; கெட்ட பிரச்சாரம் செய்தனர்; இழிமொழிகளை வீசினர்!

'இவர்கள் எல்லாம் நாஸ்திகர்கள்; இவர்கள் வெற்றி பெற்றால், ஆலயங்களில் ஆராதனை நடைபெறாது; ஆஸ்தீகம் அழிந்துவிடும்' — என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட பிறகும்தான், 'தி. மு. கழகத்தினர் நாஸ்திகர்கள் அல்ல; இவர்கள் ஆஸ்தீகத்தின் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களை மட்டுமே கண்டிப்பவர்கள்; அநியாயங்களை மட்டுமே அம்பலப் படுத்துபவர்கள்,' என்று உணர்ந்து, 17 லட்சம் பேர் ஆதரவு அளித்திருக்கின்றனர். 'இவர்கள் அழிவு வேலைக்காரர்கள் அல்ல என்பதை 17 இலட்சம் மக்கள் உணர்ந்து நமக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த கெட்ட பிரச்சாரத்தை எல்லாப் பெரிய கட்சிகளும்— நம்மை சிறுவர்கள் என்று ஏசுகிற எல்லாப் பெரிய கட்சிகளும்—நான் பெரிய கட்சிகள் என்று கூறுவதற்குக் காரணம் எல்லாப் பெரிய இடங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் என்பதினால்தான்—செய்தன; என்றாலும், நம்மீது நம்பிக்கை தெரிவித்திருப்பவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் பேர்.

'இந்து'வும், 'மித்திரனு'ம், 'விகடனு'ம் இன்று காட்டும் பரிவினை அன்றே காட்டியிருந்தால், 15 இடங்களை மட்டுமா பெற்றிருப்போம்?

17 இலட்சம் மக்களை நம் பக்கம் ஈர்த்திருக்கிறோம்; இப்படி ஈர்த்திருப்பதற்கு நம்மிடம் உள்ள சக்திதான் என்ன?

அடுக்கு மொழி பேசத்தானே இவர்களுக்குத் தெரியும்? அடுக்கு மொழி பேசிவிட்டால் ஆகுமா?—என்று கேட்டார்கள்; கேலி பேசினார்கள்! எங்களுக்கு அடுக்கு மொழி பேச மட்டுமேதான் தெரியும் என்றால், 17 இலட்சம் மக்களையும் ஈர்த்திருப்பது அந்த அடுக்கு மொழிதானா? அப்படியானால், 'அடுக்கு மொழி ஒரு சக்தி அல்ல,' என்று வேறு பேசினார்களே!

இங்கு எனக்கு முன்பு பேசிய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தோழர்கள் யாரும் அடுக்கு மொழி பேசவில்லை. ஆனால், நம்மைக் கேலி பேசுகிறவர்கள், பேசும் தடுக்கு மொழியைவிட நமது அடுக்கு மொழியே மேலானது என்று மக்கள் கருதுகிறார்கள் என்பதையாவது ஒப்புவார்களா?

எனவே நமது வெற்றி சாதாரணமான சம்பவம் அல்ல; தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்! நமது கழகத்தின் வரலாற்றில் புதிய பொறுப்பானதோர் கட்டம்!

நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற புதிய பொறுப்பினை நாம் நன்கு உணருவோம்.

நமது தோழர்கள் இனி தங்களுடைய பேச்சில், சூட்டினை குறைத்துக்கொண்டு ஒளியை அதிகரித்துக் கொள்ள வேண்டும்; வீரம் குறைய வேண்டும்; விவேகம் மிகவேண்டும்; நாம்

நல்ல பக்குவமும் பயிற்சியும் பெறவேண்டும்.

தீவட்டிக்கும்—டார்ச் விளக்கிற்கும், சம்மட்டிக்கும்-ஆபரேஷன் கத்திக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்தே இருக்கிறது! மிகுந்த பொறுப் புணர்ச்சியுடன் சட்டசபையில் நாம் பணியாற்றுவோம்!

எதிர்க் கட்சி எப்படி இருக்க வேண்டும் என்ற அரசியல் தத்துவம் பற்றி கேட்பார்களானால், நான் கூறுவதெல்லாம் 'எங்களைக் கேட்பதைவிட ஆளுகின்ற கட்சியைக் கேட்கவேண்டும்', என்றுதான் கூறுவேன். எதிர்க் கட்சி எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும், என்பதை ஆளும் கட்சியினர் நடந்து கொள்வதைப் பொருத்துத் தான் கூறமுடியும்.

ஆளுங்கட்சி அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டால் எதிர்க் கட்சியும் அவ்வாறே இருக்கும்.

ஏனோதானோ என்ற போக்கில் எடுத்தேன் ... கவிழ்த்தேன் என்று ஆளுங் கட்சி நடந்து கொண்டால், எதிர்க்கட்சியும் அதற்குத் தகுந்த மாதிரி தான் அமையும். சட்டசபையில் நல்ல விவாத உணர்ச்சியுடன் ஆளுங் கட்சியினர் நடந்து கொள்வார்களேயானால், நாமும் நமது பங்கினைக் கட்டாயம் சரிவரச் செலுத்துவோம்.

எதிர்க் கட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆளுங் கட்சிக்கு உண்டு என்ற கருத்தில்தான், ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறினார்—'எதிர்க் கட்சி அமைக்க உதவுங்கள்' என்று! இங்கு இப்போது எதிர்க் கட்சி உருவாகியுள்ளது. இந்த எதிர்க் கட்சியிடம் ஆளுங் கட்சியினர் எப்படி நடந்து கொள்ளப் போகின்றனர்?

எதிர்க் கட்சியினருக்கு தர வேண்டிய மரியாதையுடன் அவர்களை நடத்துவார்களா, ஆளுங் கட்சியினர்? அந்தப் பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் நடந்து கொண்டால் நாமும் பொறுப்புடன் காரியங்களை கவனிப்போம்.

சட்டசபைக் கட்சிக் கூட்டங்கள், மந்திரிசபைக் கூட்டங்

விசித்திர விஞ்ஞானம்!

பள்ளியில் விஞ்ஞான வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் முதலில் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

கேள்வி: நீ ஒரு மலையுச்சியில் இருக்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். உன்னிடம் ஒரு 'பராமீட்டரை'க் கொடுத்தால் மலையின் உயரத்தை எப்படிக் கண்டு பிடிப்பாய்?

மாணவன்: (யோசிக்காமல்) ஒரு கயிற்றிலே அந்த பராமீட்டரைக் கட்டி கீழே இறக்குவேன். பிறகு அந்தக் கயிற்றின் உயரத்தை அளந்தால் மலையின் உயரம் தெரிந்துவிடும்.

—'வால் ஸ்டீரிட் ஜர்னல்'

கள் என்ற அளவுடன் அவர்கள், விவகாரங்கள் பற்றிய விவாதங்களை நிறுத்திக் கொள்ளாமல், சட்டசபையின் விவாதத்திற்கு எல்லா விவகாரங்களையும் கொண்டு வந்து காரியமாற்றுவார்களேயானல், நாம் நிச்சயம் அந்த விவாதங்களில் பங்கு கொண்டு பயன் தரும் வகையில் நடந்து கொள்வோம்.

ஆளுங் கட்சியினர், தப்பித் தவறி நல்லது செய்தால் அவற்றிற்கு நிச்சயம் ஆதரவு தருவோம்; தவருன வழி சென்ருல், கண்டிக்கத் தவற மாட்டோம்.

இங்கே வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை உறுப்பினர்களைப் பாருங்கள்:

இவர்கள் எல்லாம் கல்லடியைத் தாங்கியவர்கள்! சொல்லடியை ஏற்றவர்கள்! சிறைவாழ்வை அனுபவித்தவர்கள்! ஏளனத்தையும் இழி செயலையும் கண்டு கலங்காதவர்கள்! நெறித்த புருவத்தை மறந்தவர்கள்! 'புன்னகைதான் கொள்கை வெற்றிபெற உதவும்,' என உணர்ந்தவர்கள்! நாட்டின் அருமையான செல்லப் பிள்ளைகள்! இவர்கள் ஒரு நல்ல பொறுப்பான எதிர்க்கட்சியினராகப் பணியாற்ருவிட்டால் வேறு யார்தான் பணியாற்றுவார்கள்? நான் அடிக்கடி கூறுகிற—'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'—என்ற மொழிப்படி, இப்போதும் கூறுகிறேன்...: இவர்கள் நல்ல எதிர்கட்சியினராக முடியாவிட்டால் வேறு யார் ஆக முடியும்?'—என்று!

இப்போது சிலர் ஒரு யோசனை சொல்லுகின்றனர்; வடநாடு — தென்னுடு; ஆரிய—திராவிடப் பிரச்சினைகள் இரண்டையும் விட்டுவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் வளரலாம் என்று கூறுகிருர்கள்.

அழகி ஒருத்தியை மணமுடித்துத் தருகிறேன்; ஆனல் ஒரு நிபந்தனை — முதலில் நீ செத்துவிட வேண்டும்; பிறகு உனக்கு அழகியை மணமுடிக்கிறேன் — என்பதுபோலிருக்கிறது, இந்த யோசனை! இதற்கு இணங்குவதற்கு அண்ணுதுரை ஒன்றும் அரசியல் அப்பாவி அல்ல!

எதிர்க் கட்சியிலிருந்தாலும், வேறெந்தக் காரணத்திற்காகவும் நாங்கள் கழகத்தின் மூலாதாரமான இலட்சியத்தையும், கோட்பாடுகளையும் விட்டுவிடமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஆரிய கலாச்சாரம், திராவிடப் பண்பாடு என்ற வெவ்வேருன இரண்டு கலாச்சாரங்கள் நிலவுவதை யாரும் மறுக்கவில்லை. திராவிடப் பண்பாட்டினைக் கொண்டவர்கள் — அவர்களது மதம், சாதி எதுவாயினும்— அவர்கள் திராவிடர்களே!

நாங்கள், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று தான் வைத்திருக்கிருேமே தவிர, 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்றுகூட அல்ல!

நாங்கள், ஆரியரும் திராவிடரும் என்று பிரித்துப் பேசி

துவேஷம் வளர்ப்பதாகக் கூறு கிருர்களே, அவர்களுக்குச் சொல்லுவேன் — நாங்கள் முறைகளைக் கண்டிக்கிருேமே தவிர, நபர்களை அல்ல! இந்த உண்மையை, நான் 'ஆரிய மாயை' என்ற நூல் எழுதிய தற்காகச் சர்க்கார் என்மீது தொடுத்த வழக்கில் தீர்ப் பளித்த நீதிபதிகளே ஒப்பியிருக் கிருர்கள். மூன்று உயர் நீதி மன்ற நீதிபதிகள் ஒப்பியுள்ள இந்த உண்மை நாடறிந்த ஒன்ருகும்.

திராவிடம் என்ருல் 'தீரா விடம்' என்று பேசிய ஆச்சாரி யாரே இப்போது 'திராவிடத் தைக் காப்போம்,' என்று எழுதியுள்ளார்.

திராவிடத்தைக் காப்போம் என்ருல், யாரிடமிருந்து காப் பது? எப்படிக் காப்பது? திரா விடத்திற்கு இப்போது என்ன ஆபத்து என்று விளக்க வேண் டாமா?

பாகிஸ்தான் வேண்டுமென்ற போது, 'பாரதத்தைத் துண்டு போடுவதா? பசுவை வெட்டு வதா?'—என்று பேசிய ஆச்சா ரியார், பின்னர் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்த ஒரே தலைவரானுர்!

'வேட்டியில் பொத்தல் விழுந்து விட்டால் அதனை இரண்டாகக் கிழித்துவிடு; உப யோகமான யோசனை' என்று கூறினுர்; 'பாகிஸ்தான் கோரு வது சரியே—தரத்தான் வேண் டும்' என்று துணிந்து பேசி னுர்.

அதுதானே இது — என்று, நமது நெஞ்சு அடித்துக் கொள் கிறது!

எனவே ஆச்சாரியார்—அந் தப் பெரியவர்—நல்லவர்—திரா விடத்தை யாரிடமிருந்து காப் பது? எப்படிக் காப்பது? ஆபத்து என்ன?—என்பதை யெல்லாம், எனது பேதைநெஞ் சத்தை இன்னும் அலைக்கழிக்க

ருசியான மைனு!

மனைவியைப் பிரிந்து பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தார் கணவர். மனைவியின் பிறந்த நாள் வந்தது.

அதற்காக அந்தக் கணவர் 500 ரூபாய் கொடுத்து 11 மொழிகள் பேசும் ஒரு அழகிய மைனுக் குருவியை வாங்கி அதை பிறந்தநாள் பரிசாக மனைவிக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு ஒரு நாள் தொலை பேசி மூலம் மனைவியிடம் இப் படிக் கேட்டார் :

''நான் அனுப்பிய மைனுக்குருவி எப்படி இருந்தது?''

''மிகவும் சுவையாக இருந்தது. கோழிக் கறியைவிட மிக ருசி என்ருல் தெரிந்து கொள்ளுங்களேன்!''

—அந்தக் கணவனுக்கு மயக்கம் வந்து விட்டது!

விடாமல், விளக்கிக் கூற வேண்டுகிறேன்.

இந்தத் தேர்தல் நேரத்தில் நாடெங்கிலும் நமது தோழர்கள் முழக்கிய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய நாதம், ஆச்சாரியாருக்கு காற்றினிலே வரும் கீதமாகக் கேட்டு, அவர் நெஞ்சில் நுழைந்துவிட்டது என்பதையே அவரது, 'திராவிடத்தைக் காப்போம்' என்ற எழுத்துக்கள் கூறுகின்றன.

சட்டசபையில், நாங்கள் அமர்ந்திருக்கிறோம் என்றால், எங்களுக்குப் பின்னால் 17-இலட்சம் மக்களின் இதயம் இருக்கிறது என்பதை ஆட்சியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இனிய குரலில் ஒருவன் பாடினால் — உண்மையில் அவன் குரல் இனிமையாயிருந்தால்— அவனுக்கு முறைப்படி சங்கீதம் கற்றுத் தருவார்கள்; அவனும் கற்றுக் கொள்வான்.

அதுபோல நாம், இதுகாறும் தன்னந் தனியாகப் பாடிக் கொண்டிருந்தோம். முறைப்படி சங்கீதம் கற்றுக் கொண்டவன் பக்க வாத்தியங்களுடன் பாட வேண்டியிருப்பதுபோல சபைக்குச் செல்லும் நாம் பக்க வாத்தியங்களுடன்தான் பாடுவோம்.

பாடுவோருக்குப் பக்க வாத்தியங்கள் துணையாக இருக்க வேண்டும். ஆனால் பக்க வாத்தியங்கள் பாடும் பாட்டை விட்டு விலகிச் செல்லுமானால் பாடகனின் தனிக்குரல் தனித்து ஒலிக்கத்தான் செய்யும்.

கழகத் தோழர்களுக்கு நான் மீண்டும் கூறுவேன். நமது வெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நம்மைப்பற்றி ம. பொ. சி. கூட ஆராய்ந்து கூறியிருக்கிறார். 'இவர்கள், பாண்டிநாடு— சேர நாடு — சோழ நாடு இங்கெல்லாம் வெற்றிபெறவில்லை; தொண்டை நாட்டில்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்'— என்று.

உண்மைதான்; அவருக்கு நான் ஒன்று கூறுவேன்— 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து,' என்ற பழமொழியை அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். பாண்டி நாடு—சேர நாடு— சோழ நாடு என்று கூறியவர்கள், தொண்டை நன்னாடு என்று அடைமொழியுடன் கூறியிருக்கிறார்கள். சான்றோருடை தொண்டை நாட்டில் தி. மு. கழகத்திற்கு வெற்றி கிட்டியுள்ளது. இந்தச் சான்றோர், இதர நாடுகளிலும் வெற்றியைத் தேடித் தருவார்கள்.

நமது தேர்தல் அனுபவங்கள் நமக்கு மேலும் வளர்ச்சியைத் தேடித் தரவும், பொறுப்போடு காரியமாற்றவும் நிச்சயம் பயன்பட வேண்டும்.

[சென்ற 31—3—57 அன்று சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

“ நீங்க எவ்வளவு கொடுக்கப் போறீங்கன்னு சொல்லுங்க சாமி; நான் அதுக்குள்ள நயா பைசா எவ்வளவுன்னு பாத்து சொல்றேன் !”

தமிழர் சமூக

தமிழர் சமூக வாழ்க்கையின் பல கூறுகளைப் பற்றி யறிஞர் பலர் ஆய்ந்தெழுதுகின்றனர். ஆதலின் தலைப்புப் பெரியதாகத் தோன்றினும் சில கூறுகளைப் பற்றிச் சில கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாம்.

1

தெளிவாக அறிந்துகொள்ள முடியாத மிகப் பழங்காலத்தே தமிழர் தமிழ் நாட்டெல்லையுள கப்படாத பல நிலமக்கட் சமூகங்களொடு ஓரளவு தொடர்பு கொண்டுவிட்டனர். ஈழ நாட்டார், வடுக நாட்டார், வட வடுகராகிய ஆரியர், மிலேச்சர், யவனர் இவர்களைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். தமிழ் நாடு கடல் கடந்து பல நாடுகளொடும் வணிகத் தொடர்புடையதாயிருந்தது. பற்பல நாட்டார் இந்நாட்டில் வந்து வதிவாராயினர்.

தமிழ் மூவேந்தர் திறம்படப் 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' ஆய எல்லாமுடையராய் அரசோச்சிப் பிறநாடுகளிலும் நன்கறியப்பட்ட காலமே கி.மு. நான்காம் நூற்றூண்டுக்கு முன்னதாதல் வேண்டுமென்பது அசோகன் கற்றூண்களாலும் காரவேலனது ஹாதிகும்பக் கல்வெட்டாலும் அறியப்படுவதொன்று.

இன்று நமக்குக் கிடைத்திருப்பனவாய பழைய இலக்கண விலக்கியங்களால் இந்நிலையுடையராயிருந்தனர் தமிழர் என்பது தெளிவாகிறது.

இப்பழ நூல்களையாய்ந்தால் இதனினும் முன்னைய நிலையும் ஓரளவு அறியப்படுதலாம்.

அகத்திணை பற்றிய இலக்கணக் குறிப்புக்களால் ஐந்திணைப்பிரிவும் அவ்வத்திணைக்குரிய முதலுரிகருப் பொருள்களுமறிகிறோம். கருப்பொருளில் ஒரு பகுதியாக மக்களைக் கூறுங்கால், தலைமக்கள் நிலை மக்களென்ற பகுதியினரை யறிகிறோம். ஆயினும் அவ்வத்திணைக் குரிய அரசராவாரைப்பற்றி யேது மறிந்திலோம்.

நாட்டு நடப்பு மாறிக் காலப் போக்கிலமையினும் அது நூலகத்திடம் பெறல் மிகத் தாழ்த்தேயாம்.

தமிழ்நாடு சிறு சிறு கூறுகப் பிரிந்து அவ்வக் கூற்றிலுள்ள பெரும்பான்மையான மக்களின் தலைவரே சாதித் தலைவராக அரசோச்சிய காலத்தை இலக்கணக் குறிப்புகளறிவிப்பனவாகலாம். முடியுங்குடையுமிலராய்ச் சாதித்தலைவர்களாய் மழவர் கோமான், களவர் கோமான் முதலியோர் நாட்டுத் தலைவராயாண்டமையைச் சங்க நூல்களாலும் அறிகிறோம்.

இவ்வாறு மழவர், களவர் முதலிய பல சாதி அல்லது குடியினர் தத்தங் குடிக்குத் தனியாட்சி கொண்டு விளங்கிய நெடுங் காலத்தின் பின்னரே அவர்கள் குடியாட்சியைச் சிறுகச் சிறுகத் தேய்ந்து முடிவேங்

வாழ்க்கை

தர் கோலோச்சும் நிலை முதிர்ந்திருக்கும்.

சங்க நூல்களாலறியப்படும் வேளிர் முதலியோருடைய ஆட்சிக் கூறுகளைத் தமிழ்நாட்டுப் படத்திற் குறித்து நோக்கின் போக்கு வரவுக்கு வசதியில்லாத மக்கள் நிலைத்துள்ள கோடி கொடங்குகளில் கி. பி. நான்காம் நூற்றாண்டுவரை இக்குடியாட்சிகள் நிலைத்து வலுவொடு திகழ்ந்தமை பெறப்படும்.

எனவே தமிழர் சமூகம் முதலில் குடித்தலைவரது ஆட்சியுள் நின்று, பின்னர் குடித்தலைவர் முடியரசர் இவ்விருவராலும் ஆளப்பெற்றுக் காலப் போக்கில் வேத்தாட்சிக் குட்பட்டமையைக் காண்பதற்கு இது வரை கூறியவை இடந்தரலாம்.

2

ஆட்சிவகை இவ்வாறு மாறி வளர்ந்தமை போன்றே சாதிப் பிரிவுகளும் வளர்ச்சியுற்றிருக்கலாம்.

அகத்திணை மக்களாகப்பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளரிவர், குறிக்கப்பட்டிலர். எனினும், தொல்காப்பியத் திலே இவர்களைப் பற்றிய குறிப்புக்களுள்ளன.

வளைவு, சுற்று என்று தமிழ் மக்கள் தங்கள் குடியிருப்புக்கும் பெயர் தந்துள்ளனர். பெரியதாக வளைத்துக் கட்டப்பட்டு ஒரு குடியினர் வாழுமிடமே வளைவெனப் பட்டது போலும். ஒருவனைச் சுற்றிலும் வதியும் இயல்பினர் அவன் சுற்றமேபோலும். இவ்வாறான தனி நிலை மாறிப்பொருள் தேடல், இடம் நாடல் முதலிய காரணங்களால் சமூகம் சார் நிலை பெற்றுப் பெருகியபோது சில தொழில்களிற் சில கூட்டங்கள் திறன் பெற்றோராய்த் தனி நிலை பெற்றிருப்பர்.

அந்நிலையிற் பழ நூல்களிற் பாணன், பறையன், பொருநன், மறவன் என்ற தொழிற்றிறக் கூட்டங்களைக் காண்கிறோம். அவர் தம்முள்ளே கொள்வன கொடுப்பனவாய உறவால் தனிச்சாதியினராயினர். வடவாரியர் தொடர்புற்றான் பார்ப்பனர் முதலிய பிரிவுகள் இங்கே கொள்ளப்பட்டிருக்க வேண்டும். சங்க நூல்களில் பார்ப்பனரைப் பற்றிய குறிப்புக்கள் அவர்கள் இந்நாட்டிற் குடியேறி இந்நாட்டுப் பழக்க வழக்க மரபுகளில் முழுத் தோய்வு பெறாதாராகவே காட்டுகின்றன.

‘நால்வேத நெறி; யூபம், நட்டு, வேள்வி செய்தல் முதலியன பிறர் கலப்பாற்றமிழர் சமூகமறிந்தபோதும் மேற்கொண்டபோதுமே ‘நால் வருண’ வெண்ணமும் வளர்ந்திருக்கும். சங்கப் பழம் பாடல்களில் இந்நிலையின் நாட்டில்

திரு. அர. சு. நாராயணசாமி நாயுடு, எம். ஏ.
செந்திக் குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.

நுழைந்தமை குறிக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நால் வருணங்களும் அவற்றுள் முதலது இரண்டாமது மூன்றுமது முதலிய தெளிவான குறிப்புகளுங் காண்கிறோம். எனவே கி. மு. ஆறும் நூற்றாண்டளவில் 'நால் வருண'ப் பகுப்பு தெளிவான உருப்பெற்று விட்டது நம் நாட்டிலெனக் கொள்ளலாம்.

வலங்கை யிடங்கைச் சாதிகள், அநுலோமர், பிரதிலோபர் பிரிவுகள் முதலியனவும் பத்தாம் நூற்றாண்டு முதலறியப் படுவனவாம்.

ஒரு கூற்றிலே யுறைந்த மக்கள் ஒரு சாதியினரா யிருந்தது மாறிப் பலபட விரிந்து பல வகை யுயர்வு தாழ்வுகளொடு சமூகங் காட்சியளிக்கத் தொடங்கிற்றுப் பத்தாம் நூற்றூண்டில்.

அதன்பின் தெலுங்கர், கன்னடர் முதலியோர் நாட்டிற் பல்கினர். புதிய பிரிவுகள் வளர்ந்தன. இன்றோ எண்ண முடியாத பல சாதிகளாகத் தமிழர் சமூகம் பிரிந்து கிடக்கிறது.

முகம்மதியர் கிறிஸ்தவர் முதலியோர் தொடர்பும், அதன் முன்பே ஜைன பௌத்த மத நுழைவும் பிற்காலத்தில் மேலைப் புலக் கருத்துக்களின் அறிவுமாகிய இவை பரவி யிச் சாதிகளின் பிரிவுக் கொடுமையைத் தலைதட்டிவைத்துள்ளன.

தமிழ்நாடு காலப்போக்கில் விளைந்த அறிவியல் வளர்ச்சியாலும் வேறு பல மாறுதல்களாலும் நிலப்பரப்பு மொழிவகையிவை தேய்ந்து ஒரில்லமெனத் தோற்றமளிக்கு மிக்காலம் தமிழரெல்லோரும் ஒரே சாதியின ரென்று கொள்ளத்தக்க பெருநிலையினைச் சிறுகச் சிறுக வளர்ந்தே தீருமென நம்பலாம்.

3

பாண்டிய நாட்டிலே சங்கங்கள் உயர்ந்தன வென ஒரு நம்பிக்கை தமிழரெல்லோரிடையும் பரவியுள்ளது. வேந்தரும் வேளிரும் கற்றுத் துறைபோய புலவர்களைச் சுற்றமெனப் பேணியமை பழநூல்கள் காட்டும். இசையுங் கூத்தும் வல்ல பாணர் பொருநரிவரும் பெருமதிப்புக் குரியராய் வாய்ந்தமையும் அந்நூல்களாலறியலாம்.

இந்நாட்டு மக்களது கல்வி நிலையைப் பற்றிக் கருதுவோம்.

சங்க வரலாறு, இலக்கண நூற்பாயிரங்களிலே கூறப்படும் ஆசிரியரிலக்கணம், மாணவரிலக்கணம் இவற்றை நோக்கின் தமிழர் சமூகம் கல்வியறிவு பெற்றுத் தழைத்ததொன்றே யென வெண்ணலாம். மதுரைக் கணக்காயனர் முதலிய பெயர்களாலும்; இறையனாரகப் பொருளுரை ஆசிரியர் மாணவர்க்குரைத்து வழிவழியாக வந்து பின்ன ரெழுதப் பெற்றதென்பது கொண்டும், 'கந்தனைய னையவர்கலை தேரிகழகங்'கள் பற்றி நம் பெரும் புலவர்கள் குறிப்பது கொண்டும் தமிழர் கல்வி கற்று ஆராய்ச்சியுடையராயிருந்தன ரெனலாம். கல்வியின் பெருமையையும் கற்க வேண்டுவதன் இன்றியமையாமையும் குறளேயன்றி வேறு சில சங்கப் பாட்டுகளுங் கூறுகின்றன.

எனினும், பழ நூல்கள் தவிரப் பிற சான்றுக ளெல்லாம் நம்மை வேறொரு வழியில் எண்ணத் தூண்டுகின்றன.

கி. பி. ஆறும் நூற்றூண்டு வரை தமிழ்க் கல்வெட்டுகள்

காணக் கிடைத்தில. தமிழ் நாட்டிற் காணப்படும் பழைய குகைக் கல்வெட்டுக்கள் பிராமி யெழுத்தி லெழுதப்பட்டுள்ளன. இவையும் பெரும்பாலும் ஜைன பௌத்தச் சார்பான குறிப்புக் களேயே உடையன.

ஜைனம் பௌத்தம் வேத நெறியாகிய இவை தமிழர் சமூ கத்திற் பரவியபின் தமிழ் நாட்டில் சமஸ்கிருதக் கல்வி பற்றிய பல குறிப்புக் களுள்ளன. தமிழிலக்கண இலக்கியம் புலமை யூட்டும் பள்ளிகளைப் பற்றியெதுவுந் தெரிந்திலது.

இத்தகைய மோகம் தமிழர் சமூகத்திலேற்படக் காரண மென்ன வென்பதை யறிஞர் கள் ஆராயவேண்டும். காரண மெதுவாயினும் தமிழர் சமூகத் தின் தனிநிலையை-பெருநிலையை இக்கல்வி யேற்பாட்டுக் குறை பாடு குறைத்த தென்பதி லைய மில்லை.

'நால் வருணப் பிரிவு' நமக்கு மேற்றதே யென்று கொண்ட பின் தமிழர் முதல் வருணத் தார்க்கே கற்கு முரிமையையும் விட்டுக் கைகட்டி நின்றனர் போலும். கல்வியேற்பாடுகளில் இருந்த குறையையும் எதிர்த் துக் கம்பர், சேக்கிழார், செயங் கொண்டார், புகழேந்தி போன்ற பெரும்புலவர் இடைக் காலத்து விளங்கியமை தமிழர் சமூகக் கல்வியவாவின் உறுதி யையே காட்டத் தக்க சான்று போலும்.

தமிழர் சமூகத்தில் மேற்படி களில் நின்றோர் மட்டுமின்றிக் கீழ்ப்படியினருந்தங் கொள்கை களை யறியவேண்டுமென்று ஜைன பௌத்த வைதிகர்கள் கருதிய காலத்தேதான் அக் கொள்கைகள் நிரம்பிய தமிழ் நூல்கள் வெளிவரலாயின.

காஞ்சியிலே கடிகையிருந் தது. கி. பி. நான்காம் நூற் றூண்டிலேயே அது விளங்கி யமை தெரிகிறது. அங்கே பார்ப்பனரே வேத முதலியன கற்றனர்.

காவேரிப் பாக்கத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டில் வைணவப் பிராமணர் படிப் புக்கு வசதியளிக்கும் மட மிருந் தது.

பதினொன்றும் நூற்றூண்டில் நாகைக் கடிகை ஆசிரியர் பல ரையுடையதாய் மாணவர் பல ருக்கு உண்டியு முறையுளு முதவி வேத சாத்திரக் கல்வி யளித்தது. இந்நூற்றூண்டில் இம்முறையி லமைந்த படிப் பிடங்கள் எண்ணூயிரம், திருபுவனி, திருமுக்கூடல் முத லிய இடங்களிலும் அமைந்

அடக்க சுபாவம்!

"பிரிட்டிஷ்காரர்கள்தான் உலகத்திலேயே மிகவும் அடக்கமான மக்கள். இதை எல்லோரும் ஒத்துக் கொள் கிறார்கள். அமெரிக்கர்களாகிய நீங்கள் நல்லவர்கள்தான். இருந்தாலும் அடக்கமான சுபாவத்தில் எங்களை யாரும் மிஞ்ச முடியாது, என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்; நீங்கள் கூறுவதை ஒப்புக் கொள்கிறேன், அதுதான் எங்கள் அடக்க சுபாவம்!"

—"கேப்பர்ஸ் வீக்லி'

திருந்தன. திருவாடுதுறையில் சமஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத நூற் கல்வி கற்பிக்கும் பள்ளி யொன்றிருந்தது.

தமிழ் மன்னர் இப்பள்ளிகட்கு இறையிலியாக நில முதலியதோடு வேறு பலவகையில் ஊக்கினர்.

பதினேழாம் நூற்றுண்டில் மதுரையில் மதம் தத்துவமிவைபற்றிப் பத்தாயிரம் மாணவர்கள் பயின்று வந்தனராம். எல்லோரும் பிராமணர்களாம்.

எனவே, களப்பிரர் குழப்பத்துக்குப்பின் சம்ஸ்கிருதக் கல்வி தமிழ்நாட்டில் தழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பல்லவரும் பாண்டியரும் சிறக்கச் செய்தனர். பதினெட்டாம் நூற்றுண்டுவரை யிந்நிலையில் பெரு மாறுதலில்லை.

தத்தம் தொழிலைத் தங்குல வித்தையாகப் பயில்தல், விழா முதலிய சிறப்புக் காலங்களில் கற்றோர் எடுத்துரைப்பனவற்றைக் கேட்டு நல்லன வறிதல் என்ற நிலையில்தான் தமிழர் கல்வி யிருந்தது.

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வதிந்து தமிழ் நாட்டுக் குடிகளாகி விட்டவர் எவரெனினும் தமிழரே. அவர் தமிழர் சமூகத்துக்குப் புறம்பானவரல்லர். முன்பொரு காலத்தே பலப்பல காரணங்களால் ஆரியர், தெலுங்கர், கன்னடர், ஹிந்துஸ்தானிகள், மராத்தியர்கள் என்போர் இங்கே வதிந்தும் இங்கே வேர் கொள்ளாது தாமரையிலை மேற்றண்ணீர் போல இருந்திருக்கலாம். அக்காலமும் அந்நிலையும் மலையேறி விட்டன. பழந் தமிழர், வந்து குடியேறியோர் கொள்கைகளை யொப்பித் தம்மைத் தாழ்த்திக் கொண்டு நின்றனர். தமிழ் நாட்டரசரும் சம்ஸ்கிருத கல்விக்குத் தழைப்பு நல்கி ஊரார் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்றிருந்தனர். நல்லறிவு இந்தப் பொய்க்கோட்டைகளைத் தகர்த்தெறிந்துவிட்டது.

இன்று இங்கு நிலைத்து வாழ்வோர் எல்லோருந் தமிழர். இவருள் உயர்வு தாழ்வுகளும் படைத்துக் கொள்ளப்பட்டனவே அவையும் பட்டு மாய்ந்து கொண்டிருக்கின்றன. படிப்பதற்குரியோர் இன்னவர் என்னும் வரையறையிருந்த இடந் தெரியாது அழிந்து போயிற்று.

எனவே 'எல்லோரும் தமிழர்' என வெழுச்சியோடெண்ணித் தமிழ்மொழி பேணி வளர்த்துத் தமிழாராயோர்க்கு வேண்டுவதாய பரந்து பட்ட அறிவு முழுமையுந் தமிழிலே கற்றுப் பழம் பாடங்களை வரலாற்றுணராது இன்றும் தமிழுரையாளும் நிலையுடைய தமிழர் தம் மொழியைத் 'தானே வளரும்' என்று விட்டு ஊரார் மொழிகளை 'யூட்டிவளர்ப்பர்' எனின் அது தகுவதாமா? நம் நாட்டுக் கல்வியின் முன்னைப் பழம் பெருமையையும், பின்னுண்டாய இழிவையுங் கண்டு எண்ணிப் பார்த்துத் தக்கதே செய்வராக.

இக்கட்டுரை காட்டிய தமிழரசு பற்றிய குறிப்புக் காட்சிப் பழம் பொருளே. தமிழர் சமூகச் சாதி பற்றிய குறிப்பும் கல்வி பற்றிய குறிப்பும் எதிர் காலத்துக் கேற்ற நற்பாடங்களை யேற்க வுதவுவனவாக.

[மதுரைத் தமிழ்ச் சங்க பொன் விழா மலர், 1956]

எது? ★

என்?

★ எப்படி?

விடைகள்

1. இல்லை; நாக்கை மட்டும் வெளியே இழுத்து அதில் சர்க்கரையையோ அல்லது வேம்பையோ தடவிப் பாருங்கள்; சுவை தெரியாது. வாய்க்குள் சென்ற பிறகு வாயின் உட்பகுதியிலுள்ள மற்ற சுரபிகளுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகுதான் சுவை தெரியும்.

2. மனிதன் தனக்குப் பிடிக்காத உணவுப் பொருளை துப்பிவிட முடியும். ஆனால் பாம்பு வாய் வைத்த பொருள்களை விட முடியாது. அதன் பற்கள் அனைத்தும் தொண்டையை நோக்கி இருப்பதால் எந்தப் பொருளும்; எவ்வளவு கஷ்டப் பட்டாலும் வெளியே வர முடியாது. அதனால்தான் சில சமயம் முட்டாள்தனமாக பெரிய பொருள்களை விழுங்க முயற்சி செய்து: அவை வெளியிலும் வர முடியாமல்: உள்ளேயும் செல்ல முடியாமல் முடிவில் அந்தப் பாம்பே செத்து விடுவதுமுண்டு.

3. மின்சார விளக்கைக் கண்டுபிடித்த மார்கோனி "நாம் எவ்வளவு நேரம் தூங்குகிறோம் என்பதல்ல; எவ்வளவு நன்றாகத் தூங்குகிறோம் என்பதுதான் முக்கியம்" என்கிறார்.

எச். ஜி. வேல்ஸ் எட்டுமணி நேரத் தூக்கமாவது வேண்டும் என்கிறார். ஆனால் பிரபல மோட்டார் மன்னரான ஹென்றி போர்டு ஒரு நாளில் ஒன்பது மணி நேரத்தைப் படுக்கையில் கழிப்பார். ஆனால் அதில் ஆறு மணி நேரம் தான் தூங்குவார்.

மாவீரன் நெப்போலியன் சேர்ந்தாற்போல் இரண்டு மணி நேரம் தூங்கிவிட்டு; மறுபடியும் தொடர்ந்து 22—மணி நேரம் பணிபுரிவான்.

"ஆணுக்கு ஆறு மணி நேரம் தூக்கமும்; பெண்ணுக்கு ஏழு மணியும். முட்டாளுக்கு எட்டு மணியும்" என்கிறது ஆங்கிலப் பழமொழி! பொதுவாக நல்ல நிலையில் இருக்கும் மூளைக்கு நான்கு மணி நேர தூக்கம் கூட போதுமானதே!

4. நிச்சயம் முடியும். இத்தாலியிலே குழாய்கள் மூலம் நீராவியைக் கொண்டு சென்று லோர்டெடாரெல்லோ என்னும் இடத்திலுள்ள ஆலைகளை இயக்குகிறார்கள்!

5. உண்டு. இப்படி உலோகங்கள் 'களைப்படை'வதனால்தான் சில சமயம் என்ஜின்கள் நல்ல நிலைமையிலிருந்தும்கூட விமான விபத்துகள் ஏற்படுகின்றன. அதனால்தான் பொறி இயல் வல்லுணர்கள் பாலங்கள் போன்றவைகளுக்கெல்லாம் ஆயுள் காலத்தையே நிர்ணயித்து விடுகிறார்கள்!

6. பைபிள்!

7. பொதுவாக சூட்டினால் பொருள்கள் விரிவதும்; குளிர்ச்சியினால் சுருங்குவதும் இயற்கை. இதுபோன்றே மரச் சாமான்களில் இரவு நேரங்களில் சுருக்கம் ஏற்படும்போது 'கிரீச்' ஒலிகள் ஏற்படுகின்றன!

கழுதையும் குதிரையும்!

உலகப் புகழ் பெற்ற பிரஞ்சுக் கதாசிரியரான அலெக்ஸாந்தர் டூமாசுக்கு ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது.

தான் ஒரு நாடகம் எழுதத் திட்டமிட்டிருப்பதாகவும், அதை டூமாஸ் அவர்களோடு சேர்ந்து கூட்டாக எழுத தான் விரும்புவதாகவும், ஒருவன் எழுதியிருந்தான்.

டூமாஸுக்குக் கோபம் வந்தது. அநாமதேயமான ஒரு ஆசாமி, புகழ் பெற்ற தமக்குக் கூட்டாளியாவதா?

"எப்படி ஐயா, கழுதையையும், குதிரையையும் ஒரே வண்டியில் பூட்டலாம் என்ற துணிச்சல் வந்தது?" என்று அந்த நாடகாசிரியருக்கு டூமாஸ் பதில் எழுதினார்.

அவனும் விடவில்லை. உடனே, "எப்படி ஐயா, என்னைக் குதிரை என்று சொல்ல உமக்குத் துணிச்சல் வந்தது?" என்று கேட்டு டூமாஸுக்கு எழுதினான்.

இதைப் படித்ததும் டூமாசின் கோபமெல்லாம் தணிந்தது. "உமது நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை, என் அருமைத் தோழனே, உடனே அனுப்பி வையும்" என்று அவனுக்குப் பதிலும் போட்டார்.



மாக இருந்து வந்தது. இதனாலேயே புலவர் பெருமக்கள் செந்தமிழ், பசுந்தமிழ், நற்றமிழ், முத்தமிழ், மென்றமிழ், இன்றமிழ், பழந்தமிழ், இளந்தமிழ், கன்னித்தமிழ் எனத் தமிழ் மொழியின் பல்வகைப் பண்புகட்குக் காரணப் பெயரிட்டு வழங்கினது போலவே, 'கலைத் தமிழ்' எனவும் வழங்கி

கலைத் தமிழ்ச் செல்வம்

எதற்கெடுத்தாலும் இன்று 'கலை, கலை' எனப் பேசப்படுகிறது. நடிப்புக்கலை, எழுத்துக் கலை, பேச்சுக் கலை, அச்சுக்கலை, குடும்பக்கலை—எனக் கலையின் புகழ் பலவகையிலும் பகரப்படுகிறது. இது கலைக்குத் தலைக் கிழமை யுடைய காலம் எனல் மிகையாகாது.

'தமிழில் கலை யிருந்ததில்லை. காரணம், கலை என்னும் சொல் தமிழ்ச் சொல்லன்று. 'கலா' என்னும் வடசொல்லே, ''ஆவீறெல்லாம் ஐயீருமே'' என்ற இலக்கண விதிப்படி தமிழில் 'கலை' என வழங்குகிறது' என்பார் தமிழிலக்கண மறியார். கல்வி, கற்கை, கற்பு, கற்றல் என்னும் தொழிற் பெயர்கள் போல, கலை என்பதும் தமிழ்த் தொழிற் பெயரே. கல்-ஐ-கலை. ஐ—தொழிற் பெயர் விகுதி. எனவே, கலை என்பது தனித் தமிழ்ச் சொல்லேயாகும்.

தமிழ் மொழி ஒரு காலத்தே எல்லாக் கலைகட்கும் இருப்பிடயுள்ளனர். ''தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால் அமுதம்'' என்பது குமரகுருபரர் வாக்கு.

''ஆய கலைகள் அறுபத்து நான்கு'' என்னும் கம்பர் கூற்று, ''எண்ணெண் கலையோர் இரு பெரு வீதியும்'' என்னும் இளங்கோவடிகள் கூற்றால் உறுதிப் படுகிறது. எண்ணெண் கலை— அறுபத்து நான்கு கலை. அறுபத்து நான்கு கலைகள் இன்ன இன்ன என விளங்கவில்லை எனினும், 'அவர்கள் கூறிய கலை என்ன கலை' என்று ஐயுற வேண்டியதில்லை. இன்று மேனாட்டினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள அறிவியற் கலைகளேயாகும். இதற்குத் தமிழ் நூல்களிற் சான்றுகள் பல உள்ளன.

சிலப்பதிகார அடைக்கலக் காதையில் இளங்கோவடிகள் மின்சாரம் போன்ற எதனாலேயோ தானே இயங்கும் (ஆட்டோமேட்டிக்) பொறிகள் பல கூறுகின்றார். அது

★ புலவர் குழந்தை ★

இன்று ஒரு வியத்தகு செயலாகத்தோன்றவில்லை. இன்று கண்டுள்ள அறிவியற் பொறிகள் கண்டு பிடிக்குமுன் அது வியப்பாகத் தோன்றி யிருக்கலாம். மதுரையின் புறமதிலில் பகைவர் அணுகாவண்ணம் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்தனவே அப்பொறிகள்! அவை, வளைவிற் பொறி, கருவிரல் ஊகம், ஆண்டலையடுப்பு, சென்றெறுசிரல், பன்றிப் பொறி, அரிதூற்பொறி முதலியன. இவை, பகைவர் மதின்மேலறத் தொடங்கினதும், தாமே சென்று தாக்கும் தன்மை வாய்ந்தவை. இவற்றின் விசை சுவற்றிடை பொருத்தப்பட்டு, பகைவர் மதிலைத் தொட்டதும் அவை தாக்கின போலும். இளங்கோவடிகள் அரசிளங்குமரர் ஆகையால், தமது அரண்மனை மதிலில் இருந்த அப்பொறிகளை அறிந்தவரே யாவர்.

சீவகன் தாயாகிய விசயை என்பாள், ஒரு மயிற் பொறி மீதேறி அரண்மனைக்கு உள்ளிருந்து பறந்து சென்றதாக சீவக சிந்தாமணி கூறுகிறது. அப்பொறியை இயக்கவும் அவள் கற்றுக் கொண்டனளாம்.

தன் மகள் வாசவதத்தையை உதயணனுக்கு மணஞ் செய்து கொடுக்க எண்ணிய அவந்தி நாட்டரசனை பிரச்சோதனன் என்பான், வேழப்பொறி ஒன்று செய்து, அதனை யடக்கும் பொருட்டு உதயணனைத் தன்னகருக்கு வரவழைத்தனன் என்கின்றது பெருங்கதை (உச்சைக் காண்டம்). அவ்வேழப் பொறி, அரக்கு முதலியவற்றாலும் மரங்களாலும் செய்யப் பெற்றதாம். அது உதயணன் முன்பு மேகம்போற் பிளிறிக் கொண்டு சென்றதாம்.

அதே பெருங்கதையில், உதயணன் அமைச்சனான யூகி என்பான், யவனத் தச்சரால் (கிரேக்கர்) செய்யப்பட்ட பொறியூர்தி (வானூர்தி) யொன்றை யூர்ந்து கொண்டு சயந்திநகர் சென்றனன் என்னும் செய்தி காணப்படுகிறது. இது இன்றுள்ள வானூர்தி போன்ற ஒரு வகைப் பொறியூர்தியேயாகும் என்பது,

" யவனப்பாடி ஆடவர் தலைமகன்
கையிற் புனைந்த கழிநன் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவனூரும்
தேரினன்ன செலவிற் றாகி
யாவரு மறியா அரும்பொறி யாணியின்
இருப்புப் பத்திரம் இசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கனி பெற்றுப்
பூணி யின்றியும் பொறியி னியங்கும்
மாண்வினை வையம் மனத்தி னெய்ப்பக்
கடுப்புந் தவிர்ப்புங் கண்டன னாகி"
"எந்திர வூர்தி"
'வித்தக ஆணி வேண்டுவயின் முறுக்கி
விண்ணகத் திழிந்து விமான மேறி"
" ஆணி வையம் ஆரிருள் மறையப்
பூணி யின்றிப் பொறி[illegible]சக் கொள்இ"

(பெருங்கதை: 2—9)

என்னும் குறிப்புகளால் பெறப்படும் (பூணி—எருது, குதிரை.)

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழ மன்னன் பகைவரூர்ந்து வந்த வானூர்தியொன்றை வீழ்த்தினானென மணிமேகலை கூறுகிறது. புராணங்களில், தேவர்கள் மலரூர்தியூர்ந்தனர் எனவும், சிவன் முப்புரமெரித்தான் எனவும் கூறுவன இதனை நினைப்பூட்டுவனவாகும்.

இவையெல்லாம் வெறும் பொய்க் கூற்றல்ல. மெய்ம்மையைப் பொய்ம்மையாக இவ்வாறு புனைந்துரைக்க இயலாது. இன்றுள்ள நீராவிக் கப்பல், நீர் மூழ்கிக் கப்பல், தடையின்று, வானூர்தி, ஊரி போன்றவை அன்றும் இருந்தனவே.

ஐந்தாண்டுகளுக்கு முன் மேனாட்டறிஞர் ஒருவர், ஆமைப் பொறியொன்றை அமைத்துள்ளதாகச் செய்தித்தாள்களில் வெளிவந்தது. அது மின்சார மூளையுடன் அமைந்தது; தானாகவே நடத்தல், தூங்குதல், உணவுண்ணல், சொன்னபடிக் கேட்டல் முதலிய செயல்கள் செய்கின்றதாம். இத்தகையதே பிரச்சோதனால் அமைக்கப்பட்ட வேழப்பொறியும்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்து வந்த தமிழர்கள் ஒருவகைக் கல்லைக் கொண்டு கப்பலோட்டி வந்தனர் என்பது வியத்தகு செய்தியாகும். அக்கல் தண்ணீரைத் தன் பக்கம் நின்று மிகுந்த வன்மையுடன் தள்ளும் ஆற்றல் உடையது. கப்பலின் பின்பக்கத்தில் நீரைத் தொடும்படி இக் கல்லைக் கட்டித் தொங்க விட்டால் தண்ணீரைத் தள்ளிக் கப்பலை ஓட்டுமாம். கிளுவமரத்தின் பாலை ஒரு குச்சியில் எடுத்து தண்ணீர்மேல் போட்டால், அது தண்ணீர்மேல் உள்ள தூசுகளைத் தள்ளி அப்புறப்படுத்துதலை நோக்குக. இன்னும், ரேடியம் போன்ற ஓர் ஒளிப் பொருளை அவர்கள் கண்டறிந்திருந்தனரெனவும் கூறுகிறார்கள்.

இன்று வானொலியால் உலக நிகழ்ச்சிகளை அறிவது போலவே, அன்றும் ஒருவகைக் கருவிமூலம் வெளிப்பேச்சைக் கேட்டு வந்தனர். ஆகாயவாணி, அசரீரி என்பன அவ்வானொலியின் வடமொழிப் பெயர்கள். அதன் தமிழ்ப் பெயர் இறந்துவிட்டது போலும்!

இதுகாறும் கூறியவற்றால் இன்றுள்ள அறிவியற் கலைகளும் பிறகலைகளும் தமிழர்க்குப் புதியனவல்ல. எல்லாக் கலைச் சொற்களும் தமிழில் இருந்தன. காலச் சுழலால் உண்டான அறியாமைப் புழுதியால் அவை மறைந்து கிடக்கின்றன. எனவே, புதிதாகக் கண்டுள்ள, கண்டுபிடிக்கும் எந்தக் கலையையும் எளிதில் தமிழில் ஆக்கிக்கொள்ளலாம். அதற்காக அயல்மொழியிடத்தில் கையேந்திக் கடன் கேட்டு நிற்க வேண்டியதில்லை.

பழைய சட்டமன்றத்தினர் தமிழை ஆட்சி மொழியாக்கித் தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர். அதை எல்லா ஆட்சித்துறையிலும் நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு, தமிழைக் கல்விமொழியும் ஆக்கித் தமிழ்த்தாயை பழையபடி அரியணையேற்றித் தமிழ் மக்களின் முழு நன்மதிப்புக்கும் உரியவராவது புதிய சட்ட மன்றத்தினர் கடமையாகும்.

இன்று கல்வித்துறையில் கலைகள் எனக் கொள்ளப்பட்டது பத்து. அவையாவன: கணக்கு, பூதநூல் (பிசிக்ஸ்), வேதிநூல் (கெமிஸ்டிரி), பயிர்நூல், உயிர்நூல், உடல்நூல், நிலநூல், நலவழி (சுகாதாரம்), வேளாண்மை, வரலாறு என்பன. இவற்றுள் பூதநூலும் வேதிநூலுமே இன்று புதியவை. மற்றவை எட்டும் எல்லா மொழிகட்கும் பொதுவானவையே. எடுத்துக்காட்டாக, உடலின் எல்லா உறுப்புக்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் ஒன்றுக்குமேல் இருப்பதோடு, கண்ணுக்குத் தெரியாத மூலம், கொப்பூழ் முதலிய இடங்களிலுள்ள உள்ளுறுப்புக்களின் பெயர்களும் உள்ளன.

பயிர்த் தொழிலுக்கே பெயர் பெற்ற தமிழர் தாய்மொழியாகிய தமிழிருக்க, மரம் செடி கொடிகளுக்கும் அயல்மொழிச் சொற்களைக் கடன் வாங்க வேண்டுமென்பது புதுமையேயாகும். இனிப் பழந் தமிழர் பூதநூலறிவும், வேதிநூலறிவும் உடையவராயிருந்தனர் என்பது பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தால் விளங்குகின்றது.

இன்று அரசினரால் வெளியிடப்பட்டிருக்கும் 'கலைச் சொற்கள்' என்ற நூலின் துணைகொண்டே உயர்நிலைப் பள்ளிக் கலை நூற்கள் எழுதப்படுகின்றன. அக்கலைச் சொற்கள் தமிழ் வேர்ச் சொல்லிலிருந்து ஆக்காமல், வடமொழியே தமிழ் முதலிய மொழிகட்கெல்லாம் மூலமொழி என்னும் தப்பான கொள்கையால், வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து ஆக்கப்பட்டுள்ளன. தமிழ் வேர்ச் சொல்லைக் கொண்டு கலைச் சொல்லாக்குவதே தமிழ் மொழிக்கு ஏற்புடைத்தாகும்.

ஒருசிலர் ஆங்கிலச் சொற்களை அப்படியே கொள்ளலாமென்கின்றனர். ஆங்கிலமோ, வடமொழியோ, தமிழ்மொழிக்குப் புறம்பானவை—அயல்மொழி—யாகையால் தமிழ்மொழியோடுஒத்திசையா. எடுத்துக்காட்டாக: 'நாடு' என்னும் அழகிய தமிழ்ச் சொல்லிருக்க, 'கண்ட்ரி' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'ராஜ்யம்' என மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 'கண்ட்ரி' என்னும் ஆங்கிலச் சொல்லும், 'ராஜ்யம்' என்னும் வடசொல்லும் தமிழோசைக்குச் சிறிதும் பொருந்தாமை அறிக.

நடந்த பொதுத் தேர்தல் சுவரொட்டி யொன்றில் பார்லிமென்ட் என்பதை ஹௌஸ் ஆப் தி பீப்பிள்ஸ் எனத் தமிழில் எழுதப்பட்டிருந்தது. அது எத்தனை வாக்காளத் தமிழ்ப் பொதுமக்களுக்குப் புரிந்திருக்கும்?

இம்முறையைக் கைவிட்டு, தனித் தமிழார்வமும், தமிழ் மொழித் தேர்ச்சியும், ஆராய்ச்சிவன்மையும் உள்ள தமிழறிஞர் குழுவொன்றை ஏற்படுத்தினால், எல்லாக் கலைகட்கும் எளிதில் தமிழ்ச் சொல்லாக்கிக் கொள்ளலாம். இதற்கு, உயர்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் உள்ள எல்லாத் தமிழாசிரியர்களின் துணை இன்றியமையாதது. இனிக் கலைப்பாட ஆசிரியர்களும் இவ்வாக்க வேலையில் தனிக் கருத்துச் செலுத்துதல் வேண்டும்.

இனி தமிழ்க் கலைச்சொற்கள் படித்தவர்களிடம் பயிலுவதை

விடப் பெரும்பாலும் படியாத நாட்டுப்புறத் தமிழ் மக்களிடந்தான் மிகுதியாகப் பயில்கின்றனர். சொல்லாக்கக் குழுவினரும், ஆங்காங்கேயுள்ள தமிழார்வமுள்ளவரும் நாட்டுப்புற மக்களை யணுகினால், அவர்களிடம் கொஞ்சம் உரையாடினால் ஏராளமான தமிழ்க்கலைச் சொற்கள் வெளியாகும். இம் முறையை இதுவரை யாரும் மேற்கொள்ளவில்லை. பயிர்த் தொழில், வரலாறு, உடற்கூறு, நலவழி, பயிர்நூல் போன்ற கலைச் சொற்கள் புதிதாக ஆக்க வேண்டியதில்லை. பழந்தமிழ்ச் சொற்கள் நிரம்பவுள்ளன. அவற்றைத் திரட்டும் வேலையில் ஈடுபட்டால் போதும்.

'புலியூர்க் கோட்டத்து ஈக்காட்டுக் கூற்றத்து' எனவரும் கல்வெட்டினால், கோட்டம் (ஜில்லா), கூற்றம் (தாலூகா) என்னும் நிலநூற் கலைச்சொற்கள் பெறப்படுகின்றன. பகுதி (பிர்க்கா), வட்டம் (சர்க்கிள்), உட்கோட்டம் (டிவிஷன்), ஊரகம் (கிராமம்) என்னும் நிலநூற்கலைப் பழந்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலிற் பழுதென்னை? இவை பண்டு வழங்கிய சொற்களேயாம். உட்கோட்டத்திற்கு - பல்கூற்றம் என்பது கல்வெட்டுச் சொல்.

இன்றுள்ள கணக்கு, அறிவியல் (சையன்ஸ்), சமூக அறிவுநூல் என்பவை எளிய இனிய தமிழில் எழுதாமல், பேருக்குத் தமிழ் என்று வைத்து, வடமொழி, ஆங்கிலம் அரபி, இந்தி முதலிய பல மொழிச் சொற்கள் கொண்ட கதம்பக் கடுநடையில் எழுதப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு எளிதில் புரியாததோடு, மொழியறிவைப் பெறமுடியாமல் செய்கின்றது. தமிழைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களையும் மாணவர்கள் அத்தகு கதம்ப மொழியில் படிப்பதால், எளிய இனிய தமிழில் எழுத முடியாமல் தமிழ்ப் பாடத்திலும் முயற்சிக்குத் தக்க மதிப்பைப் பெறமுடியாமல் போகின்றனர்.

ஆங்கில நூலிலோ, ஆங்கிலக் கட்டுரையிலோ தமிழ் முதலிய அயல் மொழிச் சொற்களைக் கலந்து, ஆங்கில எழுத்தில் எழுதுவது எங்ஙனம் வழக்கத்தில்லையோ, அது குற்றமாகக் கருதப்பட்டு வருகிறதோ, அங்ஙனமே தமிழில் அயற் சொற்களைக் கலப்பதும் என்பதைத் தமிழ்க் கலைச் சொல்லாக்கக் குழுவினரும் ஆள்வோரும் உணரவேண்டும்.

உயர்நிலைப் பள்ளியில் தமிழிலே எல்லாப் பாடங்களையும் படித்த மாணவர்கள், கல்லூரி சென்றதும் அவற்றை ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருப்பதால், திறமையான மாணவர்களும் கல்லூரித் தேர்வில் தோல்வியடைய ஏதுவாகிறது. எனவே, உடனடியாகக் கல்லூரியிலும்தமிழைக் கற்பிக்கும் மொழியாக்கி, அக்கலை நூல்களையெல்லாம் தனித் தமிழில் எழுதி, தமிழ் மாணவர்களின் எளிய வெற்றிக்கு வழிகோலுவதோடு, தமிழ்மொழியையும் வளர்த்துத் தமிழ் மக்களின் நன்மதிப்புக்கு உரியவராவது, புதிதாகப் பதவியேற்கும் ஆள்வோரது நீங்காக் கடமையாகும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றனர். வாழ்க தமிழ்க் கலை! வளர்க தமிழ் மொழி! ஃ

கதவை யாரோ மெதுவாகத் தட்டும் சப்தம்கேட்டு டாக்டர் விழித்துக் கொண்டார். அருகில் படுத்திருந்த அவரது மனைவி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கவே, டாக்டரே எழுந்துபோய் கதவைத் திறந்தார்.

வெளியில் நின்றுகொண்டிருந்த கிழவியை அவரால் முதலில் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

''எஜமான் உடம்புக்கு ஏதோ வந்து விட்டது...நீங்கள் உடனே வர முடியுமா...டாக்டர்?...''என்று கிழவி குரல் கொடுக்கவே டாக்டர் அவளை யாரென்று புரிந்து கொண்டார். அவருக்கு மிகவும் நெருங்கிய நண்பரான ஒருவரின் வீட்டைக் கவனித்துக் கொள்ளும் காரியஸ்தி அவள்!

அந்த நண்பருக்கு வயது ஐம்பத்தைந்துக்கு மேலாகிறது. அடிக்கடி அவருக்கு இருதயத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இப்போது அதைப்போல் ஏதாவது வந்திருக்கும்; உடனே போய்ப் பார்க்க வேண்டியதுதான் என்று டாக்டர் முடிவு செய்தார்.

''கொஞ்சம் இருந்தால் உன்னுடன் நானும் வந்து விடுகிறேன்''-டாக்டர் இப்படியாகச் சொன்னவுடன்,

''மன்னிக்க வேண்டும் டாக்டர்...இன்னும் இரண்டு நண்பர்களை நான் அழைத்துவர வேண்டியிருக்கிறது!'' என்று ஒரு வியாபாரியின் பெயரையும், ஒரு எழுத்தாளரின் பெயரையும் அவள் டாக்டரிடம் சொன்னாள். அவர்களை டாக்டருக்கும் தெரியும்.

''அவர்களை ஏன் நீ போய் கூட்டிக்கொண்டு வரவேண்டும்?''

''எஜமான் அவர்களையும் ஒரு தடவை பார்க்க வேண்டுமென்றார்.''

''ஒருதடவை பார்க்க வேண்டுமென்றாரா?''

''ஆமாம்!''

''நண்பர்களுக்காக அவர் சொல்லி அனுப்புகிறார். அப்படியென்றால் அவருக்கு தன் முடிவு தெரிந்துவிட்டது போலிருக்கிறது...அவரது அருகில் இப்போது இருப்பது யார்?''

''ஜான்தான்! வேறு யாருமில்லை,'' என்று கூறிவிட்டு கிழவி விடைபெற்றுக் கொண்

மூலம் - ஆர்தர் செக்நிட்சலர் — தமிழில்: **அதிகமான்**

டாள். ஜான் வீட்டு வேலைக்காரன்!

டாக்டர் தமது அறைக்குள் சென்று வெளியே புறப்படுவதற்கு உடை அணிந்து கொள்ள ஆரம்பித்தார். அவர் மனதிலும் வருத்தம் இடம் பெறுமல் இல்லை. அவரோடு நெருங்கிப் பழகிய ஒரு நண்பர் இப்போது அவரையும் அவர் நண்பர்களையும் விட்டுப் பிரிகிறார். அதை அவரே உணர்ந்து எல்லா நண்பர்களுக்கும் சொல்லி அனுப்புகிறார்...வாலிபம்தான் எவ்வளவு சீக்கிரம் விடைபெற்றுக் கொள்ளுகிறது?

டாக்டர் தன் நண்பர் வீட்டை அடைந்து கதவைத் தட்டினார். கதவைத் திறந்த வேலைக்காரன் முகத்தில் களையில்லை.

"என்னப்பா, நான் வந்தும் பிரயோஜனம் இல்லையா?" என்றார் டாக்டர்.

"ஆமாங்க...எஜமான் இறந்து பதினைந்து நிமிஷத்திற்கு மேலே ஆகப்போகிறது!" என்றான் அந்த நன்றியுள்ள வேலைக்காரன்.

பெருமூச்சு விட்டுக் கொண்டே டாக்டர், கல்யாணம் செய்து கொள்ளாமலேயே தன் வாழ்நாளைக்கழித்து விட்ட அந்த தனது நண்பரின் அறைக்குள் புகுந்தார்.

பிணமாக நண்பர் படுக்கையில் கிடந்தார். அவரது வாய் லேசாகத் திறந்திருந்தது. கண்கள் மூடியும் மூடாத நிலையில் இருந்தன. முகம் வெளிறிப் போயிருந்தது. திருப்திகரமற்ற தோற்றம்; மேலே ஒரு வெள்ளை சால்வையைப் போர்த்தியிருந்தான் வேலைக்காரன். படுக்கையின் அருகில் நின்றவாறே டாக்டர், தனது நண்பரைப் பற்றி எண்ணிப் பார்த்தார். எவ்வளவோ நாட்கள் நண்பருடன் டாக்டர் கழித்திருக்கிறார். நட்பிலக்கணத்திற்கு ஓர் உதாரணமாக விளங்கிய அவர்களைப் பற்றிப் பேசாதவர்கள் கிடையாது ஒரு காலத்தில்! சமீபத்தில்அவர்கள் தத்தம் அலுவல்களின் காரணமாக அநேக நாட்கள் சந்திக்கவில்லை என்றால் நட்பு குறைந்தா போய்விடும்? டாக்டர் வருத்தப்பட்டதில் அர்த்தம் இருக்கிறது!

வெளியில், தூரத்தில் ஏதோ வண்டி வரும் சப்தம் கேட்டது. ஜன்னலுக்கருகே போய் நின்றார் டாக்டர்.

வெளியிலிருந்த வேலைக்காரன் மீண்டும் உள்ளே வந்தான்.

"என்ன காரணம், இவரது திடீர் மாறுதலுக்கு?" என்றார் டாக்டர் அவனிடம்.

நண்பரது உடல் நிலையைப் பற்றி வேலைக்காரனுக்குத் தெரியாமலா இருக்கும்?

"வழக்கமாக வரும் நெஞ்சடைப்புதான்; கூடவே அதிக வலியும் இருந்ததாம். எழுந்து நடந்து கொண்டே இருப்பார்-சோர்ந்து மீண்டும் படுக்கையில் விழுவார்—வலி தாளாமல் மறுபடியும் எழுவார்-கடைசியில் படுத்தவர் எழுவேயில்லை," என்றான் வேலைக்காரன்.

டாக்டர் மௌனமாகத் தலையை ஆட்டி வைத்தார்.

அதற்குள் வெளியே வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. டாக்டர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். வியாபாரி நண்பர் இறங்கினர். டாக்டரின் முகத்தை கேள்விக்குறிதோன்ற பார்த்தார். டாக்டரின் முகத் தோற்றத்திலிருந்து அவருக்கு முடிவு தெரிந்துவிட்டது. இருந்தாலும் முதலில் அவராலும் அதை நம்ப முடியவில்லை. அருமையான நண்பர் ஒருவரை இழக்க எப்படி மனம் துணியும்? 'விடுவிடெ'ன்று உள்ளே வந்தார். டாக்டரிடம் வந்தவுடன்,

''எப்படி நடந்தது?'' என்ருர். வியாபாரியான நண்பருக்கு பதில் சொல்லி ஆக வேண்டுமல்லவா? வேலைக்காரன் சொன்னதை அவரிடம் திருப்பிச் சொல்லிவிட்டு,

''நான் நேரத்தில் வந்திருந்தால்கூட ஒன்றும் செய்திருக்க முடியாது...ஏனெனில் எல்லாவற்றிற்கும் காலம் கடந்துவிட்டது,'' என்று முடித்தார் டாக்டர்.

''இப்படி நடந்திருக்கும் என்று என்னல் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. ஒரு வாரத்திற்கு முன்புதான் நான் இவரை நாடகக் கொட்டகையில் கண்டேன். அவருடன் விருந்துண்ண வேண்டும் என்று நினைத்து, அதை நடைமுறையாக்குவதற்குள், அவர் வழக்கம்போல் தனது இரகசிய... இன்னும் சொல்லப் போனல் மர்ம...வேலையைக் கவனிக்கப் போய்விட்டார்,'' என்ருர் வியாபாரி.

இன்னொரு வண்டி வாயிலருகில் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. வியாபாரி ஜன்னலருகில் சென்ருர். ஆனல் நண்பரான எழுத்தாளர் வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்தவுடன் அங்கிருந்து பின்வாங்கினர், தனது முகத்தோற்றத்தால் கூட நண்பருக்கு அந்தத் துக்ககரமான செய்தியைச்சொல்லக் கூடாதென்று! டாக்டர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். அது அவர் வழக்கம். வியாபாரி பேசத்தொடங்கினர்.

''இறந்த நண்பரோடுஎனக்கு எத்தனை வருடங்களாகப் பழக்கம் தெரியுமா? ...அது எனக்கே சரிவரத் தெரியாது...''— டாக்டர் பேசவில்லை.

''இறந்து கிடக்கும் பிணத்தைப்பார்த்துகூட அதிகநாட்களாகின்றன. என் தகப்பனர் இறந்து பதினன்கு வருடங்களாகின்றன அல்லவா? அவரைத்தான் நான் பிணக்கோலத்தில் பார்த்தேன்!''

''ஏன், உங்கள் மனைவி?'' என்ருர் டாக்டர்.

''உயிர் போகு முன்னல்தான் நான் அவளுடன் இருந்தேன். அதற்குப் பிறகு அவளைப் பார்க்கவில்லை.''

எழுத்தாளர் உள்ளே வந்து, மற்ற இருவரோடு கை குலுக்கினர். அவரது க ்கள் படுக்கையில் கிடந்தபிணத்தைக் கண்டவுடன், அருகே சென்ருர்.

''அவர் முந்திக் கொண்டார்'' என்று அவர் வாய் முணுமுணுத்தது. அவர் மனதில், நெடு நாளாகவே நெருங்கிய நண்பர்களில் யார் முதலில் செத்து வைப்பார்கள் என்ற பிரச்சினை தோன்றிக் கொண்டிருந்தது. அதன் முடிவு இப்போது தெரிந்துவிட்டதல்லவா?

சினிமாவில் காதல்!

சினிமா ஸ்டூடியோ ஒன்றில் ஒருநாள் காதாற் காட்சி படமாக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

வினடிகள் ஓட ஓட காதலன் காதலியை காற்றும் புகு வதற்கு இடைவெளியின்றி அணைத்துக் கொண்டான்.

டைரக்டர் இதைப் பார்த்தார். "மிஸ்டர் கதாநாயகரே! சென்சார் இதை எல்லாம் அனுமதிக்காது!" என்ருர்.

கதாநாயகியைத் தழுவியவாறே ஹீரோ சொன்ஞர்: "அப்படியானல் கேமராவை நிறுத்திவிட்டு லைட்டையும் அணைத்து விடுங்கள்!"

காரியஸ்தி தன் எஜமானன் படுக்கையருகில் உட்கார்ந்து மௌனமாக கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தாள்.

"நம்மிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு வரவழைத்திருப்பாரா?"—வியாபாரி மற்ற நண்பர்களிடம் கேட்டார்.

டாக்டர் லேசாகப் புகையை வெளியில் விட்டுக்கொண்டே, "என்னைக் கூப்பிட்டதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. ஏனெனில் நான் டாக்டர் — அவர் உயிரைக் காப்பாற்றி இருக்க முடியும்!" என்ருர்.

வியாபாரி பேசாததால்,

"உம்மிடம் வியாபார சம்மந்தமாகவும், சொத்துக்களை என்ன செய்வது என்பது சம்மந்தமாகவும் பேசலாம் என்று அவர் உம்மைக் கூப்பிட்டிருக்கலாம் அல்லவா?" என்ருர் டாக்டர். தொடர்ந்து வியாபாரியும் தனது தலையை ஆட்டி வைத்தார், இருக்கலாம் என்ற எண்ணத்தில். எழுத்தாளர் இன்னும் பிணத்தின் அருகேதான் நின்று கொண்டிருந்தார். அவர் மனதில் எவ்வளவு போராட்டங்களோ! காரியஸ்தி அங்கிருந்து எழுந்து போய் அடுத்து நடக்க வேண்டியதைக் கவனிக்க ஆரம்பித்தாள். அவள் போனவுடன் வியாபாரி டாக்டரிடம் நெருங்கி வந்து,

"டாக்டர், நம்மைவிட சமீப காலத்தில் இந்த எழுத்தாளர் இறந்துபோன நமது நண்பருடன் அதிகமாக நெருங்கிப் பழகி இருக்கிருர். ஒரு வேளை, நம்மை ஏன் இங்கு வரவழைத்தார் என்பதற்கு எழுத்தாளர் காரணம் தெரிந்து வைத்திருந்தாலும் இருக்கலாம்," என்ருர். ஆனல் எழுத்தாளரிடம் அதை எப்படிக் கேட்பது? அவர்தான் இன்னும் தன் நண்பருக்கான இறுதி மரியாதையைச் செலுத்திக் கொண்டிருக்கிருரே!

டாக்டருக்கிருந்த பொறுமை வியாபாரிக்கு இருக்கவில்லை. எழுத்தாளரிடம் நெருங்கினர். லேசாகக் கனைத்தார். அதைப் புரிந்து கொண்டவர்போல, எழுத்தாளரும் பேச ஆரம்பித்தார்:

"மூன்று தினங்களுக்குமுன் நானும் இறந்து கிடக்கும் இந்த நண்பரும் உலாவ வெளியில் போனேம். அவர் எதைப்பற்றி பேசினர் தெரியுமா? சமீபத்தில் தான் செய்யவிருக்கும் அயல்

நாட்டுப் பிரயாணத்தைப்பற்றியும், வெளிநாடுகளிருந்து தான் இங்கு கொண்டுவர இருக்கும் விஞ்ஞான பொருள்களைப்பற்றியும் ஓயாமல் பேசினர். தன்னுடைய மரணத்தைப்பற்றி அவருக்கு நினைக்க நேரமேது? அதனால் அதைப் பற்றி அவர் பேசவில்லை! குறிப்பிட்ட ஒரு வயதுக்கு வந்துவிட்டால் மனிதன் சாவைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவான் என்பது இவர் விஷயத்தில் பொய்த்து விட்டது.'' என்று அவர் முடிக்கவும், டாக்டர் தமது இருக்கையை விட்டு எழுந்தார். அவருக்கு அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. டாக்டருடைய வேலை என்ன? அது முடிந்து விட்டால், அங்கிருக்க வேண்டியதில்லைதான்! ஆனல் நண்பர் என்ற முறையில் இவ்வளவு நேரம் இருந்தாகி விட்டது. இனி கிளம்பவேண்டியதுதான். டாக்டர் பக்கத்து அறைக்கு வந்து உட்கார்ந்தார், காரியஸ்தியிடம் சொல்லி விட்டுப் புறப்படலாம் என்ற எண்ணத்தில்! விட்டார்களா மற்ற நண்பர்கள்? பின்னலேயே வந்து விட்டார்கள். எழுத்தாளர் மிகவும் ஜாக்கிரதையாகக் கதவை மூடிக் கொண்டு வந்தார், தாங்கள் பேசுவதை யாரும் கேட்கக் கூடாது என்ற எண்ணத்தில்!

உள்ளே வந்தவுடன்,

''உங்கள் யாருக்காவது இதைப்பற்றி ஏதாவது தெரியுமா?'' என்ருர் வியாபாரி.

''எதைப் பற்றி?''-இது எழுத்தாளர்.

''அதுதான் நம்மை இங்கு வரவழைத்திருக்கிருரே நண்பர், அதைக்குறித்து!''

எழுத்தாளர் ஒரு நிமிடம் யோசித்தார். பிறகு, ''உயிர் பிரியும்போது நெருங்கிய நண்பர்கள் யாராவது இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் நம்மை அவர் வரவழைத்திருக்கிருர் போலிருக்கிறது. அவர் எண்ணம் கடைசியில் கைகூடப் போவதில்லை என்பதை அவரே அறிந்தாரோ என்னவோ!'' என்று கூறி எழுத்தாளர் முடித்தார்.

''அவருக்கு ஒரு காதலி இருந்தாளாமே......அவள் வரவில்லையா?'' என்ருர் வியாபாரி.

''காதலியா?''-வியப்பு மேலிட எழுத்தாளர் கேட்டார். மற்ற இருவரும் பதில் பேசவில்லை. ஆக எழுத்தாளருக்கும், அங்கு அவர்களை வரவழைத்திருந்ததற்குக் காரணம் தெரியவில்லை என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

டாக்டர் அங்கிருந்து புறப்பட்டு விடவேண்டும் என்று ஒவ்வொரு விநாடியும் நினைத்தார்...ஆனல் ஏனே தனது இருக்கையைவிட்டு எழ அவருக்கு மனம் வரவில்லை.

அதற்குள் இறந்துபோன நண்பரின் வேலைக்காரன் ஜான் அங்கே வந்தான், ஈமக்கிரியைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை எஜமானனின் நண்பர்களிடம் கேட்கலாம் என்று.

டாக்டர் அவனிடம், தங்கள் நண்பர் இறக்கும் தருவாயில் அங்கு வரவழைத்ததற்கு என்ன காரணம் என்று கேட்டார். அதற்கு ஜான் சொன்ன பதில் விசித்திரமாக இருந்தது.

''ஏழு ஆண்டுகளுக்குமுன் எஜமான், தான் இறக்கும் தருவாயில் தனது மூன்று நண்பர்களும் தனது படுக்கை அருகில் இருக்க வேண்டுமென்று விரும்பினர். அதனல்தான்...இன்று

அவருக்கு நினைவு தப்பிவிட்டதை அறிந்தவுடன், நானே உங்களை வரவழைத்தேன்,'' என்றான் ஜான்.

''இவ்வளவுதானா?........நான் நினைத்தது சரிதான்,'' என்றார் எழுத்தாளர்.

''இல்லை......இதோ இதைப் பாருங்கள்!'' என்று கூறிக் கொண்டே ஜான் தன் பையிலிருந்து ஒரு நீண்ட காகித உறையை எடுத்து டாக்டரிடம் நீட்டினான். ''எனது நண்பர்களுக்கு...'' என்று விலாச மெழுதப்பட்டிருந்த அதை டாக்டர் உடைத்தார். உள்ளிருந்த கடிதத்தை எழுத்தாளர் எடுத்துக் கொண்டார். அவருக்கு எல்லோரையும்விட ஆவல் அதிகமாக இருந்தது.

''நண்பர்களுக்கு என்றிருப்பதால், நானே இதைப் படிக்கிறேன்,'' என்று கூறிவிட்டு எழுத்தாளர் படிக்க ஆரம்பித்தார். மற்ற இருவரும் கவனமாகக் கேட்டார்கள். ஜான் வெளியே போய்விட்டான்.

''எனது அருமை நண்பர்களே! சற்று நேரத்திற்கு முன்னால் நான் உயிர் நீத்தேன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்கள் என் அருகே கூடி இந்தக் கடிதத்தைப் படிக்க ஆயத்தமாகிவிட்டீர்கள். ஏதோ உணர்ச்சி வசப்பட்டு இதை எழுதிவிட்டேனே தவிர, இதை நீங்கள் படிக்க வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக விரும்பவில்லை. ஏனெனில் இந்தக் கடிதத்தினால் எனக்கு எந்த விதமான நன்மையும் இல்லை. ஆனால் உங்கள் வாழ்க்கையில் விஷம் கலந்துவிடும் இக்கடிதம் என்று எனக்குத் தெரியும்!''

''விஷமா?'' என்றார் டாக்டர்.

''சீக்கிரம் படி,'' என்றார் வியாபாரி.

எழுத்தாளர் மேலே தொடர்ந்தார்:

''எந்த வேகத்தினால் உந்தப்பட்டு நான் இக்கடிதத்தை எழுதுகிறேன் என்றே எனக்குத் தெரியவில்லை. மேலும் இதனால் ஏற்படும் விளைவுகளை நான் நேரில் இருந்து பார்க்கவும் மாட்டேன். அதனால் எனக்கு மனத் திருப்தி என்பதே இல்லை. அதைவிட நான் விளைவுகளைப் பார்க்காமல் இறந்து விடுவேன் என்பதனால் மனதில சந்தோஷந்தான் தாண்டவமாடுகிறது.

''என் உள்ளத்தின் அடித்தளத்தில் எந்த விதமான கெட்ட எண்ணமும் இல்லை என்பதை நான் உங்களுக்கு முன்பே சொல்லி விட்டேன். உண்மையை இன்னும் விளக்கமாகச் சொல்லப் போனால், நீங்கள் என்னை எப்படி நேசித்தீர்களோ, அதே முறையில்நானும் உங்களை நேசித்தேன். உங்கள் எல்லோரிடத்திலும் நான் மரியாதை கொண்டிருந்தேன். சமயத்தில் உங்களை பல விஷயங்களில் கேலி செய்தேன் என்றாலும் ஒரு நாளாவது உங்களில் யாரையும் வெறுத்தவனல்ல! பின் எதனால் இந்தக் கடிதம் எழுதப்பட்டது? எனது மனப் பாரம் குறைய வேண்டும் என்பது ஒரு காரணமாக இருக்கலாம். நீங்கள் என்னை நேசித்தீர்கள்...நான் உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன்; அதை நீங்கள் அறிய வேண்டும் என்பது இன்னொரு காரணமாக இருக்கலாம்!''

வியாபாரிக்குப் பொறுமை இல்லை. கடிதத்தை எழுத்தா

ளர் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டார்.

''முடிவைப் படியுங்கள்'' என்றார் டாக்டர். வியாபாரி மேற்கொண்டு படிக்க ஆரம்பித்தார்:

''ஆனால் நடந்ததை என்னால் இனி மாற்ற முடியாது நண்பர்களே......மாற்ற முடியாது! உங்கள் மனைவிமார்கள் மூவரும் எனது ஆசை நாயகிகளாக இருந்தார்கள்! என்னை மகிழ்வித்தார்கள்!''

வியாபாரி கடிதத்தைத் திருப்பிப் படித்தார். கலவரத்தோடு டாக்டர் கேட்டார்—

''என்னது?''

''கடிதம் ஒன்பது வருடங்களுக்கு முன் எழுதப் பட்டிருக்கிறது,'' என்றார் வியாபாரி.

''சரி, மேலே படியுங்கள்,'' என்றார் எழுத்தாளர்.

''நான் அவர்களிடம் கொண்டிருந்த நட்பு பலதிறப்பட்டது. ஒருத்தியுடன் நான் பல மாதங்கள் மிகவும் சிநேகமாக இருந்தேன். நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளும் அளவுக்கு உறவு போனது. ஆனால் கல்யாணம் நடக்கவில்லை. இன்னொருத்தியிடம் காதலைவிட எனக்கு வெறிதான் அதிகமாக இருந்தது. அவளும் அப்படியே! மூன்றாமவளும் நானும் உயிருக்குயிராகப் பழகினோம். ஏன்; இறப்பதாக இருந்தால்கூட இருவரும்தான் இறப்பது என்று முடிவு செய்திருந்தோம். அந்த உறவு அப்படி! நான்காமவள் எனக்கு துரோகம் செய்துவிட்டு இன்னொருவனுடன் குலாவப் போய்விட்டதால் நான் வாழ்க்கையில் அதிருப்தி அடைந்தேன். ஐந்தாமவளோடு ஒரே ஒரு தடவை தான் உறவாடினேன். இவ்வளவுதான் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது! பெருமூச்சு விடாதீர்கள் நண்பர்களே!...நான் உறவு வைத்துக் கொண்டபோது வாழ்க்கையில், தான் அப்போதுதான் ஆனந்தமாக இருப்பதாக ஒவ்வொருத்தியும் என்னிடம் சொன்னாள்... என் நிலையும் அப்படியே! கடிதத்தை முடித்து வைக்கிறேன். அது உங்கள் கண்களில் பட்டாலும் சரி... இல்லை; யாராவது எடுத்துக் கொளுத்தி விட்டாலும் சரி.,சாவு நெருங்கிவிட்டது நண்பர்களே, எனக்கு விடை கொடுங்கள்!''

இந்த மூவரைத் தவிர வேறு இருவருடைய பெயரும் அக்கடிதத்தின் கீழ் காணப்பட்டது. அதில் ஒருவர் வாசனைத் தைலம் தயாரித்து விற்கும் வியாபாரி. அவரை இந்த நண்பர்களுக்கும் தெரியும். மற்றவரை, அதாவது நண்பர்வரிசையில் கடைசியிலிருந்தவரை யாருக்கும் தெரியவில்லை. இறந்துபோனவருக்கு அவரும் ஒரு நண்பர்!

டாக்டர், வியாபாரியின் கையிலிருந்த கடிதத்தை வாங்கி மீண்டுமொரு முறை படித்தார். அதில் புதிதாக என்ன சொல்லப்பட்டிருக்கப் போகிறது? படித்து முடித்தவுடன் டாக்டர் யோசனையில் ஆழ்ந்திருந்த வியாபாரியைப் பார்த்தார். ''உங்கள் மனைவி கடந்த வருடம் இறந்துவிட்ட போதிலும் இந்த விஷயம் உங்கள் மனதை மிகவும் புண்படுத்தக் கூடிய விஷயந்தான்!'' என்றார் டாக்டர் வியாபாரியிடம். பதிலேதும் வரவில்லை வியாபாரியிடமிருந்து!

குறுக்கும் நெடுக்குமாக அங்கு

மிங்கும் நடந்து கொண்டிருந்த எழுத்தாளரின் வாய் ''அற்ப நாய்'' என்று அடிக்கடி முணு முணுத்தது. அவர் மனம் தன்னிடம் இப்போது அளவுக்கு மீறி வாஞ்சையோடு உறவாடும் தன் மனைவியைப் பற்றி நினைத்துப் பார்த்தது. ஒரு காலத்தில் அவள் அழகிதான்; ஆனால் அவர் கண்களுக்கு பிற மாதர்களல்லவா அழகாகத் தெரிந்தனர்! எத்தனையோ நாட்கள் அவள் அழுது அவரைத்திருத்த முயற்சித்திருப்பாள்! பலன்...... அவள் பழி வாங்கிக் கொண்டு விட்டாள்!

டாக்டருக்கும் அப்படியே! இரண்டு மூன்று வயதுப் பெண்களுக்குத் தாயான அவர் மனைவி திசை தடுமாற வேண்டிய அவசியத்தை அவராகவே பதினைந்து வருடங்களுக்கு முன் உண்டாக்கி விட்டார். காதலியை நம்பி, மனைவியைப் புறக்கணித்தார்!

மனைவியும் பின்னால் தவறை உணர்ந்து அவரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடும் நிலையில் இருந்தாள். அவருக்கு இன்னும் அந்தநாள் ஞாபகத்தில் இருக்கிறது!

வியாபாரி இறந்து போன தனது மனைவியை நினைத்தார். அவளை அவர் நன்றாகத்தான் வைத்திருந்தார். இருந்தாலும் அவளுக்கு ஏதோ குறை...காதலனைத் தேடிக் கொண்டாள்!

*   *   *

டாக்டர் இருக்கையை விட்டு எழுந்தார். கூடவே மற்ற இருவரும் கிளம்பினார்கள். வியாபாரி முதலில் விடை பெற்றுக் கொள்ளவே எழுத்தாளரைமட்டும் அழைத்துக் கொண்டு டாக்டர் வீட்டுக்குப் புறப்பட்டார். இருவரும் பொதுவிஷயமாகப் பேசினார்களே தவிர, கடிதத்தைப் பற்றி பேசவில்லை. டாக்டர் வீட்டு வாயிலில்விடை பெற்றுக் கொண்ட எழுத்தாளர் கடிதத்தை தம் கையில் வாங்கிக் கொண்டார்.

தொடர்ந்து தமது வீட்டை நோக்கி நடந்த எழுத்தாளரின் மனதில் ஒரு தீர்மானம். கடிதத்தை தன் மனைவியின் கண்களில் தென்படும் வகையில் வைத்தால், அவள் தன் கணவரின் கல்லறை அருகில் நின்று, ''என்ன பெருந்தன்மையான நெஞ்சம் உங்களுக்கு'' என்று கண்ணீர் விடும் காட்சியை எழுத்தாளர் உருவாக்கிப் பார்த்துக் கொண்டார். அதில் அவருக்குத் திருப்தி!

●●●

எலியும் மனிதனும்!

வெளிநாட்டிலிருந்து வந்த நண்பனொருவனை அழைத்துக் கொண்டு உலவி வந்தான் ஒருவன்.

''உங்கள் நாட்டில் பூனை குறுக்கே போவது நல்ல சகுனமா? அல்லது கெட்ட சகுனமா?''—கேள்வி!

''அப்படிப் பூனையைக் குறுக்கிட்டது எலியா அல்லது மனிதனா என்பதைப் பொறுத்த விஷயம் அய்யா, அது!''—பதில்!

இரும்பு முகமூடி 2
8 ஆண்டுகட்குப் பிறகு, ஒரு நாள் பாஸ்டில் சிறையின் கவர்னரிடம் எர்ப்ளே என்னும் ஒரு மர்ம மனிதர் வந்தார்.
நான் மார்சியாலியிடமிருந்து வாக்குமூலம் வாங்க வந்திருக்- -கிறேன். என்னை உள்ளே அனுமதிக் -கவும்!
அப்படியானால் வாருங்கள்!
ஒவ்வொரு கைதியும் ஏதாவது குற்றம் செய்துவிட்டு இங்கே வந்திருக்கிறார்கள். நீ செய்த குற்றம் என்ன?
குற்றமா? அப்படி என்றால் என்ன அர்த்தம் என்பதை முதலில் விளக்குங்கள்!
தன்னுடைய பிறப்பைப்பற்றி அவனுக்கு ஏதாவது தெரியுமா என்பதை அறிய எர்ப்ளே தந்திரமாகப் பல கேள்விகளைக் கேட்டார்.
அன்புள்ள வாலிபனே! கடந்த 23 - ஆண்டுகளாக, அதாவது நீ பிறந்த தினத்திலிருந்து பிரான்சிலே நடந்த அரசியல் நிகழ்ச்சிகளை விவரிக்கி- -றேன்; கேள்! இப்போது யார் அரசர் என்பது தெரியுமா?
தெரியும்.
எப்படி?
தலை வேறுபட்டிருந்த இரு நாணயங்- -களைப் பார்த்தேன். அதிலிருந்து இப்போது 14ம் லூயி பட்டத்திலிருப் -பதாகத் தெரிந்து கொண்டேன்.
பிறகு எர்ப்ளே அவனது பிறப்புபற்றிய பழைய கதை முழுவதையும் விவரித்தார்.


இளைஞனே! நீ மட்டும் சம்மதித்தால் உன் சகோதரனை வீழ்த்தி விட்டு உன்னையே மீண்டும் அரசனாக்க முடியும். என்ன சொல்கிறாய்?
அய்யோ வேண்டாம்! எனக்கு ஆசை காட்டாதீர்கள்!
ராஜ குடும்பத்தில் பிறந்து விட்டு கோழையாக இருக்காதே! தேடி வரும் மணிமுடியை உதைத்துத் தள்ளாதே!
சரி.... சம்மதிக்கிறேன்! ஆனால் நீர் எப்படி என்னை விடுவிக்க முடியும்?
எனக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கிறார்கள். கவலைப்படாதீர்கள், மன்னவா! அடுத்தமுறை நல்ல முடியோடு உங்களைச் சந்திக்கிறேன்!

எர்ப்னே அடுத்ததாக தலைமைச் சிறை அதிகாரியைச் சந்தித்தார்.
உங்கள் எதிரிகள் எவரையாவது பாஸ்டிலியில் தள்ளவேண்டுமா? அதற்கென்ன; அனுமதி தருகிறேன்!
இல்லை; ஒரு அனாதையை விடுவிக்க வேண்டும்?
செல்டன் என்னும் பெயருடைய வாலிபன் மாதாகோவிலைத் தாக்கி வெறும் கவிதை எழுதிய-மைக்காக சென்ற 10 ஆண்டுகளாகச் சிறையில் கிடக்கிறான்.
யார் அது?
சாதாரண கவி-தைக்காக சிறையா? ஏன் நீங்கள் முன்பே என்னிடம் சொல்லவில்லை?
நேற்றுதான் அவன் தாயார் என்னிடம் சொன்னாள்.
இப்போதே அவனை விடுவிக்கும் உத்தரவை அனுப்பி வைக்கிறேன்!
நன்றி; வருகிறேன்!

உடனே ஏர்ப்ளே பாஸ்டிலிக்குச் சென்றார்.
மேலதிகாரியிடமிருந்து கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்!
கடிதம் கொணர்ந்தவன் போய் விட்டான்.
யாரோ செல்டனும்! அவனை இப்போதே விடுவிக்க வேண்டுமாம்! இதைப் பாருங்கள். சரி; ஏய் சேவகா! சாவியைக் கொண்டு வா!
கவர்னர் கடிதத்தை ஏர்ப்ளே-யிடம் கொடுத்தான்.
கவர்னர் பார்க்காத நேரம் பார்த்து செல்டன் என்றிருப்பதை மார்சியாலி என்று மிகச்சாமர்த்தியமாக மாற்றி-விடுகிறார், ஏர்ப்ளே!
என்ன, செல்டனா? மார்சியாலி என்றல்லவா எழுதியிருக்கிறது? நன்றாகப் பாரும்!
அரசாங்கக் கடிதத்தில் அடித்தல் திருத்தல் இருக்காதே! ஏதோ சூது நடந்திருக்கிறது. வேறு உத்தரவு வந்தால்தான் நான் விடுவிக்கமுடியும்.


எர்ப்ளேயுக்குக் கோபம்தாங்க முடியவில்லை.
உமக்கு உத்திரவு தானே வேண்டும்? இதோ நான் தருகிறேன்!
சிறை அதிகாரி தந்த உத்தரவை சந்தேகப்படாமல் உடனே அமுலாக்-கவும். இப்படிக்கு, எர்ப்ளே பிரான்ஸ்நாட்டின் ஜெனரல்
என்ன; நீங்கள்தான் ஜெனரலா? மன்னிக்க வேண்டும்.
மறுநொடியே மார்சியாலி விடுவிக்கப்-பட்டான். எர்ப்ளே அவனைத் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டார்.
உங்களுக்கு 14-ம் லூயியைப் போலவே வயதும்; உருவமும்; குரலும் இருக்கிறது. இனிமேல் நீங்கள்தான் ராஜா!
அப்படியானால் என் சகோதரனைக் கொன்று விடுவீர்களா? வேண்டாம்....... எனக்கு பட்டமே வேண்டாம்!
பயப்படாதீர்! நீங்கள் விரும்பினால் பதவிவெறியால் தலைக்கனம் பிடித்துத் திரியும் அவனை உயிருக்கு ஆபத்தில்லாமல் நாடு கடத்தி விடலாம்!

பிலிப்பிற்கு ஒரே குழப்பம்!
தன்னால் தனது சகோதரன்
உயிருக்கு ஆபத்து வரக்கூ
டாதே என்ற ஆசை! அதனால்.
தான் இருப்பதே தெரியாமல்
பிரான்சில் எங்காவது ஒரு
மூலையில் மறைந்து வாழ விரும்புவ
தாகக் கூறினன். ஆனால் எர்ப்ளே
விடவில்லை. போதையேற்றினர்;
அவன் பிஞ்சுமனதை மாற்றினர்!
முடிவில் அவனும் மாறியே விட்டான்!
ஆமாம்; இதனால் உங்களுக்கு என்ன லாபம்?
மேன்மைதங்கிய ராஜாவுக்கு ஒரு முதன் மந்திரி தேவைப்படுமல்லவா?
நீரே தான் இனிமேல் என் மந்திரி! கவலைப் படாதீர்!
நன்றி மகாராஜா! இந்த நாய் நன்றி மறக்காமல் விரைவில் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும்.
செல்லப்பன்

பிரிட்டனில் குடும்ப வாழ்க்கை!

கணவன்மார்களுக்கு
ஆண்மை அவசியமா?
அந்தஸ்து அவசியமா?
அழகு அவசியமா?

கணவன்மார்கள் எப்படி இருக்கவேண்டும்? கண்ணுக்கு அழகாய் இருக்க வேண்டுமா? அல்லது பலசாலிகளாய் இருக்க வேண்டுமா?

அழகு முக்கியமா? ஆஸ்தி முக்கியமா? அல்லது ஆண்மை முக்கியமா?

—இது பற்றி ஒரு ஸ்தாபனத்தார் இங்கிலாந்திலே கணக்கெடுத்திருக்கிருர்கள்!

பொதுவாக ஆங்கிலப் பெண்கள் தங்கள் கணவன்மார்கள் அழகாயிருப்பதைவிட உடல் வலிமை பெற்றிருப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கிருர்கள். சுமார் 40 சதவீதப் பெண்கள் கணவன்மார்கள் பலசாலிகளாய் இருப்பது முக்கியம் என்கிருர்கள்.

அப்படி பலசாலிகளாய் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? அழகு தேவையில்லையா — என்று கேட்க விரும்புகிறீர்களா? அதற்கும் பதில் இருக்கிறது.

ஆனல் கணவன்மார்கள் அழகாய் இருக்க வேண்டுமென்பதற்கு ஆங்கிலப் பெண்கள் அதிக மகத்துவம் கற்பித்திருப்பதாகத் தெரியவில்லை.

சுமார் மூன்று சதவீதம் பெண்கள்தான் தங்கள் கணவன்மார்கள் அழகாயிருக்க வேண்டியது முக்கியம் என்ருர்கள்.

சுமார் பதினறு சதவீதம் பெண்கள்தான் தங்கள் கணவன்மார்கள் அழகாயிருக்க வேண்டியது மிகவும் முக்கியம் என்ருர்கள்.

ஆனல் 81 சதவீதம் பெண்கள் அந்த விஷயம் முக்கியமானதல்ல—என்றே தீர்ப்பளித்துவிட்டார்கள்!

மிக மிக மகிழ்ச்சிகரமான இல்வாழ்க்கை அதிக சம்பாத்யமுள்ள குடும்பங்களிலே காணப்பட்டது.

ஓரளவு மகிழ்ச்சி குன்றிய இல்லறம் மனைவி வெளியே சென்று பணிபுரிந்து பொருளீட்ட வேண்டிய குடும்பங்களில் நிலவிற்று. சில மனைவிகள் பொருளாதாரப் புயலிலிருந்து தங்கள் வாழ்க்கைப் படகைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அலுவலகங்களில் பணியாற்றுகிருர்கள். அந்த நிலைமைகளில் குடும்பத்தில் மகிழ்ச்சி சிறிது குறைவுதான்!

ஆனல் எல்லா மனைவிமார்களும் வருங்காலத்திற்குப் பொருள் சேர்த்து வைக்க வேண்டுமென்பதிலே ஒப்புதல் தெரிவித்திருந்தார்கள்.

சம்பாதித்த பணம் எப்படிச் செலவாக வேண்டும் என்பதிலே கணவனுக்குள்ள பங்கு தங்களுக்கும் வேண்டும் என்று எல்லோருமே விருப்பம் தெரிவித்தார்கள்.

ஆனால் ஐந்தில் மூன்று பங்கிற்கும் குறைவானவர்கள்தான் கணவன்மார்களின் கைச் செலவிற்காக அவர்களிடம் சிறிது தொகை இருக்க வேண்டுமென்பதை அனுமதித்தார்கள்.

—ஆனால் ஆராய்ச்சி நடத்தியவர்கள் அனைவருமே ஒரு விஷயத்தில் ஏகமனதாகக் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

சிறு குழந்தையாக இருக்கும்போது மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர்களது இல்வாழ்க்கை பிற்காலத்திலும் மகிழ்ச்சியோடே இருக்கிறது. அதில் ஐந்துக்கு ஒன்றுதான் தவறிவிடுகிறது.

○○○

மூளை விற்பனை!

ஈன்ஸ்டின் இறந்தபிறகு அவருடைய மூளையை டாக்டர்கள் சோதனை செய்து பார்த்தார்கள். இவர் போன்ற பெரும் பெரும் மேதைகளின் மூளைகளைத்தான் ஆராய்ச்சி செய்வது வழக்கம்.

அதைப்போன்றே பியர் லூடெக்—என்று ஒரு பிரெஞ்சுக்காரர் இருந்தார். அவருக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. அதனால் பல ஆராய்ச்சிசாலைகள் அவர் செத்த பின்அவருடைய மூளையை சோதனை செய்ய முன் வந்தன. அதற்காகப் பணம் கொடுக்கவும் போட்டி போட்டுக்கொண்டிருந்தன. அவர் இலகுவில் யாருக்கும் சம்மதம் தரவில்லை.

ஆனால் அந்த நபருக்கோ பணத்தொல்லைகள் அதிகம். இதைத் தெரிந்து கொண்ட நியூயார்க் ஆராய்ச்சிசாலை என்றோ சமயம் பார்த்து அவரிடம் பொருள் கொடுத்து; அவருக்குப்பிறகு மூளையை ஆராய்ச்சி செய்யும் உரிமையைப் பெற்றது.

ஒரு நாள் லூடெக் செத்துப்போனார்.

உடனே நியூயார்க் ஆராய்ச்சிசாலை பரிசோதனைக்கு அவருடைய மூளையைக் கேட்டது.

ஆனால் என்ன வேடிக்கை தெரியுமா?

நியூயார்க் ஆராய்ச்சிசாலையைப் போலவே எழுபத்தைந்து நிலையங்கள் அவருடைய மூளைக்கு உரிமை கொண்டாடின.

எப்படி என்று கேட்கிறீர்களா?

எழுபத்தைந்து தடவைகள் அவருக்குப் பணக் கஷ்டங்கள் வந்திருக்கின்றன. அப்போதெல்லாம் அவர் அடுத்தவருக்குத் தெரியாமல் ஒவ்வொருவருக்கும் தனது 'மூளை'யை விற்றிருக்கிறார்!

—'உமன்ஸ் வீக்லி'

72
M211,N56MR
198952

பாராளுமன்றம்

பார்லிமெண்ட் என்பதே விவாதிக்கும் இடமென்று பொருள். நமது பார்லிமெண்டும் இதர நாடுகளிலுள்ள பார்லிமெண்டுகளைப் போலவே நாட்டின் உயர் அதிகாரம் படைத்த சட்டமியற்றும்மன்றமாக இருக்கிறது. ராஜ்ய சபா என்ற மேல் சபையும். லோக் சபா என்னும் மக்கள் சபையும் பார்லிமெண்டின் இரு அங்கங்களாகும். அரசியலமைப்புச் சட்டப்படி மக்கள்சபைக்கு மந்திரிசபை பொறுப்பு வாய்ந்ததாகும். நாட்டின் நிர்வாகத்துக்கு மக்கள் சபை நிதியை அனுமதிப்பதுடன் மந்திரி சபையை மேற்பார்வை யிடுவதற்கு சிறந்த கருவியாகவும் இருக்கிறது. நிர்வாக சர்க்காரின் நடவடிக்கைகளை அது கேள்விகள், விவாதங்களின் மூலம் கட்டுப்படுத்துகிறது. நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி அது மந்திரி சபையைக் கலைத்துவிட முடியும். எனவே இந்த சபையின் உச்ச அதிகாரம் பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

பார்லிமெண்டின் மிக முக்கியமான பொறுப்பு சட்டங்களியற்றுவதே.

மசோதாக்கள்

சட்டம் இயற்றுவதற்காக நகல் மசோதாவை ஒரு அமைச்சரோ அல்லது தனிப்பட்டஅங்கத்தினரோ கொண்டுவரலாம். மந்திரி கொண்டுவரும்மசோதா சர்க்கார் மசோதா. மற்றது தனியார் மசோதா.

ஒரு மசோதா இரு சபைகளிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு குடியரசுத் தலைவர் அங்கீகாரத்தைப் பெற்றபின், பார்லிமெண்டு நிறைவேற்றிய சட்டமாக ஆகிறது. அதில் பல பகுதிகள் இருக்கும். சட்டத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதற்காக ஒவ்வொரு மசோதாவிலும் சுருக்கமாகப் பெயர் இருக்கும். அது மசோதாவின் தலைப்பில் அச்சிடப்பட்டிருக்கும்.

மசோதாவின் பீடிகையில் சட்டம் கொண்டு வருவதற்கு ஏதுவான காரணங்கள்; சட்டத்தின் விளைவாய் ஏற்படுகிற பலன்கள் முதலியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

பிறகுதான் மசோதாவின் பல்வேறு ஷரத்துக்களும் தரப்படும். ஒவ்வொரு ஷரத்தும் வரிசைக் கிரம இலக்கத்துடன் இருக்கும். ஒவ்வொரு ஷரத்தின் 'மார்ஜின்' விளிம்பிலும்

ஷரத்து விவரணத் தலைப்பு இருக்கும். ஒரு ஷரத்து நீள மாக இருந்தால் உப ஷரத்துக் கிடாகவும், அவைகளின் கிளை ஷரத்துக்களாகவும் பிரிக்கப் பட்டிருக்கும்.

நிதி அறிக்கை

எந்த ஷரத்திலாவது பணம் செலவிடுவதற்கு வகைசெய்யப் பட்டிருந்தால் மசோதாவுடன் நிதி அறிக்கை ஒன்று தரப்பட வேண்டும். அந்தச் செலவை சரிக்கட்டுவதற்கு என்ன வழி கையாளப்படும் என்பதும் அது திரும்பத் திரும்ப வருகிற செலவா அல்லது ஒரே தடவை யாக உள்ள செலவா என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒரு மசோதாவை சபையின் அங்கத்தினர் ஒருவர்தான் கொண்டு வரலாம். அமைச் சர்கள் விஷயத்தில் நமது அரசியலமைப்புச் சட்டம் ஒரு வித்தியாசத்தைச் செய்திருக் கிறது. அதாவது ஒரு அமைச் சர் இரு சபைகளிலும் பேசவும் செயல்படவும் அதிகாரமுண்டு. ஆனால் அவர் எந்தச் சபை அங் கத்தினரோ அங்கேதான் ஓட் டளிக்கலாம். ஒரு அமைச்சர் பார்லிமெண்டின் இரு சபை களில் எதிலும் ஒரு மசோ தாவைக் கொண்டு வர லாம்.

தனியார் மசோதா விஷயத் தில் ஒரு மாத முன்னறிவிப்பு வேண்டும். ஆனால் சபாநாயகர் தமது யுக்தம்போல் அந்தக் காலத்தைக் குறைக்கலாம்.

மசோதாவின் அவசியம், அவ சரம் முதலியவைபற்றி அவ ருக்குத் திருப்தி ஏற்படும் வகையில் அவர் செய்யலாம்.

மசோதா பரிசீலனை

தனியார் மசோதாவை மக் கள் சபை காரியாலயம் பரிசீ லித்து ஆராய்ந்து சரியான உருவ அமைப்புக் கொடுக்கும். ஒரு மசோதா கொண்டு வரப் பட்ட பின் அது சர்க்கார் கெஜெட்டில் பிரசுரிக்கப்படும். ஆனால் சபாநாயகரின் அனுமதி யுடன் அந்த மசோதாவை கெஜெட்டில் முன்கூட்டியே பிரசுரிக்கவும் செய்யலாம். சபை கூடாமலிருக்கும்போதே சர்க் கார் முக்கியமான ஒரு விஷயம் குறித்து நாட்டின் அபிப்பிரா யத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினால் அந்த மசோதாவை கெஜெட்டில் முன்கூட்டியே பிரசுரிப்பதற்கு அனுமதிக்கும் படி சபாநாயகரைக் கேட்க லாம். உசிதமான விஷயங்களில் அவர் அதை அனுமதிப்பார்.

மசோதா நிறைவேற்ற பலகட்டங்கள் உண்டு

சர்க்கார் மசோதாவாயிருந் தாலும் சரி; தனியார் மசோ தாவாயிருந்தாலும் சரி; சகல மசோதாக்களும் பல்வேறு கட்டங்களைக் கடந்தாக வேண் டும். பார்லிமெண்டில் கொண்டு வருவது முதல் கட் டம். ஒரு மசோதாவைக் கொண்டு வருவதற்கு ஓர் அங் கத்தினர் சபையின் அனுமதி யைப் பெறவேண்டும். சபை அனுமதித்தால், மசோதா கொண்டு வரப்பட்டதென்று அர்த்தம். கெஜெட்டில் பிரசுர

பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினீர்கள் அல்லவா? அந்த மன்றம் எப்படி இயங் குகிறது என்பதை விளக்குவதுதான் இந்தக் கட்டுரை!

மான மசோதா விஷயத்தில் சபையில் கொண்டு வருவதற்கு அனுமதி தேவை இல்லை. அது நேரடியாகச் சபையில் கொண்டு வரப்பட்டுவிடும். இந்தக் கட்டம் முதல் வாசிப்புக் கட்டம் என்று கூறப்படும்.

ஒரு மசோதாவைக் கொண்டு வருவதற்கான அனுமதி கோரி பிரேரணை செய்யப்படும் கட்டத்தில் அது ஆட்சேபிக்கப் படடால், சபாநாயகர் தமது யுக்தம்போல் அது சம்பந்தமாய்ச் சுருக்கமாக விளக்கிப் பேச மசோதாப் பிரேரணைக்குப் பொறுப்பு வகிப்பவரையும், அதை ஆட்சேபிப்பவரையும் அனுமதிக்கலாம். அதற்குப்பின் மேற்கொண்டு விவாதமில்லாமல், அந்த விஷயத்தை சபையின் வோட்டுக்கு அவர் விடுவார். இந்த கட்டத்தில் அந்த மசோதா சபையின் சட்ட நிருபண அதிகாரத்துக்குப் புறம்பான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாயிருக்கிறது என்றால் ஆட்சேபிக்கப்படலாம்.

பார்லிமெண்டில் இரண்டாவது வாசிப்பு

மசோதா சம்பந்தமாக இரண்டாவது வாசிப்பில் மசோதாவின் பரிசிலனைதான் அடங்கியிருக்கும். அதை இரண்டு கட்டங்களாகப் பகுத்துக் கூறலாம். முதல் கட்டத்தில் மசோதா சம்பந்தமான பொது விவாதம் நடக்கும். அப்போது மசோதாவில் அடங்கியுள்ள கோட்பாடுகள் விவாதிக்கப்படும். இந்தக் கட்டத்தில் மசோதாவைச்சபையின் ''செலக்ட் கமிட்டி'' அல்லது இரு சபைகளின் கூட்டுக் கமிட்டி அதைப் பரிசீலிக்க வேண்டுமென்றோ, பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அதை வெளியிட வேண்டு மென்றோ, அல்லது நேரடியாகப் பரிசீலனை மேற்கொள்ள வேண்டு மென்றோ தீர்மானிக்கலாம்.

செலக்ட் கமிட்டி அம் மசோதாவை சபை செய்தது போலவே ஷரத்து வாரியாகப் பரிசீலிக்கும். ''செலக்ட் கமிட்டி'' அங்கத்தினர்கள் பல்வேறு ஷரத்துகளுக்கும் திருத்தங்கள் சமர்ப்பிக்கலாம்,மேலும் செலெக்ட் கமிட்டி அந்த மசோதா சம்பந்தமாய் அக்கறையுள்ள சங்கங்கள், ஸ்தாபனங்கள், அல்லது நிபுணர்களின் சாட்சியங்களை விசாரிக்கலாம். செலக்ட் கமிட்டி மசோதாவைப் பரிசீலித்த பின் சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப் படும்.

பொதுமக்கள் அபிப்பிராயம் அறிவதற்காக மசோதா வெளியிடப்பட்டால், மாநில சர்க்கார்கள் மூலம், பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளப்படும்.

அடுத்த பிரேரணை மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டு மென்பதாகும்.

ஷரத்துவாரி பரிசீலனை

இரண்டாவது வாசிப்பின் இரண்டாவதுகட்டம் செலக்ட் கமிட்டி அறிக்கைக்குப் பிறகோ அல்லது கமிட்டிகளுக்கு அனுப்பாத விஷயங்களில் நேரடி பரிசீலனைக்கு ஒப்புக் கொள்ளப் பட்ட பிறகோதான் ஆரம்பமாகும். இந்தத் திட்டத்தில்

மசோதா ஷரத்து வாரியாக பரிசீலிக்கப்படும். ஒவ்வொரு ஷரத்தும் விவாதிக்கப்பட்டு அதற்குத் திருத்தங்கள் இருந்தால் அவைகளும் பிரேரேபிக்கப்படும். ஒவ்வொரு திருத்தமும் ஒவ்வொரு ஷரத்தும் சபையின் வோட்டுக்கு விடப்படும். திருத்தங்கள் விஷயத்தில் சபையில் வந்திருந்து வோட்டுச் செய்கிற அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் ஆதரித்தால் அவை மசோதாவில் இணைந்து விட்டவையாகிவிடும்.

மூன்ருவது வாசிப்பு

அதற்குப் பிறகு மசோதாவுக்குப் பொறுப்பான அங்கத்தினர் மூன்ருவது வாசிப்பை நடத்த பிரேரணை செய்யலாம். இந்தக் கட்டத்தில் மசோதாவுக்கு ஆதரவாகவோ அல்லது அதை நிராகரிக்க வேண்டுமென்ருே வாதங்கள் நடத்தலாம். ஆனல் இன்றியமையாத அவசியத்துக்கு அதிகமாக விவர நுட்பமாய் இந்தக் கட்டத்தில் பேசக்கூடாது. மசோதா நிறைவேற்றப்படலாமா அல்லது நிராகரிக்கப்பட வேண்டுமா என்ற பொது விவாதம்தான் நடத்தப்பட வேண்டும்.

மேலும் இதர திருத்தங்களைச் செய்ய முடியாது.

நிறைவேற்றுவது

சாதாரண மசோதாக்கள் விஷயத்தில் சபைக்கு வந்திருந்து வோட்டெடுப்பில் கலந்து கொள்ளுகிற அங்கத்தினர்களில் சாதாரணப் பெரும்பான்மை வோட்டு கிடைத்தால் மசோதா நிறைவேறும். ஆனல் அரசியலமைப்புச் சட்டத்தைத்

‘தலைப்பா மாற்றி’

கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் சில துருப்புக்களோடு காப்டன் கமாக் என்பவன் பலமுஎன்னுமிடத்து ராஜாவிடம் சென்று மிரட்டினன். அந்த ராஜா பயந்துபோய் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மூவாயிரம் ரூபாய் கப்பம் கட்டுவதாகவும், மகாராஷ்டிரருடன் நடைபெறும் சண்டையில் தான் உதவி புரிவதாகவும் ஒப்புக்கொண்டார். இவ்விதம் கம்பெனிக்கு லாபம் சம்பாதித்ததோடு கேப்டன் கமாக் திருப்தியடையவில்லை. தானும் ஏதாவது லாபம் அடைய வேண்டுமென்று கருதினன். ராஜாவின் தலைப்பாகையில் ஏராளமான வைரங்கள் பதிக்கப்பட்டு ‘பள பள’ வென்று ஜொலிக்கக் கண்டான். அதை அபகரிக்க ஒரு யுக்தி செய்தான்.

“மகாராஜா! நாம் இப்பொழுது செய்துகொண்ட ஒப்பந்தம் நிரந்தரமாக இருக்க வேண்டுமல்லவா? அதற்கு நமது தலையணிகளை மாற்றிக் கொள்ளுவதுதான் சாசுவத நேசத்துக்கு அடையாளம்” என்ருன். திக்கற்ற ராஜாவுக்கு வேறு வழியில்லை. தமது வைரம் பதித்த தலைப்பாகையை காப்டனிடம் கொடுத்து விட்டு, அவனுடைய வெற்றுத் தொப்பியை வாங்கி மாட்டிக் கொண்டு அசடு வழியச் சிரித்தார். அன்றையிலிருந்து தான் மோசக்காரர்களைத் ‘தலைப்பா மாற்றி’ என்று சொல்லும் வழக்கம் உண்டாயிற்று.

திருத்துகிற மசோதாவாக இருந்தால் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும் பான்மை அங்கத்தினர்களின் ஆதரவும், சபைக்கு வந்திருந்து வோட்டெடுப்பில் கலந்து கொள்ளுகிற அங்கத்தினர் களில் மூன்றில் இரண்டு பங் குக்கு ஆதரவும் அதற்குக் கிடைக்க வேண்டும்.

மாற்றுப் பரிசீலனை

ஒரே மசோதா நிறைவேற்றப் பட்டபின் அது அடுத்த சபைக்கு (ராஜாங்க சபை யில் நிறைவேற்றப்பட்ட மசோதா மக்கள் சபைக்கும், மக்கள் சபையில் நிறைவேற் றப்பட்ட மசோதா ராஜா ங்க சபைக்கும்) அனுப்பப்பட வேண்டும். அந்த மற்ற சபை யிலும் மசோதாவானது முன் சபையில் நிறைவேற்றப்பட்ட ரீதியிலேயே நடத்தப்படவேண் டும். ஒரு மசோதாவை இரு சபைகளும் நிறைவேற்றி விட் டால், கடைசியாக மசோதா எந்த சபையில் முடிவு செய்யப் பட்டதோ, அந்த சபை அதற் குக் குடி அரசுத் தலைவரின் அங் கிகாரத்தைப் பெறுவதற்கு அனுப்ப வேண்டும். குடிஅர சுத்தலைவர் ஒரு மசோதா சம்பந் தமாய் தமது அங்கீகாரத்தை அளிக்கலாம்; அல்லது மறுக்க லாம்; அல்லது அது சம்பந்த மாய்த் தமது சிபாரிசுகளைத் தெரிவித்து மறு பரிசிலனைக்கு அனுப்பலாம். பிறகு இரு சபைகளும், அந்த மசோதா வைக் குடி அரசுத் தலைவரின் திருத்தங்கள் சகிதமாகவோ அல்லது திருத்தங்களைச் செய் யாமலோ மீண்டும் நிறைவேற் றினால் குடி அரசுத் தலைவர் அம் மசோதாவுக்கு அங்கீகாரம் அளித்தே ஆக வேண்டும்.

மக்கள் சபை நிறைவேற்றிய ஒரு மசோதாவை ராஜாங்க சபை ஏற்றுக் கொள்ளா விட் டால், முட்டுக்கட்டை நிலை ஏற் படும். அப்போது குடி அரசுத் தலைவர் இரு சபைகளின் கூட் டுக் கூட்டம் நடக்க வேண்டு மென்று அறிவிக்கலாம். கூட் டுக் கூட்டத்திற்கு மக்கள் சபைத் தலைவரே தலைமை வகிப் பார்.

நிதி மசோதாக்கள்

நிதி மசோதாக்கள் சம்பந்தப் பட்ட மட்டில் மக்கள் சபை தான் சட்டமியற்றும் முழு அதி காரத்தையும் பெற்றிருக்கிறது. ஒரு மசோதா நிதி மசோதாவா, அல்லவா என்பதை இறுதியா கத் தீர்மானிக்கும் பொறுப்பு சபாநாயகருக்கே உண்டு. அவர் யாரையும் கலந்து ஆலோசிக் கக் கடமைப்பட்டவரல்ல.

நிதி மசோதாக்கள் விஷயத் தில் ராஜாங்க சபைக்குச் சொற்ப அதிகாரமே உண்டு. ஒரு நிதி மசோதாவை அது இரண்டு வாரங்களுக்குத் தாம திக்க வைக்கலாம். 14 தினங் களுக்குள் அது அந்த நிதி மசோ தாவைத் தன் சிபார்சுகளு டனோ அல்லது சிபார்சுகள் இல்லாமலோ திருப்பியனுப்பி விடவேண்டும். மக்கள் சபை ராஜாங்க சபையின் சிபார்சை ஏற்றுக் கொள்ளவோ நிரா கரிக்கவோ செய்யலாம். ராஜாங்க சபை அம்மசோதா வைத் திருப்பியனுப்பாவிட்டா லும் அது நிறைவேற்றப்பட்டு விட்டதாகவே அர்த்தம்.

ஒரு நிதி மசோதாவை குடி அரசுத் தலைவரின் சிபாரிசு

இல்லாமல் மக்கள் சபையில் கொண்டுவர முடியாது.

ஒரு புதிய உள் மாநிலத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாகவோ அல்லது ஒரு உள் மாநிலத்தின் எல்லைகளை மாற்றுவது சம்பந்தமாகவோ உள்ள ஒரு மசோதாவுக்கு அவர் சிபாரிசு வேண்டும்.

மாநிலங்களுக்கு அக்கறையுள்ள வரிவிதிப்பைப் பாதிக்கிற ஒரு மசோதா சம்பந்தமாகவும் கொண்டுவர குடியரசுத் தலைவர் சிபாரிசு அவசியம்.

சுப்ரீம் கோர்ட்டிலும், ஹைகோர்ட்டிலும் என்ன மொழி உபயோகிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும், சட்டங்கள் மசோதாக்கள் முதலியவைகளில் என்ன மொழி உபயோகிக்கப்பட வேண்டுமென்பது பற்றியும் ஏற்பாடு செய்கிற எந்த மசோதாவையும் கொண்டு வருவதாயிருந்தால் அதற்கும் அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்தபின் 15 ஆண்டு காலம் வரையில் குடி அரசுத் தலைவரின் முன் அனுமதி அவசியம்.

அவசரச் சட்டங்கள்

பார்லிமெண்ட் கூடாமலிருக்கும் சமயத்தில் குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்கள் பிறப்பித்து சட்டம் நிறைவேற்ற அரசியலமைப்புச் சட்டத்தில் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிறப்பிக்கப்படுகிற ஒரு அவசரச் சட்டத்தைப் பார்லிமெண்டு மீண்டும்கூடுவதற்குள் வாபஸ் பெறவில்லையானல் அது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பார்லிமெண்ட் கூடி ஆரவாரத்திற்குப் பிறகு அது செயல்படுவது நின்றுவிடும். இரு சபைகளும் அந்த அவசரச் சட்டத்தை அங்கிகரிக்க மறுத்தால் அது உடனடியாகவே அமுலாகாமல் நின்றுவிடும்.

எனவே குடியரசுத் தலைவர் பார்லிமெண்ட் இயற்றிருக்கக் கூடிய ஒரு சட்டத்தை அவசரச் சட்டம் மூலம் இயற்றலாம். சபைமுன் பரிசிலனையில் இருக்கிற ஒரு மசோதா ஷரத்துக்கள் முழுவதையோ அல்லது ஒரு பகுதியையோ கொண்டதாகவும் அல்லது அவைகளில் மாறுதல்கள் செய்தும் இயற்றப்படுகிற அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்படுமானல், அப்படி அவசரச் சட்டம் மூலம் உடனடியாகச் சட்டம் இயற்றுவதற்கு அவசியமாயிருந்த சூழ்நிலைகளை விளக்கி ஓர் அறிக்கையை அவசரச் சட்டப் பிரகடனத்திற்குப் பிறகு பார்லிமெண்ட் சபை கூடும்போது ஆரம்பத்திலேயே சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அதேபோல் ஓர் அவசரச் சட்டத்துக்குப் பதிலாக ஒரு மசோதா மாற்றங்களுடனே மாற்றம் இல்லாமலோ சபையில் கொண்டு வரப்படும்போதும் அத்தகைய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

இந்தியப் பார்லிமெண்டில் சட்டம் இயற்றுவதற்குக் கடைப்பிடிக்கிற நடைமுறைச் சுருக்கம் இதுதான்.

●●●

கிளியோபாட்ராவின் வாரிசு!

பெண் ஒற்றர்களிலே மிகப் பெயர் பெற்றவள் மதாகரி!

அழகும் யௌவனமும் குடி கொண்டிருந்த மதாகரியைப் பற்றியும்; அவள் துப்பறிந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் இப்போது கதை கதையாகச் சொல்கிறார்கள். அவைகளில் எது உண்மை என்று நம்பமுடியாத அளவுக்கு அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசப்பட்டும் எழுதப் பட்டும் வருகிறது!

அவளிடம் வீனஸ் தேவதையின் அழகும்; இத்தாலிய நாட்டின் சாணக்கியன், மேக்கிய வெல்லியின் தந்திரமும் குடி கொண்டிருந்தன — என்று சொல்கிறார்கள்!

அவளுடைய புன் சிரிப்பில் மயங்கியவாறே பெரும் பெரும் பட்டாளத் தளபதிகள் தங்கள் இராணுவ ரகசியங்களை வெளியிட்டிருக்கிறார்கள்!

தேசத் தியாகிகள் என்று பெயரெடுத்தவர்கள்கூட மதாகரி ஊட்டிய மோக போதையிலே மயங்கி தேசத் துரோகிகளாக மாறியிருக்கின்றனர்!

அவள் ஜெர்மனிக்காக உளவறியும் வேவுகாரியாக வேலை பார்த்தாள்! பலப்பல இராணுவ இரகசியங்கள் அவள் மூலம் ஜெர்மானியருக்குக் கிடைத்திருக்கின்றன!

ஒற்று வேலைக்காக அவள் அச்சம்-மடம்-நாணம்-பயிற்பு -கற்பு போன்ற பல குண நலன்களைக் காற்றிலே பறக்கவிட்டிருக்கிறாள்!

கர்னல் பிலிம்ப்ஸ் என்பாரிடமிருந்து சில இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காக மதாகாரி ஒரு சமயம் உடலில் எந்த வித ஆடையுமின்றி நிர்வாணமாகவே நடனமாடியிருக்கிறாள்!

இறுதியில் அவள் குற்றம் சாட்டப்பட்டு, சுட்டுக் கொல்லப்படும்படி உத்தரவிடப் பட்டாள்!

அப்போதும் அவள் கவலைப் படவில்லை. அவள்கூட இருந்த மாதா கோவிலைச் சேர்ந்த ஒருத்தி கண்ணீர் விட்டு அழுதாள்.

அப்போதும் மதாகரி அவளைப் பார்த்து:

"ஏன் அழுகிறாய்? நான் உலகத்தின் மிகப் பெரிய புகைவண்டி நிலையத்திற்குப் போகிறேன். ஆனால் அங்கிருந்து திரும்பி வருவதற்குத் தான் 'டிக்கெட்' இல்லை. கவலைப் படாதே! இன்னும் ஏன் கண்ணீர் சிந்துகிறாய்? சே, சே, எவ்வளவு பலவீனமானது உன் இதயம்! உன்னைப்போல் பலர் சேர்ந்தால் தான் ஒரு மதாகரியாக முடியும்!"

—இப்படி உபதேசம் செய்திருக்கிறாள் அவள்!

அவளைச் சாகடிப்பதற்காகத் துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருக்கும் சிப்பாய்கள் அந்த நேரத்தில்கூட அவள் பேரழகால் கவர்ச்சிக்கப்பட்டு மயங்கி நின்றனர்; துப்பாக்கிக் குதிரையைத் தொடுவதற்கும் அவர்கள் கைகள் நடுங்கினவாம்!

—சரித்திரத்தின் மிகப்பெரிய இந்த சாகசக்காரி தன்னை ஒரு

தென் இந்தியப் பெண் என்று கூறிக் கொண்டாள்.

மலேயாளக் கடற் கரையிலுள்ள ஜாஃப்னப் பட்டம்தான் தன்னுடைய ஊர் என்றும்கூறினுள். ஒரு ஆங்கிலத் தளகர்த்தனைத் திருமணம் செய்து கொண்டு பிறகு ஐரோப்பாவிற்கு வந்ததாகவும் கூறுகிருள்!

பிரான்சிலே பல இடங்களில் இவள் நிர்வாண நடனங்கள் ஆடியபோதெல்லாம் அவை பொருள் மிகப் பொதிந்த புராதன இந்து நடனங்கள் என்றே கூறியிருக்கிருள்!

—ஆனால் சிலரோ ஆளைமயக்குவதற்காக இவள் கட்டிவிட்ட கதைதான் தன்னை இந்தியக்காரி என்று கூறுவது என்று கருதுகின்றனர்.

"நிர்வாண நடனங்கள், அப்படி நடனமாடும் பெண்மணியின்பால் பார்ப்பவர்களைக் காம இச்சையைத் தூண்டிவிடுவதுதான் வழக்கம். ஆனுல் மதாகரி நடனமாடும்போது ஒரு ஆண்மகன் அவளைக் கூடிய இன்பத்தைப் பெற்றுவிட்டதாகவே எண்ணம் எழுகிறது"

—என்று ஒரு நபர் தன்னிடம் கூறியதாக பெர்னுர்ட் நியூமேன் என்பவர் மதாகரியைப் பற்றி எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிருர்!

அவ்வளவு பேரழகு பெற்றவள் — ஐரோப்பா முழுவதும் காதலர்களைப் பெற்றவள்—

ஆனுல் அவள் சாகும்போதோ அவள் பிணத்தைப் புதைப்பதற்கு எந்த ஒரு ஜீவனும் முன் வரவில்லை.

இறுதியில் அந்த அனுதைப் பிணத்தை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினுர்கள். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்ற பிணங்களைப் போலவே அதையும் அறுத்து, தங்கள் சோதனைக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்!

—கிளியோ பாட்ராவின் வாரிசாக இருந்தவளின் இறுதி வரலாறு இதுதான்!

("வேர்ல்டு டைஜஸ்ட்"; "மேன்" ஆகிய ஏடுகளிலிருந்து சுருக்கப் பட்டது.)

0 ~ 0

பத்திரிகைச் செய்தி....

"இந்த ஊர் மாதாகோவிலில் புதிதாக ஒரு ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அது பக்தர் ஒருவரால் அவருடைய அருமை மனைவியின் ஞாபகார்த்தமாகக் கொடுக்கப்பட்டதாகும்."

—ஆர். டி.

தேர்தல்-

கடந்த மார்சு மாதம், 8-ம் நாள் நடந்த பொதுத் தேர்தல் வாக்கெடுப்பு அரசியல் நாணயத்திற்கு இழுக்கு தேடும் வண்ணம் நடைபெற்றது. முதலில் வாக்காளர் பட்டியல் சரியாகச் செப்பனிடப்படவில்லை. ஒரு இடத்தில் தமிழ்ப் பட்டியல் தான் சரி என்றனர். மற்றோர் இடத்தில் ஆங்கிலப் பட்டியல் தான் சரி என்றனர்.

19—3—57-ல் சென்னை கிரசன்ட் சொசைடியில் "இங்கிலாந்தும் தேர்தலும்" என்ற தலைப்பில் இங்கிலாந்திலிருந்து சென்னைக்கு வந்திருந்த திருமதி

அங்கும்,

டாக்டர் மோனிகா பெல்ட்டன் சொற்பொழிவு நிகழ்த்தினர். அவ்வம்மையார் கூறிய சில கருத்துக்களைக் கூறிவிட்டு சென்னைப் பொதுத் தேர்தலைப் பற்றிக் கவனிப்போம்.

திருமதி டாக்டர் மோனிகா பெல்ட்டன் பேசும்போது குறிப்பிட்டதாவது:

இங்கிலாந்தில் தேர்தல் எல்லா இடங்களிலும் ஒரே நாளில் நடைபெறும். வாக்குப் பதிவு காலை 7 மணிக்குத் துவங்கி, இரவு 9 மணிவரை நடக்கும். இரவு 9 மணிக்கு மேல் வாக்குச் சீட்டுகள் நிறைந்த பெட்டிகள் சில மணி

இங்கும்!

நேரங்களுக்குள் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரும். இடைவேளை கிடையாது. அதற்கேற்ற வசதிகள் செய்யப்படும்.

பெட்டிகள் சேர்ந்த சிலமணி நேரங்களுக்குப் பின் வாக்குப் பதிவுகள் எண்ணப்படும். மறு நாள் பகற் சாப்பாட்டிற்குள் 90 சதவிகித முடிவுகள் தெரிய வரும்.

மேலும் வாக்கெடுப்பிற்கு முன்பாகவே மக்கள் சபை அதிகாரப் பூர்வமாகக் கலைக்கப் பட்டுவிடும்.

மற்றும் யாரும் கட்சி சார்பில்லாமல் சுயேச்சையாக நிற்க முடியாது.

தேர்தலுக்கு முன் அங்குள்ள கட்சிகள் தங்கள் கட்சியுடன் அன்றாடம் தொடர்பு கொண்டவர்களையே நிற்கவைக்கும். மக்களுக்கு அறிமுகம் ஆகாதவர்களை திடீரென்று நிற்க வைக்க முடியாது.

அங்குள்ள ஒவ்வொரு கட்சிக்கும் முழு நேரம் பணியாற்றும் தொண்டர் (அமைப்பாளர்) இருப்பார். அவர் கட்சியின் வேலைகளை கவனித்துக் கொள்வார். சபைக்குப் போட்டியிடும் அங்கத்தினர்களுடைய செலவுகளைக் கட்சியே ஏற்கும். அங்கத்தினர்களுக்கு தனிப்பட்ட வகையில் சில அணுக்களே செலவாகும். கிராம வட்டாரங்களில் நிற்கும் அங்கத்தினர்களுக்குச் செலவு சிறிது அதிகமாகவும், நகரங்களில் நிற்பவர்களுக்கு செலவு மிகச் சொற்பமாகவும் நேரிடும்.

அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூட்டங்கள் கூட்டி கருத்தை விளக்குவதும், வீடு வீடாகச் சென்று ஆதரவு தேடும் முறையும் உண்டு. அங்

னம் வீடு வீடாகச் சென்று ஆதரவு தேடும் முறையில் வாக்காளர் பட்டியலில் மூன்று பத்திகள் பிரித்துக் கொள்வர். ஒன்றில் தம் கட்சிக்குதான் அந்த வாக்கு என்றும், இரண்டாவது பத்தியில் இல்லை யென்றும், மூன்ருவது பத்தியில் சந்தேகம் என்றும் குறிக்கப்படும். சந்தேகம் என்று வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்ட இடத்திற்கு மீண்டும் மீண்டும் சென்று தமது இலட்சியங்களை வெளியிடுவர் அந்தக் கட்சியினர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 10 நாளைக்குள் சபை கூடும்.

இங்ஙனம் இங்கிலாந்தில் நடைபெறும் தேர்தலைப் பற்றித் தெரிவித்தார்கள். ஆனல் சென்னையில் நடைபெற்ற தேர்தலில் மாலை 4 மணிக்கெல்லாம் ஓட்டுச் சாவடிகள் மூடப்பட்டன எனத் தலைமை வகித்த ஒரு பெரியார் கூறியதும் அவ்வம்மையார் மிகவும் திடுக்கிட்டு அதிசயித்தார்கள்.

ஆகவே இதை வைத்துக் கொண்டு சென்னை மாகாணத்தில் நடந்த தேர்தல் நிகழ்ச்சிகளைக் கவனித்தால் ஜனநாயகத்தை குழி வெட்டி மண் போட்டு மூடிவிட்டு உத்தமர் காந்தியார் வளர்த்த காங்கிரஸ் இயக்கத்தை எந்த அபாயகரமான கட்டத்திற்கு கடத்திச் சென்றிருக்கிருர்கள் என்பது தெரிய வருகிறது.

திருமதி டாக்டர் மோனிகா பெல்ட்டன் அவர்களால் கூறப்பட்ட செய்திகளில் நூற்றுக்கு நூறு பங்கு கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்று சொன்னல் அது மிகையாகாது. நமது அறிஞர் அண்ணு அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குமுன் 'ஒரு காலத்தில் எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் நம்மைப் பாராட்டத்தான் போகின்றன' என்று கூறினர்கள். வருமுன் கூறும் நாட்டின் நல்ல காவலரின் வாய்மை இன்று பொய்க்கவில்லை. கிண்டலும் கேலியும் செய்த அதே பேனு முனைகள் இன்று நமது கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும், அரசியல் நாகரிகத்தையும் புகழ்ந்து எழுதத் தலைப்பட்டு விட்டன.

அன்று மனேன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் ''தெக்கனமும் அதிற்சிறந்த திராவிட நற்றிடுநாடும்'' என்று கூறியகூற்றுக்கு இன்று புத்துரைகளும், வியாக்கியானமும் கூறத் தலைப்பட்டு விட்டனர்.

இங்கே ஜனநாயகப் பண்பாடுகள் கைக்கொள்ளப்படவில்லை. கட்சி சார்பில்லாது சுயேச்சையாகச் சில தான்தோன்றிகள் நின்று சூரியன் சின்னத்தைக் கேட்டு வாங்கப் பார்த்தனர். இந்த அவல நிலை தமிழகத்தில் இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது.

மேலும் பல வேறு நாட்களில் வாக்குப் பதிவு செய்யும் முறை நீங்க வேண்டும். பதிவான பிறகு முடிவுகாண நாட்கணக்கில் காத்திருக்கும் இழிநிலையையும் போக்க வேண்டும். மோனிகா பெல்ட்டனின் அறிவுரை இதைத்தான் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

★ தெரியுமா? ★

குற்றவாளிகள் :

●● உலகத்தில் எந்த விதக் குற்றங்கள் அதிகம் என்று கருது கிறீர்கள்? கொலையா? கொள்ளையா? கற்பழித்தலா? ஏமாற்றுதலா?—இவை எவையுமே இல்லை. சாலையில் போக்கு வரத்து விதிகளை மீறிய குற்றத்தைச் செய்தவர்கள்தான் **அதிகம்!**

—மொத்தம் தண்டிக்கப்பட்ட உலகத்தின் மொத்தக் குற்ற வாளிகளில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான்! இதில் பெரும் பங்கு மோட்டார் டிரைவர்கள்!

ரேடியோ டாக்டர்கள்!

●● லண்டன் பெரிய ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் டாக்டர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சட்டைப்பைகளிலே பேனாவைப் போன்ற ஒரு கருவியை வைத்திருக்கிறார்கள். அதிலே தேனீக்களின் ரீங்காரம் போன்ற ஒரு ஓசை எழும்போது குறிப்பிட்ட டாக்டர் பக்கத்திலிருக்கும் போனுக்கு ஓடுகிறார், தான் அவசரமாக விரும்பப்படும் 'வார்டு' எது என்பதைத் தெரிந்து கொள்ளுகிறார்.

—இதன் மூலம் ஒரு விநாடியில் ஒரு டாக்டரைப் பிடித்துவிட உதவும் அந்தப் பேனா போன்ற கருவி ரேடியோவினால் இயங்குகிறது!

தொலைபேசியில் உருவம்!

●● தொலைபேசி என்கிற 'போனில்' இதுவரை நாம் நமக்கு வேண்டும் ஒருவரோடு பேசத்தான் முடியும்! ஆனால் இப்போது அதிலே ஒரு மாபெரும் புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

—இனிமேல் தொலைபேசியைக் கையிலெடுத்துப் பேசினால் எதிர்முனையில் அது எவ்வளவு நூறு மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் கவலையில்லை; பேசுகிறவர்களுடைய உருவமும் தோள்பட்டைவரை தெரியுமாம்! இதுபோன்ற தொலைபேசிகளை அமெரிக்காவிலுள்ள 'பெல் டெலிபோன் கம்பெனி' தயாரித்து சோதனைகளிலே வெற்றி கண்டிருக்கிறது.

வழியொன்று சொல்லாயோ

முதல்வன்

வியாபாரசம்ப; தமாக சென்னைக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனைவி என் அறைக்கு வந்தாள். பதுங்கிப்பதுங்கி நடப்பது போல் மெதுவாக

அவள் நடந்து வந்தது எனக்கு விந்தையாய் இருந்தது. தன் திருக் குமாரனை இடுப்பில் வைத்துக் கொண்டு, என்னைப் பார்த்து, தன் பல்லெல்லாம் தெரிய சிரித்தாள். அந்தச் சிரிப்பு இயற்கையாக இருக்க வில்லை. பின் தன் மகனை உச்சி முகர்ந்தாள். அதன் பின் என்னைப் பார்த்தாள். அதுவும் இயற்கையாக இல்லை. அவள் செய்கைகள் எனக்குப் புதுமை யாகத் தோன்றின.

''என்ன, இந்திரா! ஏன் அப்படி பாக்கறே?'' என்று கேட்டேன்.

''பூ, இவ்வளவுதானு! நான் உங்களை என்னமோன்னு நினைச்சுகிட்டிருந்தேன். கொஞ்சம் இருங்கள்'' என்று சொல்லி விட்டு உள்ளே ஓடிப்போய் ஒரு காகிதக் கட்டை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தாள். அந்தக் காகிதக் கட்டில், அகநானூற்றில் பாலைத் திணையில் சிலவற்றை எடுத்து, கோர்வை யாக எழுதி வைத்திருந்தேன்.

''இதுக்கும், நீ என்னைப் பார்த்ததற்கும் என்ன சம்மந்தம்?'' என்றேன்.

''இன்னும் புரியவில்லையா? அதை முழுதும் படியுங்கள்'' என்றாள்.

அவள் கட்டளையை சிரமேற் கொண்டு அதைப் படிக்க ஆரம்பித்தேன்.

தலைவன் பொருள் தேட வெளியூர் புறப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் நிகழ்ந்தவற்றை தலைவனே கூறுவதாக அக் கட்டுரை அமைந்திருந்தது:—

பொருள் தேடுவதற்காக வெளியூர் புறப்பட வேண்டி அதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தேன். நான் வெளியூர் செல்லப் போவதை இன்றுவரை என் மனைவியிடம் கூறவில்லை. ஆனால் அவள் எப்படியோ அறிந்து கொண்டாள்.

''அத்தான், 'காதலுடைய வரைப் பிரிதல் அறநெறிக்குப் புறம்பானது, எனவே நான் உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன்' என்று களவுக் காலத்தில் சொன்னீர்கள்; இன்று வளமற்ற காட்டினையும் மேட்டினையும் கடந்து பொருள்தேடச் செல்வீர்களே யானால், நீங்கள் அன்று சொன்ன சொல் என்ன ஆவது?'' என்று கேட்பவள் போல் முகக்குறி காட்டினாள். அவளது கண்கள் கலங்கின. தன் மார்பில் தவழும் புதல்வியின் தலையில் சூட்டியிருந்த பூமாலையை முகர்ந்தாள். பெருமூச்சு விட்டாள். அவளது முகம் பொலிவற்றுப் போயிருந்தது. அதைக்காண எனக்கும் வருத்தம் மேலிட்டது.

போனமுறை நான் வெளியூர் சென்று திரும்பும்பொழுது என் மனம் பட்டபாட்டைஎண்ணினேன். வினை முடித்து கை நிறைய பொருள் சேர்த்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். குதிரைகளை வெகு வேகமாக முடுக்கினேன்.எப்பொழுது வீடு சேர்வோம் என்ற ஆவல் தாள வில்லை. இலுப்பை மரங்கள் நிறைந்த அந்தச் சிற்றூரைத் தாண்டி விட்டேன். சுருள் சுருளான கேசம் நெற்றியில் புரள, பூண்போட்ட பெரிய உலக்கைகளைக் கொண்டு, இள மங்கையர் நெல்குத்தும் ஒலியும், ஆந்தையின் அலறலும், மாறி மாறி கேட்கின்ற அந்த

மலைப் பிரதேசத்தையும் தாண்டி விட்டேன். மலைவாயில் கதிரவன் தஞ்சமடையும் நேரம்; இருள் சூழ்கிறதே என்ற கவலை சிறிதுமில்லாது தேரை ஓட்டிக் கொண்டிருந்தேன். நானே இவ்வளவு அவசரத்துடன் போகிறேனே என்று என் நெஞ்சு சும்மாயிருக்கக்கூடாதா?—'நீ மிகவும் மெதுவாக வருகிறாய்' என்று பழி கூறிவிட்டு என் நெஞ்சு என்னை விட்டு அதிவேகமாக ஓடி விட்டது. எங்கே?

மாண்புற உயர்ந்த ஒரு வீடு. அங்கே பல்லியின் ஒலி கேட்டது. அது கேட்ட என் துணைவி, நல்ல சகுனம் என்று குதூகலித்துக் கொண்டிருந்தாள். ஆண் கன்றுகள் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாலை; மலர் மணம் கமழும் சோலை; இன்பம் சூழும் வேளை; அங்கே சென்றது என் நெஞ்சு! தன்னிரு கரங்களாலும் அவளது கயல் விழிகளைப் பொத்திற்று. அவள் 'அத்தான்' என்றாள். உடனே அவளது வளைக்கரம் தன்னைச் சூழ இறுக அணைத்துக் கொண்டது என் நெஞ்சு!

எனது நெஞ்சின் உணர்ச்சியே இப்படி இருந்தால், இளகிய இதயம் படைத்த என் மனைவி, என் பிரிவை எப்படித் தாங்குவாள்? கண்களினின்றும் நீர்வழிய என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வைக்குத்தான் எவ்வளவு சக்தி இருக்கிறது! அந்தப் பார்வையிலிருந்து என்னால் மீள முடியவில்லையே. இப்பொழுதுதான் நினைவிற்கு வருகிறது, நேற்று இவளுடைய தோழி இவளிடம் ஏதோசொல்லிக் கொண்டிருந்தாள். தோழி சொன்னாள்:

விசித்திரத் திருமணம்!

திருமணமென்றால் முக்கிய உற்றாரும், சுற்றாரும் நிச்சயம் ஒன்று சேரக் கூடுவர். அனைவரும் கலந்து கொள்ளாதது தவறு — என்றும் கருதுவர். அப்படி இருக்கையில் தம்பதிகள் இருவரில் ஒருவர் இல்லாமலேயே திருமணம் நடைபெறும் அதிசய முறையை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? காஷ்மீரில் அத்தகைய விசித்திரம் நடைபெறுகிறது என்று கூறுகிறார், ஒரு காட்டிலாகா ஊழியர்:

மணமகள் இல்லாமலேயே அங்கு திருமணம் சிறப்பாக நடந்துவிடுமாம்.

மணமகளானவள் அண்டை வீட்டிலோ அல்லது பக்கத்து ஊரிலோ தங்கிக் கொண்டு கலியாணத்திற்கு தனக்காக ஒரு பிரதிநிதியை அனுப்பி வைப்பாளாம். அந்தப் பிரதிநிதி யாரென்று யூகிக்கிறீர்களா? ஆம்! ஒட்டகம்! திருமணப் பந்தலிலே மணமகளின் சேடியாக — மணமகனுக்கு ஜோடியாக—ஒட்டகம் பகட்டாக அலங்கரிக்கப்பட்டு கம்பீரமாக காட்சி அளிக்குமாம்.

"நாம் வருந்தி அழுவோம் என்று தெரிந்தும் உன் கணவர் பொருள் தேடப் புறப்பட்டு விட்டார். அது அவருடைய கடமை என்று நீயே சொல்லுகிறாய். உனக்கு மன உறுதி நிறைய இருக்கிறது. இருந்தும் அவர் போகாமலிருக்க ஒரு வழி சொல்லச் சொல்கிறாய். கொற்கைத் துறைமுகத்தில் கிடைக்கும் முத்துக்களுக்கு நல்ல ஒளியுண்டு. வேங்கட மலையில் உலவுகின்ற பெரிய யானைகளைப் படையாகக் கொண்டு, நிகரில்லாத தம் தலைசிறந்த வீரத்தினால், அறநெறி பிறழாது, பாண்டியர்கள் கொற்கைத் துறையை காப்பாற்றி வருவதால், அங்கு கிடைக்கும் முத்துக்கள் மிகச் சிறந்தவைஎன்று போற்றப்படுகின்றன. அந்த முத்துக்களைப் போன்ற பற்களை கொண்ட உன் பவள வாயால் அவரைத் தடுத்து நிறுத்த முடியுமா? முடியவே முடியாது. எனினும் அவரைத் தடுக்க முடியும்! பின்பு தேனாக மாறக் கூடிய தெளிந்த நீரை தன்னகத்தே வைத்திருக்கும் தண்டிலிருந்து மலரும் குவளை மலர் எத்தனை அழகாய் இருக்கிறது. அந்த அழகை நீ உனது விழிகளின் அழகால் சிதைத்து சிறுமைப்படுத்தி விட்டாய். அரசர்களுக்கெல்லாம் வெற்றி தேடித் தரும் குருதி தோய்ந்த சீரிய வேல்களின் கூரிய முனைகளை, நீ உனது விழிகளின் கூர்மையால் மழுங்கச் செய்து விட்டாய். அவ்வளவு அழகும் சக்தியும் வாய்ந்தன உன் கண்கள். அந்த மைதீட்டப்பட்ட விழிகள் உன் கணவரின் பிரிவை எதிர்த்து, மாறுபட்ட 'என்னை தனியே விட்டுப்பிரிந்து போகாதீர்' என்ற கெஞ்சல் இருக்கும்; அந்தக் கெஞ்சலை அவர் கட்டளையாகக் கருதுவார். உன் இதயத்தின் தாபத்தை அப்பார்வை காட்டும். அவர் அந்தத் தாபத்தைத்தான் உனக்குச் செய்யும் பாபம் என்று நினைப்பார். உனது விழிகள் காட்டும் பாசத்திற்கு தான் மோசம் செய்வதாக எண்ணி தன் பிரயாணத்தை நிறுத்தி விடுவார்." என்று தோழி நேற்று கூறியதை செயலாற்றும் முறையில்தான் இன்று இவள்என்னை இப்படிப் பார்க்கிறாள். என்றால் அந்தப் பார்வையிலிருந்து விடுபட முடியாமல் தவித்தேன். அப்பொழுது தோழி அங்கே வந்தாள். என் வருத்தமெல்லாம் அவள்மீது ஆத்திரமாக மாறியது. அவள்மீது வசை பாட எண்ணினேன். அதற்குள் தோழியே பேச ஆரம்பித்து விட்டாள்:

"பொருள் தேடிவர வெளியூர் புறப்படுவது போலிருக்கிறது. உங்களுக்கு நமது பாண்டியத் தளபதி 'பண்ணி' என்பவனை ஞாபகமிருக்கிறதா? அவன் தன் ஓய்வு நாட்களில் காடுகளுக்குச் சென்று நிறைய யானைகளைப் பிடித்து வந்து அவற்றை நன்றாகப் பழக்கி வைத்திருந்தான். அவ்வளவு யானைகளையும், இரவலர்க்குத் தானமாகக் கொடுத்தான். அதுபோல நீங்கள் தேடி வரும் பொருள் முழுவதையும் உங்களுக்கென்றே வைத்துக் கொள்ளாமல், ஏழை எளியவர்களுக்கும் கொடுப்பீர்கள். எனவே, நீங்களும் பொருள் தேடி வந்தால், அந்தப் பொருளினால், எல்லோருக்கும் பயனுண்டு. எனவே உங்கள் பிரிவை நாங்கள் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் எப்பொழுது திரும்பி வருவீர்கள் என்று நிச்சயமாகக் கூற

முடியாது. கரும்பின் தண்டின் மீது உட்கார்ந்து கொண்டு நாரைகள் கத்துகின்ற சப்தத்தைப் போல், பேரிரைச்சலுடன் வீசுகின்ற வாடைக் காற்று நிறைந்த பனிக் காலத்தில் நீங்கள் திரும்பி வந்தாலும் வரலாம். அல்லது, நெற்கதிர்கள் வரப்பிலே சாயும்படியாக வீசுகின்ற வாடைக் காற்று நிறைந்த அந்தப் பனிக் காலத்தில் வர முடியாமல் போனாலும் போகலாம். அது சமயம் நீங்கள் வேற்றூரிலும் இருக்கலாம். விண் முகட்டின் தெற்கிலே மேகங்கள் ஒன்று திரண்டு மழையைக் கொட்டும், மழைக் காலத்தைப் போல் அந்தப் பருவம் மிகவும் ரம்யமாக இருக்கும். அந்த வேளையில் நீங்கள் உங்கள் மனைவியுடன் இருந்தால் அவள் உமக்கு ஒரு துணையாக இருப்பாள். அப்பொழுது மஞ்சத்தில் மங்கையிவளுடன் நீங்கள் அனுபவிக்கும் இன்பம் உமக்குக் கிடைக்காமலும் போகலாம். அதனால் பரவாயில்லை; எப்படியோ நீங்கள் நல்லபடியாக கைநிறைய பொருள் சேர்த்து வந்தால் போதும். பொருள் தேடுவதில் உங்களுக்கு எந்த விதமான இடையூறும் நேராமலிருந்தால் அதுவே போதும்'' என்று விடை கூறும் முகத்தான் இனிய வார்த்தைகள் பேசும் இந்தத் தோழியிடம் நான் எப்படி சுடுசொல் பேசுவேன்! எனவே, அவளைத் திட்ட வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டேன்.

என் மனைவியோ இன்னும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கையில் தவழ்ந்த என் புதல்வியோ 'அத்தா, அத்தத்தா,' என்று என்னைப் பார்த்து மழலை பேசினாள். வெளியே, புறப்படுவதற்குத் தயாராக தேர் நின்று கொண்டிருந்தது. தேர்ப்பாகனோ 'புறப்படலாமா' என்ற பாவனையில் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். தோழியோ, தான் முதல் நாள் சொன்னபடி, என் மனைவியின் பார்வையைமீறி நான் போய் விடுவேனா என்பதைக் காண வேண்டி இளநகை இதழோரத்தில் அரும்ப, குறும்பாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நானோ எவரையும் பார்க்கத் தைரியமில்லாதவனாகி, ஒரு பெண்ணைப் போல் நிலம் நோக்கி நின்றேன். வேறு என் செய்வேன் நான்? மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல், பாவையவளின் பார்வைக்குக் கட்டுப்பட்டு நின்றேன்.

என் மனமோ, அள்ளிச் சொருகிய கூந்தலிலே மல்லிகை மணக்க, அழகுத் திருமேனியெங்கும் வெண் சுண்ணம் மணக்க, நின்றாடும் இரு விழிகள் இன்பத்தைக் கொட்ட, செவ்விதழ்கள் இரண்டும் அமுதைக் கொட்ட, கோடி பல கொட்டினாலும் காணக்கிடைக்காத கொள்ளை அழகு பொலிவு தர இன்முகங்காட்டி என் உள்ளம் கொள்ளை கொண்ட அழகுத் தெய்வமே! உன் பார்வையினின்று மீள வழியொன்று சொல்லாயோ!' என்று கெஞ்சிக் கொண்டிருந்தது.

இதைப் படித்து முடித்ததும் இந்திராவை நோக்கினேன். அவள் என்னைப் பார்த்து, ''இப்ப நீங்க ஏன் அப்படிப் பார்க்கறீங்க? நான் ஒன்னும் உங்களைப் போகவேண்டாமென்று சொல்லவில்லை. ஏங்க, மேட்ராசுக்குத்தானே போறீங்க! ஜாலியா போய்ட்டு வாங்க'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள்!

புகழ்பெற்ற எழுத்தாளன்

"பிரபல புத்தகப் பதிப்பாளரும், தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவருமாகிய திரு. கமலநாதன் அவர்களின் இருபத்தி ஐந்தாவது நாவல் வெளியீட்டை முன்னிட்டு ஒரு விழாவாகக் கொண்டாடி அவரையும் கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி அன்று மாலையில் நடைபெறும் தேநீர் விருந்தில் தாங்களும் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்'' — அழைப்பிதழின் வாசகத்தைப் படித்து முடித்த சங்கரன் வெட்ட வெளியைப் பார்த்துக்கொண்டு ஒரு வரட்சிச் சிரிப்பை உதிர்த்தார். அவர் கமலநாதனின் காரியதரிசி. எல்லோருக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தது போலவே, கமலநாதனின் காரியதரிசிஎன்பதற்காக அவருக்கும் விழாவை ஏற்பாடு செய்திருந்த பிரமுகர்கள் தெரியப்படுத்தியிருந்தனர். ''தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர்'' —அவர் மனதுள் இந்த வாசகம் திரும்பத் திரும்பத் தோன்றித் துளைத்தது. ஐந்து வருடங்களுக்கு முந்தைய அவர் வாழ்வின் வரலாறு—கமலநாதனும் சம்மந்தப்பட்ட ஒன்றுதான், அவர் மனக்கண் முன் திரையிட்டு அவர் கண்களைக் கண்ணீரால் நனைத்தது.

அப்பொழுது கமலநாதனுக்கு இலக்கிய உலகத்துடன் அறிமுகம் ஒரு புத்தகப் பதிப்பாளர் என்ற முறையில் இருந்ததே ஒழிய, வேறு எவ்வகையிலும் இல்லை. வெவ்வேறு வர்த்தகத் துறையில் ஈடுபட்டு பொருள் நிறைய சம்பாதித்திருந்த அவர் புத்தகப் பதிப்புத் தொழிலையும் ஆரம்பித்திருந்தார். எழுத்தாளர்களுடனும், பத்திரிகைகளுடனும் அதிக அளவில் பழகித் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார். கமலநாதனுக்கு வெகு நாளாகவே ஒரு ஆசை; தாமும் ஒரு எழுத்தாளர் எனப் பெயரெடுத்து, பல்வேறு மனிதர்களுக்கிடையே, பிறரால் 'கௌரவப்பார்வை'யுடன் கவனிக்கப்படும் நாள் வராதா என்று ஏங்கினார். ஆசை இருந்ததே யொழிய அதற்கு வேண்டிய கற்பனைத் திறன் கொஞ்சங்கூட அவரிடம் இல்லை. அவருக்குத் தோன்றிய எண்ணங்களும், அருமையான யோசனைகளும் திரும்பத் திரும்ப வர்த்தகத் துறையில் சுழன்றனவே தவிர, பேனாவை எடுத்து கதை அல்லது கட்டுரை எழுத என உட்கார்ந்தால் எதுவும் ஓடவில்லை. பிரபல ஆசிரியர்களின் நாவல்கள் புத்தகங்களாகப் பதிப்பிட அவரிடம் வரும்பொழுதெல்லாம் அவருக்கு உள்ளம் பொறுமும். ''நாம் நல்ல பதிப்பாளர் என்று

வி. ஜி. விசுவநாதன்

பெயரெடுத்துவிட்டோம். நாமே ஒரு நல்ல எழுத்தாளர் என்றும் இருந்தால்—எப்பேர்பட்ட புகழுடனும் பெருமிதத்துடனும் தமிழ் நாட்டிலே பவனி வரலாம்!''

இப்படிக் கமலநாதன் ஆகாசக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த நேரத்தில்தான் சங்கரன் அவரிடம் வந்து சேர்ந்தார். தாடி வளர்ந்த முகம்; கிழிந்த ஜிப்பா; வெறிச்சோடிய கண்கள்; இவற்றுடன் கனத்த கையெழுத்துப் பிரதிகளை மூட்டையாகக் கட்டிக் கொண்டு அவர் வந்து நின்றபொழுதே கமலநாதன் ஊகித்து விட்டார், பெரும்பாலோர் சேர்ந்திருந்த பட்டினிப் பட்டாளத்தில் ஒருவர் அவர் என்று. சங்கரன் ஒரு லட்சிய எழுத்தாளர். நல்ல நல்ல சிறு கதைகளெல்லாம் படைத்து அவை அச்சேருதா என்று ஒவ்வொரு பத்திரிகை ஆபீசுக்கும் நேரிலும் தபாலிலும் படை யெடுத்துத் தோல்வியே கண்டவர். பாவம், அப்பாவி. எங்கெங்கோ முயற்சித்து எல்லாவற்றிலும் தோல்வியே கண்டவர். நீண்ட நாவல்கள் எழுதிக் கொண்டு பல பதிப்பாளர்களிடம் சென்றார். பலன் நிற்பயன்தான். அவர் எழுத்து ஆசை அவரை வேறு துறையிலும் பிழைப்புக்கு வழிகாண விரும்பச் செய்யவில்லை. அவருடைய அயராத நம்பிக்கை மீண்டும் மீண்டும் எங்காவது படையெடுக்கத் தூண்டிக் கொண்டிருந்தது. இத்தகைய ஒரு படையெடுப்புதான் அப்பொழுது கமலநாதன் காரியாலய விஜயமும்!

சங்கரன் தன் சோகக் கதையைக் கூறி முடித்து கையில் கொண்டு வந்த ஒரு நாவலின் கையெழுத்துப் பிரதியையும் கமலநாதனிடம் சமர்ப்பித்தார். அவரும் அவர் குடும்பமும் கமலநாதனையே நம்பி யிருப்பதாகக் கல்லும் உருகக் கூறி முடித்தார். கமலநாதன் ''கையெழுத்துப் பிரதியைப் படித்த பிறகே அதைப் பிரசுரிக்கத் தம்மால் இயலுமா என்று சொல்ல முடியும்'' எனக்கூறி பிரதியை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டார். இரண்டுநாட்கள் கழித்து தம்மைச் சந்திக்கும்படி கமலநாதன் அவரிடம் சொன்னார்.

வீட்டில் சங்கரனின் நாவலைப் படித்து முடித்த கமலநாதன் அவர் ஒரு நல்ல சரக்குள்ள ஆசாமி, விளம்பரம் பண்ணப்படாத வாசனைப்பூ வாடி வதங்கிக் கொண்டிருக்கிறது என்று எளிதில் உணர்ந்தார். அப்பொழுதுதான் அவர் மனதில் ஒரு பெரிய திட்டம் உருவாகியது. சங்கரனைத் தம்முடனேயே தன் காரியதரிசியாக மாதச் சம்பளத்தில் நியமித்துக் கொள்ளுவது; அவர் எழுதிய,

---



தொடர்ந்து கண்களை இமைக்காமல் இருப்பது முடிகிற காரியமா? நினைத்துப் பார்த்தாலே மலைப்பாகத் தோன்றுகிறதல்லவா? ஆனால், நியூயார்க்கைச் சேர்ந்த மேரின் அர்ட்டிஸ் என்ற மங்கை நீண்ட நேரம் கண் இமைக்காமல் இருப்பதாகப் போட்டி ஒன்று வைத்து, ஆயிரம் டாலர் பரிசையும் பெற்றாளாம். அதற்காக அவள் தன் இமைகளை அசைக்காமல் இருந்த நேரம் இருபத்து நான்கு மணி—ஒரு முழுநாள்!

எழுதப் போகும் சிறு கதைகள், நாவல்கள் எல்லாவற்றையும் தன் பெயரில் வெளியிட உரிமையை வாங்கிக் கொள்ளுவது என்று அவர் தீர்மானித்துக் கொண்டார். எப்படியாவது தானும் ஒரு பெயர் பெற்ற எழுத்தாளர் ஆக வேண்டும் எனறே கனவு கண்டு கொண்டிருந்த அவருக்கு இப்படிக் குறுக்கு வழியில் புகழ்பெறுவது ஏன் தவருகப் படுகிறது? சங்கரன் தன் திட்டத்துக்கு உடன்படா விட்டால் என்ற சம்சயம் கொஞ்சம் கொஞ்சம் அவர் உள்ளத்தில் ஏற்பட்டது. சாமர்த்தியமாகப் பேசி, அவர் வறுமையையும் நன்ருகப் பயன் படுத்தி அவரை இணங்கச் செய்து விடலாம் என்று கூடவே உறுதியும் தோன்றியது.

சங்கரனும் இரண்டு நாள் கழித்து வந்தார். கமலநாதன் தன் திட்டத்தை விவரித்த பொழுது சங்கரன் தயங்கினுர்.

''இதோ பாரய்யா, நான் சொல்றபடி நடந்து கொண்டீர்ளு, மாதா மாதம் சுளையாக நூற்றைம்பது ரூபாய் சம்பளமாகக் கொடுப்பேன். வெளியுலகுக்கு நீர் என் காரியதரிசி. உம் வேலே யெல்லாம் மாதா மாதம் ஏதோ ஐந்தாறு சிறு கதைகள்; வருஷத்திற்கு ஓரிரண்டு நாவல்கள் எனக்கு எழுதிக் கொடுப்பதுதான். நான் தரும் இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்து விடாதேயும். பல இடங்கள் படை எடுத்து எங்கும் தோல்வியே கண்டுள்ள உம் கசப்பான அனுபவம் இந்த என் திட்டத்துக்கு நீர் ஒப்புக் கொள்ளுவதுதான் புத்திசாலித் தனம் என்று கண்டிப்பாய் உணர்த்தும்'' என்றெல்லாம் கமலநாதன் பேசி முடித்தார். சங்கரன் பிறகு அதிக நேரம் யோசிக்கவில்லே. நிச்சயமான வழியில் மாதச் சம்பளத்திற்கு ஒரு ஏற்பாடு; தம் இலக்கியச் சேவையும் மறைமுகமாக வேனும் தொடர்ந்து நடைபெற வழி என்ற காரணங்களெல்லாம் கண்டு, கமலநாதனின் திட்டத்திற்கு ஒத்துக் கொண்டார்.

சங்கரனின் ''அமைதி பிறந்தது'' என்ற நாவல் கமலநாதனின் கைக்கு மாறியது. அமர்க்களமான முறையில் மூவர்ணப் போஸ்டர்கள் தயாரித்து தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களி லெல்லாம் ஒட்டச் செய்து, நாவல் வெளிவருவதைப் பற்றி விளம்பரம் செய்தார். பிரபல பத்திரிகைகளிளெல்லாம் ''விரைவில் எதிர் பாருங்கள்! கமலநாதன் எழுதிய அற்புத நாவல் அமைதி பிறந்தது!'' என்றெல்லாம் அவ்வப்பொழுது விளம்பரம் கொடுத்தார்.

அற்புத கெட்—அப்புடனும், அழகிய படங்கள் உள்ளடங்கியதாகவும் கொண்ட 'அமைதி பிறந்தது'க்கு நல்ல வரவேற்பு தமிழ்நாட்டு மக்களிடமிருந்து கிடைத்தது. உண்மையாகவே நாவலும் நல்ல முறையில் எழுதப்பட்டிருந்ததாலும், தவிர, அதை எழுதியவர் தங்களுக்கெல்லாம் மிகவும் வேண்டியவரானபடியாலும் பிரபல பத்திரிகைகள் எல்லாவற்றிலும் ஒரே புகழ்ச்சி மயர்தான், நாவலேப்பற்றிய அவற்றின் விமர்சனங்களில். கமலநாதனும் எழுத்தாளர் முகாமில் சேர்ந்து விட்டார்!

பிறகு சங்கரனிடமிருந்து கிடைக்கப்பெற்ற அநேக சிறு

கதைகளை பல பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார். மகிழ்ச்சியுடன் பத்திரிகைகளெல்லாம் ஏற்றுக்கொண்டு அவற்றைப் பிரசுரித்தன. அவ்வப்பொழுது நாவல்களையும் பிரசுரித்து வந்தார் கமலநாதன். புகழும் பெயரும் மேலும் மேலும் கமலநாதனை நாடி வந்தன. சொற்ப காலத்துக்குள்ளே சிறுகதை மன்னன், எழுத்துலகச் சிற்பி என்றெல்லாம் பட்டங்கள் கிடைக்கப் பெற்றவராகிவிட்டார்.

சங்கரன் முதலில் கமலநாதன் ஏற்பாட்டுக்குச் சம்மதித்தபோதிலும் நாளாக ஆக அதிகமாக மன வேதனைப்பட ஆரம்பித்தார். தான் பெற்ற குழந்தையைத் தரணி போற்றிப் பாடும்பொழுது, அதன் தாய் தானே தான்—எனக்கூற முடியாமல் தவிக்கும் அன்னையின் நிலையை ஒத்திருந்தது அவர் துடிப்பு. மாதாமாதம் வெறும் நூற்றைம்பது ரூபாயை "பிச்சை" அளித்துவிட்டு, தன்னிடமிருந்து பெருத்த அளவில் சுரண்டப்படுகிறது என்று அவர் உள்ளம் கசப்பு அடைய ஆரம்பித்தது. அவருக்கு இடையே ஏற்பட்ட விசித்திரமான அனுபவங்கள் பல. அவற்றில் ஒன்று வருமாறு:

கமலநாதனைத் தேடிக் கொண்டு வந்திருந்த ஒரு பிர



பல பத்திரிகாசிரியர் அவர் இல்லாததால் சங்கரனுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''ஏன் சார், உங்கள் முதலாளி இவ்வளவு அழகாக சமூகத்தின் பல பிரச்சினைகளை அநேகக் கோணங்களில் தத்ரூபமாக, அவற்றையெல்லாம் அனுபவத்தில் கண்டறிந்தவர் போல சித்தரிக்கிருரே, என்ன கற்பனை உள்ளம் அவருக்கு. அவருடன் பேசும்பொழுது ஒருவருக்கும் புலப்படாது அவர் இத்தகைய அதிசய கற்பனையுள்ளம் படைத்த மேதாவி என்று!'' என பேச்சினிடையே குறிப்பிட்டார் பத்திரிகாசிரியர்.

''எப்படி ஐயா, அவர் பேச்சில் அந்தக் கற்பனையையும் புத்திசாலித்தனத்தையும் காண முடியும்? அதற்கும் பின்னுலிருந்து இந்த சங்கரனைப்போல ஏமாந்த சோணகிரி ஒருவன் பிளே-பாக் மாதிரிப் பேச, அவர் சொந்தக் குரலில் பேசுவதுபோல பிறருக்குத் தோற்றமளிக்கக்கூடிய ''அரேன்ஞ்மென்ட்'' செய்ய முடிந்தால், அப்பொழுது பார்க்கலாம் கமலநாதனின் கற்பனையையும், புத்திக்கூர்மையையும் அவர் பேச்சுக்களிலும் தென்படுவதை'' என்று சொல்ல, குமுறிக் கொண்டிருந்த சங்கரனின் உள்ளம் துடித்தது. ஆனுல் அவர் குடும்பம்..........? வெறும் அசட்டுச் சிரிப்பையே பத்திரிகாசிரியருக்குப் பதிலாகத் தர முடிந்தது அவரால்.

வருடங்கள் ஐந்து உருண்டோடின. சங்கரன் எழுதியதும் வெளியுலகுக்கு கமலநாதனுல் உருவாக்கப்பட்டது என்று அறிமுகமானதுமான இருநூற்றி ஐம்பது சிறுகதைகளும்; இருபத்திஐந்து நாவல்களும் வெளிவந்துவிட்டன. கமலநாதன் கொடிகட்டிப் பறந்தார். அவருடைய இருபத்தி ஐந்தாவது நாவலான ''சாவின் எல்லையில்'' என்ற நாவலுக்குக் கிடைத்த வரவேற்பு மற்ற எல்லாவற்றிற்கும் கிடைத்தவற்றைவிட மகத்தானது. இந்த நாவலின் வெளியீட்டை ஒட்டித்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி அவர் நண்பர்கள் சிலர் சேர்ந்து ஒரு தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

''சாவின் எல்லையில்'' எல்லோராலும் ஒருமுகமாகப் பாராட்டப்பட்டது. சொந்த நாட்களுக்கெல்லாம் தில்லி சாஹித்ய அகாடமியினரால் அவ்வருஷத்தில் தமிழில் வெளிவந்துள்ள சிறந்த நாவலாக ''சாவின் எல்லை'' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தென்றும், அதற்காகப் பரிசுத் தொகையாக ரூபாய் ஐயாயிரம் அதன் ஆசிரியர் சங்கரனுக்கு அளிக்கப்படும் என்றும் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. புகழ் மலையின் உச்சியில் நின்ருர், சங்கரன் இப்பொழுது.

ரூபாய் ஐயாயிரம் வந்தவுடன் நியாயமாக அதைத் தன்னிடமே தந்துவிடுவார் அவர் என்று நம்பினுர் சங்கரன். ஆனுல் பணம் வந்த பிறகு அவராகத் தன்னிடம் தர முன்வராததால், துணிச்சலுடன் கமலநாதனையே கேட்டார்.

''சாகித்திய அகாடமியாரிடமிருந்து வந்துள்ள ஐயாயிரம் ரூபாய் நியாயமாக எனக்குத்தான் சேரவேண்டும். ஆசிரியரின் சிறந்த கற்பனைத் திறனை

போர்க்களத்தில் தனது முகாமிலிருந்த அதிகாரியிடம் ஓடிவந்தான் ஒரு சிப்பாய்! தன் மனைவியிடமிருந்து கடிதம் வந்திருப்பதாகவும், உடனே 'லீவ்' வேண்டுமென்றும் சொன்னான்.

“நாட்டைவிட அது முக்கியமா? அது துணையின்றி தவிக்கிறது!” என்றார் அதிகாரி.

“நாட்டுக்கு பல படைகளே துணையிருக்கிறது! ஆனால் என் மனைவிக்கு நான் ஒருவன்தானே துணை!” என்றான் சிப்பாய். அதிகாரி 'லீவ்' கொடுத்துவிட்டார்.

யும் இலக்கியச் சேவையையும் பாராட்ட அளிக்கப்பட்ட அப்பணம் “சாவின் எல்லையில்” நாவலின் உண்மை ஆசிரியனாகிய என்னைச் சார்ந்ததே!”

சங்கரன் இதற்கெல்லாம் மசியவில்லை. “எதற்காக ஐயா, அந்த ஐயாயிரத்தை உம்மிடம் கொடுப்பது? அதெல்லாம் சல்லிக் காசு அனுவசியமாக எதிர்பார்க்க வேண்டாம். உமக்குத்தான் மாதாமாதம் நூற்றைம்பது ரூபாய் கணக்காகக் கொடுத்துவிடுகிறேனே” என்று கண்டிப்புடன் பதிலளித்தார் அவர்.

அடக்க முடியாத ஆத்திரத்துடனும், ஏமாற்றப்பட்டோமே என்று பொங்கியெழுந்த மனக் கொந்தளிப்புடனும் திரும்பினார் சங்கரன். இதுகாறும் தம்மை எவ்வளவோ சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டவர் ஆவேசம் கொண்டவரானார். கமலநாதனின் உண்மை சொரூபத்தை வெளியுலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும்; புகழின் உச்சியில் வீற்றிருப்பதால் இறுமாப்புடன் விளங்கிய அவரை, அதள பாதாளத்துக்குத் தள்ளிவிட வேண்டும் என்று உறுதி பூண்டார் சங்கரன். அவர் பேனாவை — அதுதானே அவர் நம்பியிருக்கும் ஆயுதம் — எடுத்தார். கமலநாதனையும் தன்னையும் ஒட்டி நிஜ வாழ்க்கையில் நடந்த இந்தச் சம்பவத்தையே பொருளாக வைத்து நடைச் சித்திரம் ஒன்றைத் தீட்டினார். அதில் வரும் பாத்திரங்களுக்கெல்லாம் கமலநாதன், சங்கரன் என உண்மைப் பெயர்களையே இட்டார். சொந்த அனுபவமல்லவா! உள்ளமுருக்கும் நடையுடன், கமலநாதனின் வஞ்சகச் செயலை விவரித்துவிட்டு முடிவில் இப்படியும் மட்டரகமான வழிகளில் இறங்கி தங்கள் பெயர் விளங்கச் செய்ய வேண்டும் என்று திரியும் புல்லுருவிக் கூட்டம் தமிழ் நாட்டில் உருவாகத்தான் செய்கிறது—என்று கோபமாகக் கதையின் ஆசிரியர் கூறுவதுபோல முடித்தார். இனி பிரபல பத்திரிகை ஒன்றிற்கு அவர் எழுதியதை அனுப்புவதுதான் பாக்கி. “தன்பெயரிலேயே அக்கதையை அனுப்பினால் பிரசுரமாவது அநேகமாகச் சந்தேகம். பலனளிக்கும் வகையில் ஒன்றும் உடனே நடைபெறவும் முடியாது” என்று சங்கரன் யோசித்தார். உடனே கதை பிரசுரமாக வேண்டுமானால்

கமலநாதன் எழுதியதாக வழக்கம்போல அனுப்புவதுதான் சரியென்று எண்ணினார். சாதாரணமாக அவர் தாம் எழுதியவற்றையெல்லாம் கமலநாதனிடம் கொடுத்து விட, மற்ற பொறுப்பெல்லாம் கமலநாதன் கவனித்துக் கொண்டார். இப்பொழுது இந்த நடைச் சித்திரத்தை எழுதி முடித்தவுடன் கமலநாதனிடம் ஒன்றும் சொல்லாமல் நேரே 'உதயபானு' பத்திரிகைக்கு அனுப்பித்தார்.

உதயபானு பத்திரிகாசிரியர் கதையைப் படித்தபொழுது வெகுவாக ஆச்சரியப்பட்டார். கமலநாதனின் இந்தக் கற்பனை படிப்பவரை உலுக்கி எடுக்கும் தன்மையுடையது; போலி ஆசாமிகள் அனேகருக்குக் கொடுக்கப்படும் சவுக்கடி என்றெல்லாம் வியந்தார்! போனை எடுத்து அவசரம் அவசரமாகக் கூப்பிட்டுப் பேசினார்.

"மிஸ்டர் கமலநாதன், என்ன போடு போட்டிருக்கிறீர்கள், நேற்று அனுப்பியிருக்கும் கதையில்! கதையின் ஒவ்வொரு அணுவிலும் 'ரியலிசம்' வர வேண்டுமென்பதற்காக உங்கள் பெயரையே புகுத்திய 'டெக்னிக்'கைத்தான் என்னவென்று பாராட்டுவது! வாஸ்தவமாகவே உங்கள் வாழ்க்கையிலேயே இப்படி நடந்திருக்கிறதோ என்று மலைப்புத் தட்டும்படி செய்துவிடுகிறீர்களே."

ஆசிரியர் பேசியதின் தலைகால் புரியாமல் தவித்தார் கமலநாதன். ஆனாலும் புத்திசாலியல்லவா, சங்கரன் ஏதோ விஷமம் செய்திருக்கிறார் என்று ஊகித்து விட்டார். ஆகவே ஆசிரியர் பேசியதற்கெல்லாம் பட்டும் படாததுமான பதிலாகவும் அசட்டுச் சிரிப்பாகவும் போனில் பதிலளித்துவிட்டு பிறகு சங்கரனைக் கூப்பிட்டனுப்பினார்.

சங்கரனைக் கேட்டார், "என் அய்யா, உதயபானு பத்திரிகைக்கு நேற்று ஏதேனும் கதை என்னிடம்கூடக் காண்பிக்காமல் அனுப்பினரா? சங்கரன் ஒரு வெறியனின் சிரிப்போடு பேசினார். "ஆமாம்; உங்கள் வண்டவாளம் எல்லோருக்கும் தெரிய வேண்டாமா? எத்தனை நாள்தான் என்நிழலில் சுகமனுபவிக்க விடுவேன்! சாது மிரண்டால் காடு கொள்ளாது. நம் இருவர் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தையேதான் வைத்து கதை எழுதினேன்."—ஆவேசத்தால் உந்தப்பட்ட அவரால் தடுமாற்றத்துடன்தான் பேச முடிந்தது.

ஆனால் என்ன ஏமாற்றம்! கமலநாதன் ஆக்கிரோஷத்துடன் பாய்வதற்குப் பதிலாக ஏன் அப்படி பலத்த கேலிச் சிரிப்பு செய்கிறார்?

"ஹ்ஹஹ்ஹா .... ஹஹ்ஹ்ஹா ...."

பாவம், அப்பாவி சங்கரன் கண்டாரா, இந்தக் கதையையும் வழக்கம்போல கமலநாதனின் உயர்ந்த கற்பனைத் திறன் படைத்த மூளையிலிருந்து படைக்கப்பட்ட ஒரு பொருளாகத்தான் உலகம் உணரத் தொடங்கிற்று என்பதை!

"ஒழுங்காக மாதா மாதம் ரூபாய் தந்தேன். பிழைப்பைக் கெடுத்துக்கொண்டு விட்டீர். என்னிடம் நீர் முதலில் வந்தபொழுது எனக்கு வேண்டியிருந்ததெல்லாம் சிறந்த எழுத்

தாவர் என்ற பெயரும் புகழும் தான். அவையெல்லாம் கிடைத்துவிட்டன. இனித் துளிகூட உம் தயவு எனக்குத் தேவையில்லை. நான் இனிமேல் கதை, நாவல் என் பேரிலே வரவேண்டுமே என்று கவலைப்படவில்லை. ஆகவே இந்த நிமிஷமே வெளியே நடவும். உம்ம அபாரமான கற்பனை, அற்புதமான எழுத்துத் திறமை யெல்லாம் உமக்குச் சோறு போடுகிறதா பார்ப்போம்'' என்று வெற்றி கொண்ட மமதையுடன் வார்த்தைகளை வீசினார் கமலநாதன்.

எழுத்தாளர் சங்கரன் தள்ளாடிய நடையுடன் வெளியேறினார்.

ஒரு வருஷம் கழிந்தது. சங்கரன் தன் திறமையால் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார். தப்பாக நினைத்துக்கொள்ள வேண்டாம். கதை நாவல் இவை எழுதியல்ல; அப்படி ஏதேனும் தமிழ்நாட்டில் நடந்துவிட்டால் அது உலக மகா அதிசயங்களில் ஒன்றாக அல்லவா ஆகிவிடும்! ஹோட்டல் ஒன்றில் டிபன் சப்ளை செய்த சர்வர்கள், ஒவ்வொரு நபருக்கும் ஆன கணக்கை உரக்கக் கூவ, உடனுக்குடனே வேகமாக பில் எழுதும் உத்தியோகம்தான் சங்கரன் பிழைப்புக்கு உதவிக் கொண்டிருந்தது.

அதே சமயம் தமிழ் நாட்டின் பிரபல பத்திரிகை ஒன்றில் அதன் கேள்வி—பதில் பகுதியில் வந்திருந்த ஒரு கேள்வியும் அதன் பதிலும்:

கேள்வி: தமிழ் நாட்டின் தலைச்சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய கமலநாதன் ஏன் இப்பொழுதெல்லாம் கதையோ நாவலோ ஒன்றும் எழுதக் காணோம்?

பதில்: இலக்கிய உலகிலே தாம் ஒருவரே எத்தனை நாள் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுவது; இளம் எழுத்தாளர்களும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு முன்னுக்கு வரட்டும்—என்ற பெருந்தன்மையான நோக்கமே காரணமாக இருக்க வேண்டும் அவரது ஓய்வுக்கு, என்பது எங்கள் அபிப்பிராயம்.

●●●

பாழும் நம்பிக்கையே!

சூடானில் வசிக்கும் சிலுக் என்னும் பழங்குடி இனங்களிடையே ஒரு விசித்திர நம்பிக்கை வேரூன்றியிருக்கிறது. ஒரு காலத்தில் முதலைகள் அழகிய பெண்களா யிருந்தனவென்றும், ஏதோ ஒரு 'சாபக்கேட்'டினால் அவை முதலை ரூபத்தில திரிகின்றனவென்றும், 'நம்பி' சிலுக் பெண்கள் செயற்கை பொருட்களால் தங்களை அலங்கரிப்பதை விட்டுவிட்டு, மேனியழகுக்கு மினுமினுப்பும் கவர்ச்சியும் 'செக்ஸ்—அப்பீலு'ம் உண்டாக்க இறந்த முதலைகளின் இரத்தத்தைக் குடிக்கிறார்களாம். கழுதைப் பாலில் குளித்தால் அங்கம் 'தக—தக' என பத்தரை மாற்றுத் தங்கமெனக் காட்சியளிக்கும் என்று சிலர் நம்புவது போல, சிலுக் ஜாதியினர் முதலை இரத்தம் மேனி மினுமினுப்புக்கு 'பாலிஷ்' கொடுக்கிறதென நம்புகின்றனர்.

காதலும் கேள்வியும்

ஒரு நாள் பருவமடையாத பெண் ஒருத்தி தன் தாயைப் பார்த்து "அம்மா! காதல் காதல் என்று எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்களே, அப்படி என்றால் என்ன?" என்றாள்.

சிந்தித்துப் பார்த்துத் தன் மகள் கேட்ட கேள்விக்கு விளக்கம் சொல்ல முடியாமல் "மகளே! அதற்குப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை. உனக்குத் திருமணம் ஆன பிறகு நீயே தெரிந்து கொள்ளுவாய்" என்று தாய் சொன்னாள்.

ஆண்டுகள் பல கழிந்தன. மகளுக்குத் திருமணம் நிறைவேறியது. அவளுடைய கணவனும் அவளும் இன்பமாக நாட்களைக் கழித்துக் கொண்டு இருந்தனர். தாய்க்கு ஒரு யோசனை தோன்றியது. "மகளே! காதல் காதல் என்று எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்களே, அப்படி என்றால் என்ன?" என்று தன் மகள் பருவமடையாத பொழுதுகேட்டஅதே கேள்வியைத் திருப்பி மகளையே கேட்டாள். மகளுக்கு வெட்கம் தாங்க முடிய

வில்லை. சிரித்துக் கொண்டே ஓடி விட்டாள்.

காதலைப் பற்றி முழுதுமாக அறிந்த — அனுபவித்த அந்தத் தாயாலும் அவளுடைய மகளாலும் காதலுக்கு விளக்கம் சொல்ல முடியவில்லை. மேலும் அது பற்றிய விளக்கம் சொல்ல புலவர்களாலோ, இலக்கியத் திறனாய்வாளர்களாலோ, உளவியல் அறிந்தவர்களாலோ முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட பருவத்தை அடைந்தவுடன் ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் ஏற்படும் ஒருவகை உணர்ச்சியே காதல் எனலாம். 'ஒருவகையான உணர்ச்சி' என்ற அளவுக்குத்தான் காதலுக்கு விளக்கம் சொல்ல முடியுமே தவிர அதற்குமேல் முடிவதில்லை. இத்தகைய இதயத்து நிகழ்ச்சிகளைத்தான் தமிழரறிஞர்கள் 'அகம்' என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். உலகிலே எந்த மொழி இலக்கியத்திலேயும் அகத்தைப் பற்றிக் கூறாத—கூறமுடியாத அளவுக்குத் தமிழ்ப் புலவர்கள் கூறியுள்ளார்கள். எட்டுத் தொகையினுள் அடங்கிய நூல்கள் அனைத்தும் காதல் இன்பத்தை —அதன் எழுச்சியினை இன்பம் சொட்டச் சொட்டத் தருவனவாகும்.

எட்டுத் தொகையினுள் ஒன்றான குறுந் தொகையில் ஒரு பாட்டில் ஒரு புலவர் காதலுக்கு உவமை காட்டி விளக்குகிறார்:

ஒரு உருண்டை வெண்ணெய் கற்பாறையின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. அதை காவல் புரிகிறான் ஒருவன். அவன் எத்தகையவன்? உடலுறுப்புக்களுக்குப் பழுதுருதுள்ள இளைஞனா? அல்ல; கைகள் இரண்டும் இல்லாதவன். அதுமட்டுமல்ல. பேசுவதற்கும் நாவற்ற ஊமன். வெயிலின் வன்மையோ கொடியதாக இருக்கிறது. அதன் காரணத்தால் உருகிப் போகிற வெண்ணெயைத் தன் இதயத்தால் உணர்கிறான். அந்த வெண்ணெய் உருகி வீணாகாமல் வாரியெடுத்துக் கொள்ள அவனுக்குக் கரங்கள் இல்லை. மற்றையோரிடம் சென்று 'வெண்ணெயைத் திரட்டி எடுத்துக் கொள்ளுங்கள்,' என்று அறிவிக்கவும் அவனுக்கு வாயில்லை. உணர்கிறான். ஆனால் சொல்லவோ செய்யவோ முடிவதில்லை. பரிதியின் வெம்மையினாற் பாழாகும் வெண்ணெய்தான் காதல். கையுமற்ற, அதோடு வாயுமற்ற

செல்வக் கோன்

அந்தக் காவலனின் இதயம் தான் நம் இதயம். அக்காவலன் உருகிப் போகிற வெண்ணெயை உணருவதைப்போல நாம் காதலைப் பற்றி உணருகிறோம். ஆனால் அறிவிக்கவோ முடிவதில்லை.

> "ஞாயிறு சாயும்
> வெவ்வறை மருங்கில்
> கையில் ஊமன்
> கண்ணில் காக்கும்
> வெண் ணெய்
> உணங்கல் போல
> பரந்தன் றிந்நோய்
> நோன்று கொளற்காதே"
> (குறுந்: 58)

என்பதுதான் அந்தப் பாட்டு.

தமிழ் இலக்கியத்தில் காதல் ஆட்சி புரிகின்ற அளவுக்குக் கௌவையும் ஆட்சி புரிகின்றது. கௌவை என்பது தலை

வனைப் பற்றியும் தலைவியைப் பற்றியும் ஊர் மக்கள் சிலர் பேசிக் கொள்ளும் வம்புக்குக் குறிக்கப்படும் சொல். இது அவர் என்றும் அம்பல் என்றும் குறிக்கப்படுகின்றது.

"மலரொத்த கண்களையுடையவளின் அருமையினை அறியாமல் இவ்வூர் அவர் தூற்றுகின்றதே," என்று தலைவன் வருந்துகிறான்.

……தீவாய்
அலர்வினை மேல் அம்பல்
பெண்டிர்" (அகம்: 203)

என்று தோழியின் செவிலித்தாய் வருந்தி அலர் தூற்றும் பெண்களைக் குறிக்கிறாள்.

ஊரில் வீசப்படும் அலருக்குத் தலைவன் வருந்துகிறான். செவிலித்தாயும் வருந்துகிருள். தோழியும் சில நேரங்களில் வருந்துகிருள். ஆனால் தலைவியோ ஊரவரின் அம்பலுக்குப் பயந்தவளாகக் காணும். 'கௌவைக்கு அஞ்சினால் காதல் அழியும்' என்று அவள் தோழிக்குக் கூறுகிருள். "தூற்றுபவர் தூற்றட்டும். நமது காதல் வாழ்வை, களவொழுக்கத்தை நடத்தலாம்" என்ற நினைவோடு தலைவி இருக்கிருள்.

"அமைந்தாங் கணமக வம்பலஃ தெவனே" (குறுந்: 175) (அவர்களுடைய மனம் அமைந்தபடி அவர்கள் அலர் தூற்றட்டும். அவர்களுடைய அம்பல் என்ன துன்பத்தைச் செய்ய முடியும்?) என்ற உறுதியோடு தலைவி வாழுகிருள். ஊர் தூற்றும் அம்பலுக்குத் தலைவி ஒரு சில காலங்களில் மகிழ்ந்துமிருக்கிருள். ஆனால்,

"நவிதருங் காமமுங் கௌவையு
மென்றிவ்
வலிதி னுயிர்காவாத்
தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு"
(கலி: 142)

காதல் எனும் காமமும், கௌவை யெனும் அலரும் ஒன்றுக் கொன்று முரணகவிருந்து துன்பத்தைத் தருகிறது என்று சில சமயங்களில் வருந்தி இருக்கிருள்.

ஆனால் ஊரவரின் அம்பல் இந்த இளங்காதலரின் வாழ்வுக்வுக்குச் சிறந்ததோர் தொண்டும் செய்திருக்கிறது. தலைவன் தலைவி ஆகியோரின் உள்ளங்களை ஒரு நிலம் என்று வைத்துக் கொள்ளுவோமானால் அந்த நிலத்தில் வளரும் பயிர் தான் காதல்; பயிர் செழித்து வளர எரு இட வேண்டும். அது மட்டுமல்ல; தினமும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். எரு கொண்டு வருவதற்கும் நீர் கொண்டு வருவதற்கும் நீண்ட தூரம் சென்று வர வேண்டியதில்லை. ஊரவரின் கௌவையே காதற் பயிர் செழித்து வளர உதவும் எரு ஆகும். தலைவியின் அன்னையார் வெகுண்டுரைக்கும் சொல்லே நீர் ஆகும். இவ்வாருகக் காதற் பயிர் வளருகிறது.

"ஊரவர் கௌவை எருவா
அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய்"
(குறள்: 1147)

இவ்வாருகக் காதற் பயிர் வளருகிறது. செம்புலத்தில் பெய்த நீர் அன்புடை நெஞ்சம் ஒன்றுக் கொன்று கலந்து திருமணம் என்று கனிகிறது.

ஃ

இரவில் சென்னை

சிங்காரத் திருநகரம், சென்னை! அங்கு மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும்தான் இருக்குமென்று நினைக்கிறீர்களா? இல்லை; இல்லை.

ஆற்காட்டு நவாபு அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஆதரவற்றவர்களின் குடிசைகள் அநேகம்! அநேகம்!!

செட்டிநாட்டு அரசரின் மாளிகைக்கு அருகில் சீரழிந்தோர் தொகை ஏராளம்! ஏராளம்!!

நினைவு வைத்துக் கொள்ளுங்கள்; நிற்கதியானோர் நிரம்ப வாழும் தமிழகத்தின் இந்தத் தலை நகரத்திலேதான் ஆண்டொன்றுக்கு பத்து லட்சம் வாங்கும் கவர்னர் பிரானும் இருக்கிறார்!

அடுத்த பக்கத்தில்:

(1) கொசுக்கடிக்குப் பயந்து சீட்டு விளையாடுவோர். (2) இரவு மணி 3-க்குப் பிறகு தொழிலாளர் தோழர்களுக்காகத் திறக்கப்படும் ஆப்பக் கடைகள்! (3) பொழுது போக்கிற்கு இதுபோன்ற கூத்துகள் உண்டு. (4) ரிக்ஷாக்காரர்களால் இந்த நகரும் தேநீர் கடைக்கு நல்ல வியாபாரம் உண்டு. (5) தாதன் சங்கு ஊதுகிறான்; வேதனை நிறைந்த பகற்பொழுது துவங்குகிறது.



இவன் 'பணக்காரப் பிச்சைக்காரன்'; குடிசை போட்டு வாழ்கிறான்.


1
2
3
4
5



'கட்டை'கள்
சாய்ந்திருக்கும்
காட்சி காணீர்!

முத்து நகை

நான் மாக்ஸ் கெலாடா வைத் தெரிந்து கொள்வதற்கு முன்பே அவரை வெறுப்பதற்கு ஆரம்பித்து விட்டேன். போர் அப்போதுதான் முடிந்திருந்ததால் கப்பல்களிலே கூட்டம் அதிகமாக இருந்தது.

ஒருவர் தங்கும் அறைகள் கிடைப்பதே இல்லை. யோகாகாமாவிலிருந்து சான்பிரான்சிஸ்கோ செல்லும் வரை பதினான்கு நாட்களுக்கு இன்னொருவருடன் ஒரு அறையைப் பங்கிட்டு வாழ வேண்டுமே என்று நான் கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த இன்னொருவர் ஸ்மித் என்றாலோ அல்லது பிரவுன் என்றாலோ கூட எனக்கு அவ்வளவு வருத்தம் ஏற்பட்டிருக்காது. அந்த நபர் மாக்ஸ் கெலாடா என்பதைத் தெரிந்து கொண்டவுடன் எனக்கு என்னவோ போலிருந்தது.

எனது அறையில் படுக்கையை வைத்துவிட்டு புகை பிடிக்கும் அறையில் உட்கார்ந்தவாறு எனக்கு நானே சீட்டாடிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு மனிதர் வந்தார்.

“நான்தான் மிஸ்டர் கெலாடா!”— தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

“அப்படியா? நாமிருவரும் ஒரே அறையைப்

பங்கிட்டுக் கொள்ளப் போகிருேமே!'' என்றேன் நான்!

''ஆமாம்; அதிர்ஷ்டம்தான் அது! நீங்கள் ஒரு இங்கிலீஷ்காரர் என்றதும் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இரு இங்கிலீஷ்காரர்கள் சேர்ந்து இருப்பதில்தான் எவ்வளவு மகிழ்ச்சி!''

''நீங்களும் இங்கிலீஷ்காரரா?''-கேட்டேன் நான்!

''நிச்சயமாக; இதோ பாருங்கள்,'' என்றபடி அவர் பாஸ்போர்ட்டை என் கண் முன்ஞல் ஒரு அசைப்பு அசைத்து விட்டு மறுபடியும் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

''நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

மதுவிலக்கு அமுலிலிருக்கும் நேரம். எனவே 'லெமன் கிரஷ்' சாப்பிடலாமென்றேன்.

கெலாடா சிரித்தார். ''விஸ்கியும் சோடாவும் அல்லது வெறும் மார்ட்டினி மட்டும், என்று ஏதாவதொரு வார்த்தையைச் சொல்வதுதானே?''—என்று கூறிக் கொண்டே தன்னுடைய கால் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு 'பிளாஸ்க்'கை எடுத்தார்.

''என்னிடம் இந்தப் பானங்கள் நிறைய இருக்கின்றன. உங்கள் நண்பர்களுக்கு வேண்டுமென்ருல் என்னிடம் வரச் சொல்லிக் கூறுங்கள்!''

—கெலாடா கூறிஞர்.

பழக ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே தெரிந்து கொண்டேன்; கெலாடா ஒரு பலே வாயாடி! அவர் பேச்சில் இழுபடாத தலைப்புகளே இல்லை. அரசியல், நாடகம், ஓவியம்—எல்லாவற்றையும் பற்றிப் பேசிஞர்.

அடிக்கடி சீட்டை நான் எங்கு வைக்க வேண்டுமென்றும் கூறிஞர். எனக்கு நானே விளையாடும் விளையாட்டில் சீட்டை நானே வைத்தால் தானே சுவாரசியமாக இருக்கும்! ஆனுல் அதற்குச் சிறிதும் இடமளிக்கவில்லை, கெலாடா!

எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. பொறுமை எல்லையைத் தாண்டிக் கொண்டு இருந்தது.

நான் விளையாட்டை முடித்து விட்டு எழுந்து விட்டேன்.

''சரி; நான் சாப்பிடுவதற்குப் போகிறேன்,'' என்றேன்!

''நானும் வருகிறேன். நாமிருவரும் ஒரே அறையில் தங்குபவர்கள். நாமிருவரும் பிரயாணம் முடியும்வரை சேர்ந்தே சாப்பிட வேண்டும்,'' என்று சொல்லியவாறே அவரும் என்னேடு சேர்ந்து கொண்டார்.

நான் கெலாடாவை முன்னிலும் அதிகமாக வெறுத்தேன்.

நான் கெலாடாவோடு வசிக்கவும் சாப்பிடவும் மட்டும் இல்லை; நான் தனித்து இருக்க விரும்பியபோதெல்லாம் அவரும் என் கூடவே உடம்பு போல ஒட்டிக் கொண்டிருந்தார்.

அதுமட்டும் சொந்த வீடாக இருந்தால் நீங்கள் கெலாடா போன்ற ஒருவரை உதைத்து வெளியே தள்ளி கதவை அடைத்திருப்பீர்கள். ஆனுல் அது கப்பலாயிற்றே; பொது இடமாயிற்றே!

கெலாடா எல்லோருடனும் சகஜமாகப் பழகிஞர். கப்பல் தளத்தைப் பெருக்கிச் சுத்தப்

படுத்துபவர்களுக்கெல்லாம் அவர்தான் 'மேஸ்திரி'! கப்பலிலே ஏல விற்பனைக்கு ஏற்பாடு செய்பவரும் அவரேதான்! விளையாட்டுகளை அமைத்துக்கொடுப்பவரும், அவைகளுக்குப் பந்தயம் கட்டும்படி வற்புறுத்துபவரும் அவர்தான்!

மாக்ஸ் கெலாடா எங்கும் எப்போதும் இருந்தார்! அந்தக் கப்பலிலேயே எல்லோராலும் வெறுக்கப்பட்ட மனிதர் அவர் ஒருவரேதான்! நாங்கள் எல்லோரும் அவரை 'பிட்கோட்டீஸ்' (எல்லாம் தெரிந்தவர்) என்றே அழைத்தோம். ஆனால் கெலாடாவே தன்னை எல்லோரும் அப்படி அழைத்துப் புகழ்வதாகவே நினைத்துக் கொண்டு திரிந்தார்.

மிஸ்டர் கெலாடா எந்த வாதத்தை ஆரம்பித்தாலும் தான் எந்தச் சார்பில் பேச ஆரம்பித்தாரோ அந்தச் சார்பை மற்றவர்களும் ஒத்துக் கொள்ளாதவரை பேச்சை நிறுத்த மாட்டார். தனது முடிவு ஆயிரத்துக்கு ஒருமுறையாவது தவறிப்போகும் என்பதை அவர் ஒப்புக் கொள்ளவே மாட்டார். அவர் பேசுவது தான் நூற்றுக்கு நூறு பச்சை உண்மையென்று பலரும் நம்புவதற்கு அவர் படாதபாடு பட்டார்!

ஒரு நாள் டாக்டருடைய அறையில் உட்கார்ந்திருந்தோம். உடனே கெலாடா டாக்டர்கள் அனைவரும் சோம்பேறிகளென்றும்; தனக்குத் தெரிந்ததுகூட டாக்டர்களுக்குத் தெரியாது என்றும் பேச்சை ஆரம்பித்தார். நான் மௌனமாயிருந்தேன். ராம்சே என்னும் பெயருடன் அங்கு உட்கார்ந்திருந்த இன்னொருவரும் கெலாடாவுடன் அந்தப் பேச்சில் கலந்து கொண்டார். அது முடிவேயில்லாத பேச்சாக மாறிக்கொண்டே இருந்தது.

ராம்சே அமெரிக்க வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவர் இப்போது கோபியில் இருக்கிறார். இதுவரை ஒரு ஆண்டு காலம் தனிமையில் இருந்தார். அதனால் இந்தத் தடவை விடுமுறை பெற்று நியூயார்க் திரும்பிவந்து தனது அழகிய மனைவியைத்தன்னுடனேயே அழைத்துச் செல்கிறார்.

அந்த வெளிநாட்டுக் காரியாலயம் குறைந்த சம்பளம் தருகிறது போல் இருக்கிறது; இல்லாவிட்டால் அந்த அம்மையார் சாதாரண உடையில் இருப்பார்களா?

இருந்தாலும் அந்த அம்மையாரின் முகத்திலே ஒரு தனி 'தேஜஸ்' சுடர்விட்டுப் பிரகாசித்தது. அந்தச் சாதாரண உடையும் அவர் உடுத்தியிருந்த விதத்திலே அதி அற்புத அழகுடன் விளங்கிற்று.

ஒரு நாள் மாலை நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, எங்கள் பேச்சு முத்துக்களைப் பற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. அப்போது ஜப்பானியர்கள் செய்து வந்த போலி முத்துக்களைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் அடிபட்டு வந்ததால்தான் எங்கள் பேச்சும் அதன்பால் சென்றது.

பேச்சுவாக்கில்; ஜப்பானியர்களின் போலி முத்துக்கள் பிரபலமாகிவிட்டால் உண்மையான முத்துக்களுக்கு உள்ள

மதிப்பு நாளடைவில் குறைந்து விடும் என்று டாக்டர் கூறினுர்.

எங்கெங்கு வாதம் இருக்கிறதோ அங்கங்கெல்லாம் தான் நமது கெலாடாவும் இருப்பாரே! அவரும் வந்து பேச்சினூடே புகுந்து கொண்டார். “உண்மை முத்துக்களுக்கு உள்ள மதிப்பு என்றுமே குறையாது” என்று வாதிட்டார். இது எடுபடவில்லை!

கெலாடாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆவேசம் வந்தவரைப்போல் பேசினுர்: “முத்துக்களைப் பற்றி எனக்கு மிக நன்ருகத் தெரியும். நான் ஒரு முத்து வியாபாரி. ஜப்பானில் எப்படி போலி முத்துக்கள் தயாரிக்கிருர்கள் என்பதைப் பார்த்து வரவே இப்போது நான் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறேன். ஆக, என்னை எதிர்த்துப் பேச உங்கள் யாருக்கும் அவ்வளவு தகுதி இல்லை”—என்று கர்ஜித்தார்.

கெலாடாவின் கோபத்தால் எங்களுக்கொரு செய்தி கிடைத்தது. கெலாடா இவ்வளவு நாளும் அதிகமாகப் பேசிக்கொண்டு வந்தாரே தவிர, தனது தொழிலைப் பற்றியும் தனது பிரயாணத்தைப் பற்றியும் குறிப்பிட்டதே கிடையாது. இப்போதுதான் நாங்கள் அதைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.

மேலும் கெலாடா பேசிக்கொண்டே இருந்தார்: “என்னைப் போன்ற ‘எக்ஸ்பர்ட்டு’களுக்கு எது உண்மையான முத்து என்பதும் நன்ருகத் தெரியும். உதாரணமாக அங்கே பாருங்கள்; அதோ ராம்சேயின் மனைவியார் அணிந்திருக்கும் முத்து நகை இன்னும் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் அதன் விலை உயர்ந்த மதிப்பிலிருந்து ஒரு ரூபாய்கூட குறையாது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறேன். ஏனெனில் கிடைத்தக்கரிய முத்து வரிசையில் சேர்க்கப்படவேண்டியவை அவை!”

—இதைக் கேட்டதும் திருமதி ராம்சேயின் முகத்திலே ஒரு திடீர் மாற்றம் எழுந்தது. தன்னுடைய கைக்குட்டையால் அதை அவர் அவசர அவசரமாக வியர்வையைத் துடைப்பதைப் போல் மறைத்துக் கொள்ள முயன்ருர்.

இதைக் கவனிக்காத ராம்சே உதட்டிலே புன்சிரிப்பை வரவழைத்தபடி, “அன்புள்ள கெலாடா! நான் இந்த முத்து நகையை வாங்கவில்லை. அதனுல் இதன் சரியான விலை

பாஷாணம் கணவருக்கா?

“ஹலோ இங்கிலீஷ் மருந்துக் கடையா? நான் பெரிய தெருவிலிருக்கும் மிராசுதாரின் மனைவி பேசுகிறேன். எனக்குக் கொஞ்சம் எலிப் பாஷாணம் வேண்டுமே!”

“அப்படியாளுல் பையனிடம் கொடுத்து உங்கள் வீட்டிற்கே அனுப்பி விடட்டுமா?”

“வேண்டாம்; வேண்டாம்! என் கணவர் இன்னும் சிறிது நேரத்தில் காரில் அந்தப் பக்கம் வருவார்; பாஷாணத்தைக் கொடுத்து விடுங்கள்!”

எனக்குத் தெரியாது. தயவு செய்து தாங்கள் இதன் பெறுமானத்தைக் கூற முடியுமா?''

''சுமார் பதினைந்தாயிரம் டாலர்கள் பெறலாம். இருந்தாலும் இது ஐந்தாவது அவெனியூ மார்க்கெட்டில் விற்கப்பட்டால் இது முப்பதாயிரம் டாலருக்குச் சென்றாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்!''

ராம்சே மேலும் சிரித்தார்.

''கெலாடா! நீங்கள் உண்மையிலேயே ஆச்சரியப்படப் போகிறீர்கள். என் மனைவி ஊருக்குப் புறப்படுவதற்கு முன்பு பதினெட்டே டாலருக்கு இதை வாங்கினாள். என்ன; விலை இவ்வளவு மலிவா?— என்று பார்க்கிறீர்களா? இது 'இமிட்டேஷன்' முத்து!''

''சுத்தப் பொய்! பச்சைப் பொய்! கடைந்தெடுத்த பொய்! இதை நான் நம்பமாட்டேன். உண்மையிலேயே இது அசல் முத்துதான்!''

''இது உண்மையான முத்துக்கள் என்று நூறு டாலர் பந்தயம் கட்டுவதற்கு நீர் தயார்தானா?''

''நிச்சயமாக!''

—உடனே திருமதி ராம்சே தன் கணவனின் அருகில் வந்து, ''நிச்சயமாகத் தெரிந்த உண்மையின் பேரில் பந்தயம் எதற்கு?'' — என்று கெஞ்சும் தோரணையில் கேட்டுக் கொண்டாள்.

மேலும் கூறினாள்: ''இதை எப்படி நிரூபிக்கப் போகிறீர்கள்? நான்தான் இதை வாங்கினேன். என் வார்த்தையைத் தானே நீங்கள் நம்ப வேண்டும்?''

—இதைச் சொல்லும் போது திருமதி ராம்சேயின் குரலிலே நடுக்கம் பிறந்தது.

''தயவு செய்து அந்த முத்து நகையைக் கொடுங்கள். அது போலி என்றால் நான் அதைக் கண்டுபிடித்து விடுவேன்'' என்றவாறு கெலாடா கைநீட்டினார்.

''அதை அவரிடம் எடுத்துக் கொடு கண்ணே!'' என்று தன் மனைவியிடம் அன்புடன் கூறினார் ராம்சே!

''இல்லை; அதை என்னால் கழற்ற முடியாது. என் வார்த்தையை நம்புங்கள்!'' என்றாள் அவள்!

அவள் முகம் மாறியது. எனக்கு மட்டும் நன்றாகத் தெரிந்து விட்டது, ஏதோ எதிர்பாராத சம்பவம் நடக்க இருக்கிறது என்பது!

ராம்சே குதித்தெழுந்தார். அவரே தன் மனைவியின் கழுத்திலிருந்து முத்து நகையைக் கழற்றி அதைக் கெலடாவின் கையில் கொடுத்தார்.

கெலாடா அந்த நகையைக் கையில் வாங்கிக் கொண்டு, கோட்டுப் பையிலிருந்து ஒரு பூதக் கண்ணாடியை எடுத்து அதன் வழியே முத்து நகையைச் சோதித்துப் பார்த்தார். உடன் வெற்றிப் புன்னகையொன்று அவர் உதடுகளைக் கிழித்துக்கொண்டு வெளிக் கிளம்பிற்று.

கெலாடா வாயைத் திறந்து பேசப்போகும் சமயம் திருமதி ராம்சேயின் முகத்தைப் பார்த்தார்.

என்ன விந்தை! திருமதி ராம்சேயின்முகம் வெளுத்திருந்தது; பிரேதக்களை சொட்டிக் கொண்டிருந்தது. ஆமாம்; இன்னும்

அரைக் கணத்தில் மயக்கம் போட்டு விழுந்துவிடக் கூடிய நிலையிலே அவள் இருந்தாள்!

கெலாடாவை உற்று நோக்கியபடி இருந்தன அவள் கண்கள். "தயவு செய்து உண்மையைச் சொல்லி விடாதே!" என்று கெஞ்சுவதைப் போலிருந்தது அந்தப் பார்வை! இதை அவள் கணவன் கவனிக்காதது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது!

திடீரென்று கெலாடாவின் முகத்திலும் ஒரு மாறுதல்!

"நான் தோற்று விட்டேன்; இது இமிடேஷன்தான்! இந்தாருங்கள் நூறு டாலர்!" என்று சொல்லியபடி ஒரு நூறு டாலர் நோட்டை ராம்சேயின் கையில் நீட்டிவிட்டு நகர்ந்தார், கெலாடா!

ராம்சேயுக்கு வெற்றிக் களிப்பு! "இனிமேலாவது நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதிடாதீர்கள், கெலாடா!" என்று கொஞ்சம் சப்தம் போட்டே கூறினார்.

—இதற்குப் பிறகு திருமதி ராம்சே அங்கு அதிக நேரம் நிற்கவில்லை; தலைவலி என்று கூறிவிட்டு தன் அறைக்குச் சென்று விட்டார்.

★

மறுநாள் காலை நான் முகச்சவரம் செய்து கொண்டிருந்தேன். கெலாடா படுக்கையில் படுத்தபடி சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்,

அந்த நேரம் திடீரென்று கதவோரம் ஓர் அரவம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்தேன் யாரையும் காணவில்லை.

ஆனால் கீழே ஒரு கவர் கிடந்தது. அதில் பெரிய எழுத்துக்களில் 'மாக்ஸ் கெலாடா' என்று எழுதப்பட்டிருந்தது. நான் அதை கெலாடாவிடம் கொடுத்தேன்.

"யார் எழுதியிருக்கிறார்கள்?"—என்று கேட்டவாறே கெலாடா கவரைப் பிரித்தார். 'ஓ' என்ற ஆச்சரிய ஒலி எழுந்தது.

கவரைப் பிரித்து உள்ளிருந்து கடிதத்தையல்ல — ஒரு நூறு டாலர் கரன்சி நோட்டை எடுத்தார். என்னையும் பார்த்தார். அவர் முகம் சிகப்பாயிற்று!

அந்தக் கவரைச் சுக்கல் நூறாகக் கிழித்து என் கையில் கொடுத்து, "தயவு செய்து இதை வெளியில் எறிந்துவிடுங்கள்!"—என்று கூறினார்.

எனக்கு மட்டும் உண்மை தெரிந்து விட்டது.

"அந்த முத்துக்கள் நிஜ முத்துக்கள்தானா?" — கேட்டேன் நான்!

"ஆமாம்; அவை நிஜ முத்துக்கள்தான். எனக்கு மட்டும் ஒரு அழகான மனைவி யிருந்து, அவளை மட்டும் தனியாக நியூயார்க்கில் விட்டுவிட்டு கோபியில் நான் இருந்தால் இப்படித்தான் நடக்கும்," என்றார் கெலாடா!

—இப்போது நான் கெலாடாவை வெறுக்கவில்லை.

[மூலம்: சோமர்சேட் மாம்]

★

கடைசிச் சின்னம்!

மாநிலமெங்கும் மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்புகிறது. கோலோச்சி கொடுங்கோல் புரிந்துவந்த மன்னர்களெல்லாம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டனர். ஆனால் ஒரே ஒரு இடத்தில்மட்டும் குறிப்பிடத்தக்க வகையில் ஆட்சியிலே அரச பரம்பரை இருந்து வருகிறது. 'வரம்புடையமுடியாட்சி' என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் சமாதானம் குறிப்பிட்டாலும் இங்கிலாந்தில் இருந்து வருவது முடியரசே என்பதில் ஐயமில்லை. அந்த முடியரசின் பெருமைக்குரிய சின்னங்களுள் முன்னிடம் வகிக்கும் பக்கிங்காம் அரண்மனை குறித்து ஒரு சில கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அரண்மனை என்றாலே பாதுகாக்கப்படும் வீடு என்றுதான் பொருள் படுகிறது. மக்களிடமிருந்து, அவர்கள் எழுப்பும் உரிமைக் குரலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள இந்த வீடுகள்தான் பயன்படுகின்றன. தமிழகத்தில் சில காட்டு ராஜாக்களின் கண்மூடி தர்பாரை நாம் நினைவுக்குக் கொண்டு வந்தால், அவர்கள் தங்களுடைய அட்டூழியங்களையும், லீலா விநோதங்களையும், ரகசியங்களையும் பாதுகாத்துக் கொள்ளும் மர்மக் கோட்டைகளாகவே அரண்மனைகள் பயன்பட்டதென்பதை உணரலாம்.

அந்தக் காலத்திலெல்லாம் அரண்மனைகள் பொது மக்கள் கண்டு மகிழ முடியாத ஓரிடமாக, அவர்களிலிருந்து வேறுபடுத்தி வைக்கப்பட்டிருந்தது. வள்ளுவர் கூறியபடி 'காட்சிக் கெளியனாக' காவலர்கள் விளங்க முடியாதபடி இந்த அரண்மனைகள் தடுத்துவந்தன. பண்பாடுடைய மன்னர் என்று பாராட்டப்பெற்ற கிருஷ்ண தேவ ராயருடைய அரண்மனையிலேகூட, தவறிழைக்கப்பட்ட குடிமகன் தான் அடைந்த கொடுமையை அரசரிடம் சொல்ல முடியவில்லை என்பதை வரலாற்றுக் கதையொன்று விளக்குகிறது.

இன்று உலகில் குறிப்பிடத்தக்க அரண்மனை பிரிட்டிஷ் நாட்டின் பக்கிங்காம் அரண்மனையே. இதுதான் உலகிலேயே பெரிய அரண்மனை. நாள்தோறும் மாலை வேளையானதும் ஏராளமான வேலைக்காரர்கள் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல பக்கிங்காம் அரண்மனையை விட்டு தத்தம் வீடு தேடிப் புறப்படுவராம். அவர்களுக்கென்று தனிப்பட்ட பஸ் வசதி உண்டு. அவற்றிற்கு 'கிரீலைன்' என்று பெயர். அரண்மனையில் வேலைபார்க்கும் அலுவலர்களும் செயலாளர்களும் அநேகமாக 'கென்சிங்டன் கார்டன்ஸ்' என்ற இடத்தில்தான் வசிக்கிறார்கள். வெளியிலிருந்து வந்து வேலை செய்யும் கட்டுப்பாடு மிக்க வேலைக்காரர்களைத் தவிர இன்னும் ஏராளமான

--பட்டுக்கோட்டை சிவ. இளங்கோ

பேர் அரண்மனைக்குள்ளேயே தேன் கூட்டில் உள்ள வேலைக்காரர்களைப்போல இருந்து வருகிறார்கள். அவர்களுள் பரம்பரை வார்சுகளும் உண்டு.

அரண்மனைக்குள் சுமார் 700 அறைகளும், கூடங்களும், அலுவலகங்களும் இருக்கின்றன. அரண்மனையின் கட்டிடம் மட்டும் ஐந்து ஏக்கர் சுற்றளவு உள்ளது. எப்பொழுது பார்த்தாலும் டைப்ரைட்டரின் சப்தமும், டெலிபோன் மணியோசையும், ரகசியமாகப்பேசும் குரலோசையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கேட்டுக்கொண்டே இருக்கும்.

இந்த அரண்மனை கட்டி முடிக்கப்பட்டு மன்னர் குடும்பம் குடியேறிய புதிதில் ஒரு சமயம் ராணியே வழி தெரியாமல் வெவ்வேறு படிகளில் ஏறித் திண்டாடினாராம். இப்பொழுதும்கூட மிகவும் பழக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் தடுமாற்றமடைய நேரிடும்.

ஆங்கிலேயர்கள் எப்போதுமே பழமையை உதறித்தள்ள மனமில்லாதவர்கள். எவ்வளவு தான் விஞ்ஞானம் முன்னேறினாலும் அவர்களுடைய பண்டைய வழக்கத்தை விடமாட்டார்கள்; அதற்கு உதாரணமாக அமைந்திருப்பது அரண்மனை சமையல்கூடம். மின்சார விளக்குகளும், மின்சார சமையல் யந்திரங்களும் உபயோகிப்பதைத் தவிர, வேறு எவ்வித புதிய மாற்றமும் இங்கே செய்யப்படவில்லை. பழைய மாதிரியே வெள்ளையோடு வேய்ந்த கூரையும், பழைய பலகார வகை செய்யும் சாதனங்களுமே இன்னும் இருக்கின்றன. சமையல் கூடத்திற்குப் பக்கத்தில் இன்னமும் விக்டோரியா காலத்து சாப்பாட்டு மேசைகளும் தள்ளாடிக் கொண்டு நிற்கின்றன.

அரண்மனையில் சேர்ந்தாற்போல் ஏழு கூடங்கள் தங்கம், வெள்ளி சாமான்கள் வைக்கும் கிராணமாக உபயோகிக்கப்படுகின்றன. அரசாங்க விருந்துகளின்போதுதான் இவை உபயோகிக்கப்படும். தங்கப் பூந்தொட்டிகளும், தங்க சாப்பாட்டுப் பாத்திரங்களும், வெள்ளி மேஜைகளும் இங்கேஅடைந்து கிடக்கின்றன. இவற்றுள் ஐந்து அடி உயர வெள்ளிக்கோப்பை ஒன்றும் இருக்கிறது. இதை முதல் மகாயுத்தம் முடிந்த சமயம் யாரோ ஒருவர் ரகசியமாகப் பரிசளித்தாராம். அவர் யாரென்பது இன்னும் யாருக்கும் தெரியாது.

பக்கிங்காம் அரண்மனையை அரண்மனை என்று சொல்வதை விட ஒரு சிறு நகரமென்றே சொல்லலாம். ஜன நெருக்கடியும், சலசலப்பும் மிக்க இலண்டன் மாநகரத்தின் இதய பாகத்திலே இந்தப் 'பொம்மை நகரம்' நடுநாயகமாக விளங்குகிறது. அரண்மனைக்கென்று தனியாக அஞ்சல் நிலையம் உண்டு. ஒவ்வொரு அறைக்கும் அடிக்கடி தபாற்காரர்கள் வந்து கடிதங்கள் முதலியவற்றைக் கொடுத்துவிட்டுப் போவார்கள். ஒரு சமயம் தனது அறையிலிருந்து வேறொரு அறைக்கு ஏதோ அலுவலாகச் சென்ற பெண்ணொருத்தி வழி தெரியாது தபாற்காரனின் உதவியுடன் தன் அறைக்கு வந்து சேர்ந்தாளாம்.

இதேபோல் அரண்மனைக்கென்று பிரத்தியேகமான 'போலீஸ் ஸ்டேஷன்' இருக்கிறதாம்! அரண்மனைக்குள்ளும் போலீஸ் ஸ்டேஷன் வைக்கக் கூடிய அளவுக்கு நிலைமை அப்படியிருக்கிறதா என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் அங்கும் அவர்களுக்கு வேலை இருக்கத்தான் செய்கிறது.

ராணியின் அந்தப்புறத்துக்கென்று ஐம்பதுக்கு மேற்பட்ட பணிப் பெண்கள் இருக்கின்றனர். அவர்களில் வெளியே இருந்து வருபவர்கள் விடியுமுன் வந்து, இரவு அரச தம்பதிகள் படுத்து உறங்கிய பின்னர்தான் வீடு திரும்புவது வழக்கம். இவர்கள் தவிர சமையற்காரர்கள், சிற்றூட்கள், கணக்கர்கள்—இன்னும் பலவிதமாக 400 பேர்கள் வேலை பார்க்கிறார்கள். அரண்மனைக்கென்று ஏராளமான பாதுகாவல் வீரர்கள் வேறு உண்டு.

சில முக்கிய பரம்பரை வேலையாட்கள் சிறு குழந்தையிலேயே இதற்கென்று பழக்கப்படுத்தப்பட்டு, தனிப் பள்ளியில் பயின்று தேறி வேலைக்கு வருகின்றனர். முன்பெல்லாம் இப்படி வரும் பரம்பரை வேலையாட்கள் அடிமைத்தனத்தில் ஊறிக் கிடந்தார்கள். ஆனால் இப்பொழுதோ காலம் மாறி வருகிறது!

முன்பெல்லாம் யாரும் மன்னர் குடும்பத்தினருடன் பேசக்கூடாது என்பது கண்டிப்பான சட்டம். ஒரு சமயம் விக்டோரியா மகாராணியாரின் ஆடையில் நெருப்பு பற்ற இருந்தது. அதைக் கண்ணுற்ற வேலைக்காரி யொருத்தி "விலகுங்கள்; விலகுங்கள்" என்று கூறினாள். வேலைக்காரி ராணிக்குக் கட்டளையிடலாமா? அவள் செய்த குற்றத்துக்கு மேலதிகாரி, கடுமையாக எச்சரித்ததோடு பெரிய மனது பண்ணி மன்னித்து விட்டாராம்!

அரசியாரால் தோட்ட விருந்துக்கு அழைக்கப்படும் சிறப்பு விருந்தினர்கூட அரண்மனையில் எல்லா இடங்களுக்கும் போக முடியாது. அவர்களுக்கென்று குறிப்பிட்ட வழியாகப் போய், குறிப்பிட்ட இடத்தில் விருந்துண்டுவிட்டு, குறிப்பிட்ட வழியாகவே திரும்பிவிடவேண்டும்.

அரண்மனையில் அபூர்வமான பொருட்கள் சேகரித்து வைப்பதற்கென்று ஏராளமான செல்வம் செலவு செய்யப்படுகிறது, மூன்றும் ஜார்ஜ் பேரரசர் 12 ஆண்டுகளில் 7,50,000 பவுன்களை இதற்காக செலவு செய்திருக்கிறாராம்.

அரண்மனை விஷயங்கள் எல்லாம் புதிர் நிறைந்தவைதானே!

விக்டோரியா காலத்து சிம்மாசனம் முழுத் தங்கத்தால் செய்யப்பட்டது என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆனால் அது வெறும் தங்கமுலாம் பூசப்பட்டதுதான்; ஆனால் அதிலுள்ள தங்கமுலாமே 1200 பவுன்!

உலகையெல்லாம் ஒரு குடைகீழ் ஆண்ட அரசர்களெல்லாம் மறைந்து, அவர்களுடைய அரண்மனைகள் எல்லாம் அலுவலகங்களாகவும், மக்கள் கண்டு மகிழக்கூடிய விந்தைப் பொருட்களாகவும் மாற்றப்பட்டுவிட்ட இந்த நாளில் பக்கிங்காம் அரண்மனை ஒன்றுதான் முடியரசின் கடைசிச் சின்னமாக நின்று நிலவுகிறது.

ஆதாரம்: லண்டன் டைம்ஸ்

எங்கே போனாள்?

துப்பறியும் நிபுணன் ஹெர்க்யூல் பாய்ரட், நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். நான், 'டெய்லி நாய்ஸ்' பத்திரிகையின் தலைப்புகளைப் படித்துக் கொண்டிருந்தேன்.

'டெயிலி நாய்ஸ்' பத்திரிகை' கொலை, கொள்ளை திடுக்கிடும் செய்திகள், மற்றும் பெரிய மனிதர்களின் ஊழல்கள்-இவற்றைப் பிரசுரிப்பதையே தன் நோக்கமாகக் கொண்டது.

நான் படித்தேன்.

'பேங்கில் திருட்டு! 50 ஆயிரம் பவுன்களுடன் ராபர்ட் என்னும் 'காஷியர்' மறைவு!'

'கணவன் தற்கொலை!—சாரமற்ற குடும்ப வாழ்க்கை!'

'எங்கே போனாள்?—21 வயது அழகி மறைவு'!

''பாய்ரட்! இதைப் பார்; நிறைய விஷயங்கள் உள்ளன. எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்'' என்றேன்.

''பணத்துடன் மறைந்த காஷியர்; காணாமற்போன அழகி; என்ன சொல்கிறாய்?'' என்றேன் நான் மீண்டும்.

ஆனால் பாய்ரட் விருப்பமற்றவனாகத் தென்பட்டான்; தலையை அமைதியாக அசைத்தான். பிறகு,

''வாட்சன்! எனக்கு இன்று ஒரே சோம்பலாக இருக்கிறது! மேலும், 'ஷேவ்' செய்து கொள்ள வேண்டும்; தூங்க வேண்டும்'' என்றான் பல கொட்டாவிகளுக்கிடையில்.

நான் அவனுக்குப் பதில் சொல்ல வாயெடுத்தபோது வெளியே, யாரோ 'பெல்'லை அமுக்கினார்கள்.

''பாய்ரட், உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்றேன். அவன் முகத்தைச் சுளித்தான்.

அடுத்த கணம், கதவைத் தானே திறந்து கொண்டு ஒரு இரட்டை நாடிப் பெண்மணி நுழைந்தாள். 'மேக்—அப்' செய்திருந்தபோதிலும் வயது நாற்பதுக்குக் குறையாது என்பதை முகம் காட்டியது. மாடிப்

மூலம்: அகதா கிறிஸ்டி.

தமிழில்:

'அன்பு வாணன்'

படி ஏறி வந்ததால் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது!

"நீங்கள்தானே மிஸ்டர் பாய்ரட்?" என்றாள் அம்மாது.

"ஆம், அம்மா; நான்தான்!" -பாய்ரட்டின் கண்கள் அவளைச் சுற்றிச் சுழன்றன.

"நான் எதற்காக வந்தேன் என்று யோசிக்கிறீர்களல்லவா? என் சமையற்காரி காணமற் போய் விட்டாள். அவளைக் கண்டு பிடித்துத்தர வேண்டும் நீங்கள்" என்று பரபரப்புடன் கூறினாள் வந்தவள். பாய்ரட்டுக்கு வியப்பு மேலிட்டது; என்றால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ஏன் சிரிக்கிறீர்கள்? நல்ல சமையற்காரியின் முக்கியத்துவத்தை அறிந்தால், நீங்கள் சிரிக்க மாட்டீர்கள்!" என்றாள் அவள்.

படபடப்புடன் பேசிய அவள் மூச்சு விடுவதற்கு எடுத்துக் கொண்ட அவகாசத்தை பாய்ரட் ஆக்ரமித்துக் கொண்டான்.

"அம்மா, உங்கள் சமையற்காரி எப்போது காணமற் போனாள்? தயவு செய்து விவரமாகக் கூறுங்கள்" என்று பாய்ரட் கேட்டதும், அவள்,

"புதன்கிழமையன்று போனாள். போகுமுன் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை, அவள் போவதைப் பற்றி," என்றாள்.

"எங்காவது விபத்தில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் இருப்பாளோ என்னவோ?" என்றான் பாய்ரட்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன் நேற்று வரை. ஆனால் இன்று காலையில் அவளுடைய பெட்டியைக் கொடுத்தனுப்பும்படி ஆளனுப்பியதும் தான் எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது" என்றாள் அந்த அம்மையார்.

"சரி, அவளுடைய தோற்றம்; பெயர்...?" என்றான் பாய்ரட்.

"அவள் பெயர் எலிஸா டன். நல்ல நிறம், சுமாரான உயரம், வயது இருபதுக்குமேல் இருக்கும்."

"ஆமாம்; நீங்கள் அவளைக் கண்டித்தீர்களா?"

"இதுவரை இல்லை. எங்கள் உணவே அவளுக்கும். நல்ல உடைகள்—சம்பளம் — வாராந்திர விடுமுறை" என்றாள் அம்மாது.

"சரி அம்மா, உங்கள் முகவரி தாருங்கள்; இன்னும் சற்று நேரத்தில் அங்கு வருகிறேன்."

"44, குக்ஸ் வீதி, க்ளேஃபாம்" என்று கூறியபின், "என்பெயர் மிஸஸ் டோட்" என்றாள். பின்னர் விடைபெற்று வெளியே சென்றாள்.

இரண்டு மணி நேரத்திற்குப் பின் நாங்கள் க்ளேஃபாம் நோக்கிக் காரைச் செலுத்தினோம்.

மிஸஸ் டோட் எங்களை எவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்தாள் என்பது நாங்கள் சோபாவில் அமர்ந்ததும் வேலைக்காரி தேநீர் கொண்டுவந்து வைத்ததிலிருந்து தெரிந்தது. வேலைக்காரி மிகவும் சுத்தமாகவும், மிடுக்குடனும் இருந்த தோற்றம், திருமதி டோடின் பரந்த உள்ளத்தை விளக்கியது.

"ஆன்னி, போகாதே! இவர் ஒரு துப்பறிபவர். உன்ன

சில கேள்விகள் கேட்பார்; இங்கேயே இரு!'' என்று டோட் அம்மையார் சொன்னதும் திரும்பி உள்ளே போன வேலைக்காரப் பெண் ஆன்னி மீண்டும் வந்து நின்ருள். பாய்ரட் மிஸஸ் டோட்டை அடுத்த அறையில் இருக்கும்படிக் கேட்டுக் கொண்டான். அவளும் அவ்வாறே சென்ருள்.

''ஆன்னி, இந்த விஷயத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்?'' என்ருன் பாய்ரட்.

என்னவோ ஏதோ என்று எண்ணிப் பயந்த ஆன்னி இதைக் கேட்டுப் பயம் விலகி பதில் சொன்னுள்.

''கொள்ளைக்காரர்கள் தான் சார்! அமெரிக்காவில் இருப்பது போல் — பெண்களை அபகரித்துக்கொண்டு போயிருப்பார்கள் சார்; நிச்சயமாக அது தான்'' என்ருள்.

''அதுசரி; பெட்டிக்கு ஆளனுப்பினுளே, அந்த ஆள் யார்?''

''யாரோ ஜேம்ஸ் என்ற பெயருடையவன் வந்தான்''

''நீதான் பெட்டியை 'பேக்' செய்தாயா?''

''அதுதான் சார் ஆச்சர்யம்! பெட்டி ஏற்கெனவே 'பேக்' செய்யப்பட்டு இருந்தது!''

''இந்த அம்மாளின் கணவர் யார்?''

''ஹோட்டல் முதலாளி...... மிஸ்டர் டோட் என்பவர்தான் மிஸஸ் டோடின் கணவர். பங்களாவின் முன் பக்கத்து அறையில் ஒருவர் வாடகை கொடுத்து வசிக்கிருர். அவர் பெயர் சிம்சன். 'சிட்டி பேங்கில்' வேலை செய்கிருர்'' என்றதும், பாய்ரட்,

''சரி, நீ போகலாம்'' என்ருன்; அவள் போய்விட்டாள்.

சுமை தூக்க...

பஸ் புறப்படும் நேரம். ஒரு ஆள் வேகமாகக் கண்டக்டரிடம் ஓடி வந்தான். ''அய்யா; நான் இந்த விறகுக் கட்டை இப்படி வைக்கலாமா?''—என்று கேட்டான். கண்டக்டர் சம்மதித்தார்; பஸ் புறப்பட்டது.

சில மைல்கள் தாண்டிய பிறகு அந்த ஆள் திரும்பவும் கண்டக்டரிடம் ஓடிவந்து விறகுக் கட்டை எடுத்துக் கொண்டான்.

''ஏனப்பா; நான் இவ்வளவு நேரமும் பஸ்ஸில் பார்க்கவே இல்லையே! நீ எங்கே இருந்தாய்?'' — என்ருர் கண்டக்டர்.

அந்தக் கிராமவாசி இப்படிப் பதில் சொன்னுன்: ''என்னையா கேட்கிறீர்கள்? நான் உங்கள் பஸ்ஸுக்குப் பின்னுலேயே சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன்!''

—கண்டக்டருக்கு எப்படி யிருக்குமென்று நினைக்கிறீர்கள்?

திருமதி டோட் உள்ளே நுழைந்தாள். நாங்கள் வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டோம். விடை பெற்றுப் புறப்பட்டோம்.

''பாய்ரட், 'டெய்லி நாய்ஸ்' பத்திரிகையில் படித்தோமே காலையில்; கேஷியர் மறைவு—பணத்துடன் என்று! அதே பாங்கில்தான் இந்த சிம்சனும் வேலை செய்கிறான்'' என்றேன் நான், காரை 'ஸ்டார்ட்' செய்து கொண்டே.

ஆனால் பாய்ரட் சிந்தனையில் மூழ்கிவிட்டான்.

அன்று மாலை மிஸஸ் டோடின் பங்களாவிற்குச் சென்றபோது சிம்சன் வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தான். நாங்கள் 'எலிஸா டன்'னைப்பற்றிக் கேட்டதும்,

''ஆமாம் சார்! நல்ல சமையற்காரி; சாதுவான குணம்'' என்றான் சிம்சன். அவன் நல்ல அந்தஸ்துடன் விளங்கினான்.

அன்றே என்னை 'சிட்டி பேங்'கிற்குச் சென்று வரும்படிக் கூறினான் பாய்ரட். நான் சென்று விசாரித்ததில் பணத்துடன் மறைந்த காஷியர் ராபர்டும், சிம்சனும் சாதாரணமாகத்தான் பழகினார்கள் என்றும், சிம்சன் வியாழக்கிழமை உடல் நலக் குறைவால் விடுமுறை எடுத்துக்கொண்டான்; ஆனால் புதன்கிழமை பேங்கிற்கு வந்திருந்தான் என்றும் தெரிந்து கொண்டேன். இச்செய்திகளை பாய்ரட்டிடம் நான் சொல்லி முடித்ததும், அவன் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி என்னிடம் தந்தான்.

''இதை எல்லாப் பத்திரிகைகளிலும் நாளை வெளிவரச் செய்'' என்றான். மறுநாள் காலையில் பத்திரிகைகளில்,

'அன்புள்ள எலிஸா டன்!
இவ்விலாசத்தில் நீ வந்து
சந்தித்தால் உனக்குப் பல
நன்மைகள் உண்டு' என்ற
விளம்பரம் வெளிவந்தது.

அன்று புதன்கிழமை எங்கள் விளம்பரத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. நான் இதுவரை சேகரித்த செய்திகளை வைத்துக் கோர்வைப் படுத்திப் பார்த்துக் கொண்டிருந்தேன். பாய்ரட் தன் அரும்பு மீசையைத் தடவிக் கொண்டிருந்தான்.

அப்போது எங்கள் வேலையாள் வந்து, எலிஸா டன் என்பவள் வந்திருப்பதாக அறிவித்தாள்.

''அப்பாடா! வந்து விட்டாளா? உடனே வரச்சொல்! ஓடு'' என்றேன் நான். பாய்ரட் தன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். அடுத்தகணம் காணமற்போன சமையற்காரி எலிஸா டன் எங்கள் முன் நின்றாள். எங்கள் நான்கு விழிகளும் ஆவலுடன் அவளை ஆராய்ந்தன.

பாய்ரட் நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னான். அவள் உட்கார்ந்தாள்.

''நான் இந்த விளம்பரத்தைக் கண்டுதான் வந்தேன்'' என்றாள் அவள்.

''மிஸ். எலிஸா! நீ மறைந்ததில் உன் பழைய எஜமானி மிஸஸ் டோடுக்கு மிக்க வருத்தம்.'' என்றான் பாய்ரட்.

''அப்படியானால், என் கடிதம் அவர்களுக்குக் கிடைக்கவில்லையா?'' என்றாள் எலிஸா ஆச்சரியத்துடன்.

"இல்லை. ஆனால், மிஸ். எலிஸா டன்! நடந்த விவரம் முழுதும் சொல்; சொல்வாயல்லவா?" என்றான் பாய்ரட் மிகவும் வினயமாக.

எலிஸா தாமதிக்காமல் உடனே சொன்னாள்:

"புதன்கிழமையன்று இரவு நான் வீடு செல்லும்போது ஒரு மனிதன் என்னிடம் வந்து 44, குக்ஸ் வீதி, க்ளாக் பாமில் மிஸஸ் டோட் வீட்டில் இருக்கும் எலிஸா டன் நீதானே?" என்று கேட்டான். நான் "ஆம்" என்றேன்.

"நான் அங்கே போய் உன்னை விசாரித்தேன். நீ வெளியே போயிருப்பதாகக் கூறினார்கள். மிஸ் எலிஸா டன்! நான் ஆப்ரிக்காவிலிருந்து வருகிறேன் —அதுவும் உன்னைப் பார்க்க! ஆப்ரிக்காவிலிருக்கும் உன் சிறிய தாத்தா இறந்து விட்டார். அந்த சொத்துக்கெல்லாம் நீதான் வாரிசு. இதோ உயில். நான் அவருடைய வக்கீல்" என்றான். மேலும் மான்செஸ்டரில் ஒரு வீடும், வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் பவுனும் கிடைக்கும் என்றும் அவன் சொன்னான்.

"தலை கிறுகிறுத்தது. உயிலைப் பார்த்தேன். ஆம்; உண்மைதான்.

"ஆனால், அவன் ஒரு நிபந்தனை போட்டான். நாளைக் காலை ஆறு மணிக்குள் நான் மான்செஸ்டரில் இருக்க வேண்டும். ஆனால், நான் எஜமானியிடம் சொல்லிவிட்டல்லவா வரவேண்டும்? இதை அவனிடம் சொன்னேன்.

"இதோ பார், எலிஸா! இரயிலுக்கு இன்னும் 10 நிமிடங்கள் தான் இருக்கின்றன. எனவே இப்போது டோட் அம்மையாருக்கு நீ ஒரு கடிதம் எழுதிக் கொடு; நான் தந்துவிடுகிறேன்" என்றான். நானும் அப்படியே செய்தேன். மான்செஸ்டர் வீட்டு விலாசம் சொல்லி, நூறு பவுன் வழிச் செலவுக்குத் தந்தான். நானும் ரெயிலேறி விட்டேன்.

"இதெல்லாம் என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் மான்செஸ்டரில், வீட்டை யடைந்ததும், அங்கு இன்னும் இரண்டு வக்கீல்கள் என்னை வரவேற்றனர். அவர்கள் முதல் வருடத்திற்கான ஆயிரம் பவுனையும் தந்தார்கள்.

"ஆனால் பாருங்கள் சார்! என் இரும்புப் பெட்டி—ட்ரங் பெட்டிதான் — அதைத் தராமல்; என் துணிமணிகளை எல்லாம் காகிதத்தில் 'பேக்' செய்து அனுப்பியிருக்கிறாள் அந்த மிஸஸ் டோட் அம்மையார்" என்று தன் கதையை முடித்தாள் எலிஸா டன்.

அவள் சென்றுவிட்டாள்.

"வாட்சன், உடனே காரை எடு! உம், சீக்கிரம்!" என்று குதித்தான் பாய்ரட். அடுத்த நிமிஷம் நாங்கள் காருக்குள் இருந்தோம்.

"மிஸஸ் டோடின் வீட்டிற்கு விடு" என்றான் பாய்ரட்.

"அங்கே எதற்கு?" என்றேன்.

"ஆம்! அங்கேதான்; சீக்கிரம் போ வாட்சன்! இல்லாவிட்டால் நம் பறவை பறந்து விடும்!"

"பறவையா? யாரது?"-நான் குழம்பினேன்.

"சிம்சன்"

"என்ன? சிம்சனா?"—எனக்கு ஒரே திகைப்பு!

''உஷ், அதெல்லாம் பிறகு!'' என்றான் பாய்ரட்.

அதற்குள் டோட் அம்மையாரின் வீடு வந்து விட்டது. ஆனால் அங்கே சிம்சன் இல்லை! ஆம்; பறவை பறந்து விட்டது!

நாங்கள் உடனே திரும்பினோம். 'வயர்லெஸின்' உதவியால் 'கொலம்பியா' என்னும் கப்பலில் அமெரிக்கா சென்று கொண்டிருந்த சிம்சன் கைது செய்யப்பட்டு லண்டனுக்குக் கொண்டு வரப்பட்டான். அடுத்தநாள் எலிஸாவின் இரும்புப்பெட்டி ஏதோ ஒரு ரயில்வே ஸ்டேஷனில், சந்தேகத்தின் பேரில் போலீசாரால் உடைக்கப்பட்டபோது, அதில் காஷியர் ராபர்ட்டின் அழுகிய பிணம் கிடந்தது.

பத்திரிகை நிருபர்களிடம் ஹெர்க்யூல் பாய்ரட் சொல்லிக் கொண்டிருந்தான்:

''சிம்சனின் திட்டம் பேங்கில் பணத்தைக்கொள்ளையடிப்பது; குற்றத்தை ராபர்ட்டின்மேல் சுமத்துவது. அதன்படி புதன்கிழமை மாலை 50 ஆயிரம் பவுன் கொள்ளையடித்து விட்டான். இந்தத் திருட்டு வியாழக்கிழமை மாலைதான் கண்டு பிடிக்கப்படும். எனவே வியாழனன்று விடுமுறை எடுத்துக் கொண்டான். இனி அவன் மேல் சந்தேகம் ஏற்படாது.

''புதன்கிழமை இரவு சமையற்காரி எலிஸாவை சந்தித்து உயில் போல் தயாரித்ததைக் காட்டி அவளை மான்செஸ்டருக்கு அனுப்பி விட்டான். அங்கு நண்பர்களை வைத்து அவளுக்குப் பணமும் கொஞ்சம் தந்துவிட ஏற்பாடு செய்தான். இது ஒன்றும் சிம்சனுக்குப் பெரும் தொகையல்லவே!

''எலிஸா சென்ற பின் அவளுடைய பழைய தகரப் பெட்டியை 'ஜேம்ஸ்' என்ற பெயரில் வந்து வாங்கிக் கொண்டான். பெட்டியை வைத்துக்கொண்டு துணியை பேக் செய்து அவளுக்கு அனுப்பி விட்டான்.

''வியாழனன்று மாலை ராபர்ட் சிற்றுண்டிக்காக வெளியே வந்ததும் அவனைத் தன் அறைக்கு அழைத்து வந்து மதுவில் விஷமிட்டுக் கொன்று விட்டான். எலிஸாவின் 'டிரங்' பெட்டிக்குள் ராபர்ட்டின் பிணம் நுழைந்தது.

''பின்னர் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் அது கண்டு பிடிக்கப்பட்டு, ராபர்ட்டின் பிணம் எடுக்கப்பட்டது.

''மறுநாள், வெள்ளிக்கிழமை சிம்சன் பத்திரமாக பேங்கிற்குப் போனான். ஆனால் அன்று பத்திரிகைச் செய்தி 'பேங்க் காஷியர் ராபர்ட், 50 ஆயிரம் பவுனுடன் மறைந்து விட்டான்' என்பதுதான்; அதைத் தானே சிம்சனும் எதிர்பார்த்தான்.

''தன் திட்டம் முடிந்ததும் அமெரிக்காவுக்குத் தப்பிச் செல்லமுயன்றான். நல்லவேளை; அமெரிக்க எல்லையை அடையுமுன் கைது செய்யப்பட்டான்'' என்று தன் நீண்ட பேச்சை முடித்தான் பாய்ரட்.

''வாட்சன், காணமற்போன சமையற்காரி — பயங்கரக் கொலை-இதுவரை நான் கண்டு பிடித்த எல்லாக் 'கேஸி'லும் இது மிக்வும் நூதனமானது'' என்றான் பாய்ரட்.

நான், எங்கள் போட்டோவும் கேஸின் முழு விவரமும் இருந்த ''டெய்லி நாய்ஸ்'' பத்திரிகையைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். ஃ

ஜி. பி. எஸ்.

முழுப் பெயரையும் சொன்னால்கூட தெரிந்து கொள்ள முடியாதவர்கள் பலர் இருக்க, சுருக்கமான விலாசத்தினாலேயே உலகம் முழுதும் அறிமுகமானவர்கள் ஒரு சிலர்தான் இருக்க முடியும். அவர்களுள் முக்கியமானவர்தான் ஜி. பி. எஸ். என்று அழைக்கப்படும் ஜார்ஜ் பெர்னட் ஷா.

புவிப் பெரியார், பேரறிஞர்—என்றெல்லாம் போற்றப்படும் அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் ஒன்றே 'ஜி. பி. எஸ்.' என்ற பெயரிலேயே பிரசுரமாகி யிருக்கிறது.

ஜி. பி. எஸ். இருபதாம் நூற்ருண்டின் ஈடு இணையற்ற எழுத்தாளர், பேச்சாளர், அரசியல் விற்பன்னர்.

ஆனால் அவர் பள்ளிக்கூடம் சென்ற காலமோ ஐந்தே ஐந்து ஆண்டுகள்தான்!

—பள்ளிப்படிப்பு இல்லாதிருந்தும்கூட உலகம் அவரது பெருமையைக் கௌரவிக்காமற் போகவில்லை!

அகிலத்தின் மிகப் பெரிய—கிடைக்கக் கூடிய மதிப்புகளுக்கெல்லாம் மகுடம் புனைவிக்கக் கூடியதாயுள்ள நோபல் பரிசு (இலக்கியத்திற்காக) அவருக்குக் கிடைத்திருக்கிறது.

நோபல் பரிசின் மொத்த மதிப்பு 7000 டாலர்கள். ஆனால் ஜி. பி. எஸ். இதைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

ஆனல் எல்லோரும் வற்புறுத்தினர்கள். ஜி. பி. எஸ். நோபல் பரிசை வாங்கிக்கொள்வதால் வருங்கால நோபல் பரிசுகளுக்கே மதிப்பு என்று எடுத்துக் கூறினர்கள்.

முடிவில் ஜி. பி. எஸ். சில விநாடிகளே நோபல் பரிசுக்குரிய அந்த டாலர் முடிச்சை வாங்கிக் கொண்டார்.

எப்படி—என்று கேட்கிறீர்களா? அந்த டாலர் முடிச்சை வாங்கி அதை அப்படியே ஆங்கில-ஸ்வீடன் நாடுகளின் இலக்கியக் கூட்டுறவு நிதிக்குக் கொடுத்துவிட்டார்.

—இதுபோன்ற தகுதிகள் அவரைத் தேடிவர அவர் என்

னென்ன இன்னல்களை ஏற்றிருக்கிறார் தெரியுமா?

தானே தனது சொந்தக் கால்களால் நிற்கவேண்டுமென்ற நிலை பிறந்தபோது முதன் முதலில் மாதம் ஒன்றிற்கு ஒரு பவுனுக்குக்குறைந்த ஊதியத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றியிருக்கிறார்.

''எனக்கு ஒரே ஒரு வாழ்க்கைதான் உண்டு. அதை நான் குமாஸ்தா மேஜையில் கழிக்க விரும்பவில்லை''—என்று அந்த வேலையையும் உதறித் தள்ளினார்!

ஜி. பி. எஸ். எழுதத் துவங்கிய உடனேயே பிரபலமாகிவிட்டார் என்று நினைக்கிறீர்களா?

அதுதான் இல்லை. எழுதி அதன் மூலம் பிழைக்க முடியும் என்கிற நிலை வருவதற்காக அவர் ஒன்பது ஆண்டுகள் எழுதிக்கொண்டே இருக்க வேண்டியிருந்தது. அதாவது, ஒன்பது ஆண்டுகள் ஆரம்ப எழுத்தாளனாகவே இருந்திருக்கிறார்.

உடற் பயிற்சி செய்வதைப் போல தினம் தினம் அவர் எழுதிக்கொண்டே இருப்பார். நிச்சயம் ஐந்து பக்கங்கள் எழுதிப் பார்க்காமல் அவர் படுக்கைக்குச் செல்வது கிடையாது. ஐந்து பக்கங்கள்தான்; அதற்கு மேல் எழுதுவது கிடையாது. ஐந்தாவது பக்கத்தின் கடைசியில் ஏதாவது ஒரு வாக்கியம் முற்றுப் பெறாமல் இருந்தால்கூட அதை அப்படியே நிறுத்திவிடுவாராம். ''இதற்குக் காரணம் நான் குமாஸ்தாவாக இருந்தேனல்லவா; அது அந்தப் பழக்கம் தான்!''—என்கிறார், அவர்!

முதலில் அவர் ஐந்து முழு நாவல்கள் எழுதினார். எல்லா பதிப்பாளர்கட்கும் அனுப்பினார். அவற்றை எல்லோருமே திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

ஏன் அப்படி? நடையிலோ, கதையிலோ ஏதாவது குறை ஏற்பட்டதனாலா?

இல்லை; அவரது கொள்கைகள்தான் காரணம்!

வெறும் கதையழகிற்காக எழுதுவாரேயானால் ஜி.பி.எஸ். என்றோ ஒரு எழுத்தாளர் என்ற பெயரைப் பெற்றிருக்க முடியும். கொள்கைக்காக எழுதினார்; கொள்கையை எழுதினார்; கொள்கையைத் தவிர வேறெதையும் எழுதவில்லை.

அதனால்தான் அவர் எழுத ஆரம்பித்த அந்த ஒன்பது ஆண்டுகளில் அவர் மொத்தம் சம்பாதித்தது எவ்வளவு தெரியுமா?

ஆறே பவுன்கள்தான்!

இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் வருமானப் பற்றாக்குறை காரணமாக ஒரு சமயம் ஒரு நபருக்கு தேர்தலில் ஓட்டு எண்ணுபவராகவும் வேலை பார்த்திருக்கிறார். அதற்காக அவருக்கு ஒரு பவுன் கிடைத்ததாம்!

நாவல் எழுதித் தோல்வி பெற்ற பிறகுதான் ஜி. பி. எஸ். துவண்டுவிடாமல் நாடகம் எழுத ஆரம்பித்தார்; அதில் வெற்றியும் பெற்றார்.

ஜி. பி. எஸ். மிகப் பெரிய சொற்பொழிவாளர்! பொது

வுடைமைக் கருத்துக்களை அவர் பேசும்போது கேட்பதற்குப் பதினையிரம் காதுகள் வேண்டுமென்பார்கள்!

ஆனால் அவர் ஒரு பேச்சாளராக மாறிய கதையே வேடிக்கையானது.

முதல் தடவை பேச ஆரம்பித்தபோது அவரது கையும் காலும் உதறல் எடுத்ததாம். அடுத்த தடவை அவர் பேச முன்வந்தபோது அவரது நடுக்கத்தைக் கண்டு நடுங்கிய தோழர்கள் அவரை உட்கார்ந்தே பேசச் சொன்னார்களாம்!

கூட்டம் முடிந்த பிறகும்கூட அவரது நடுக்கம் நிற்காதாம்! 'மினிட்' புத்தகத்தில் கூட கையெழுத்துப்போட முடியாத அளவுக்கு அவரது கரங்கள் நர்த்தனமாடுமாம்!

அப்பேற்பட்ட ஜி. பி. எஸ். தான் தொடர்ந்து பேசினார்; 12 ஆண்டுகள் விடாமல் தெரு முனைகளில் எல்லாம் நின்று கொண்டு சோஷலிசக் கருத்துக்களை எடுத்தோதினார்!

வாழ்க்கைப் போராட்டத்துக்காக பயந்து அவர் குமாஸ்தாவாகவே இருந்திருந்தால்; வயிறு வளர்ப்பதற்காக அவர் கொள்கைகளை எழுதாமல் விட்டிருந்தால்; வெட்கம் குறுக்கிடுகிறதே என்பதற்காக அவர் பேசப் பயிற்சி செய்யாமலிருந்திருந்தால்; உலகம் ஒரு மேதையை இழந்திருக்கும்; ஜார்ஜ் பெர்னட் ஷா ஒரு சாதாரண குமாஸ்தாவாகச் செத்துப் போயிருப்பார்; ஜி. பி. எஸ். உலகம் தெரிந்த விலாசமாகியிருக்காது!

●●●

'வீர' சிப்பாய்!

நெப்போலியன் வாலிப வயதுத் தளபதியாக இருக்கும்போது புதிதாகப் போர்முனைக்கு வந்த சிப்பாய்களுக்கு பலமான சோதனைகள் வைத்திருந்தான். எதிரிகளைக் கடுமையாகத் தாக்கும்படி உத்தரவுபோட்டிருந்தான்.

ஒரு பயந்தாங்கொள்ளி சிப்பாய் இரவு நேரத்தில் நடுங்கிக்கொண்டே எதிரி முகாமிற்குள் நுழைந்து, பின்னர் வெற்றிகரமாகத் திரும்பிவந்ததாகக் கூறிக்கொண்டு நெப்போலியன் முன்னே வந்தான்.

''தளபதி அவர்களே! நான் எதிரியின் இருகால்களையும் வெட்டி வீழ்த்திவிட்டேன்!''

''வெறும் கால்களை மட்டுமா? அவன் தலை என்ன வாயிற்று?''

''நான் என்ன செய்வேன்; எனக்கு முன்னர் யாரோ அங்கு சென்று அவன் தலையைக் கொண்டுபோய் விட்டார்களே!''

அமைதி

முல்லை சக்தி

அஸ்தமனம்

ஊருக்கு மேற்கே இருக்கும் மாந்தோப்பின் பின்னே பகலவன் மறைந்து கொண்டிருந்தான். நிலப் பரப்பின்மீது இருளின் சிறகுகள் விரிய ஆரம்பித்தன. அந்த ஆதவனின் ஒளி பட்டு மாம் பூக்கள் வைரம் போல் மின்னின.

அடர்த்தியான அத்தோட்டம் அவ்வூர் கவுண்டருக்கு சொந்தமானது. 'கவுண்டர்' தோப்புஎன்றாலே அந்த 'வேர்க் காட்டிலே' ஒரு தனி மதிப்பு. அல்ல, அல்ல, பயம்! 'கவுண்டர்' நடத்தும் காட்டு தர்பாரின் கொலு மண்டபம் என்று சில குறும்புக்காரர்கள் கூறுவார்கள். பகலிலேகூட யாரும் அத்தோட்டத்தின் பக்கம் தலை காட்டமாட்டார்கள். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று; அத்தோட்டத்திலே உதிர்ந்துள்ள சரகுகளை தொட்டுவிட்டாலும் மரத்தில் கட்டி வைத்து தோலை உரித்துவிடுவார்கள் கவுண்டரின் கையாட்கள்! அடுத்தபடியாக அத்தோட்டத்தில் மலைப்பாம்பு வாசம் செய்கிறதென்ற பீதி. யாரும் தோட்டத்திற்குள் நுழையக் கூடாதென்பதற்காக கவுண்டரே அந்தப் புரளியை கட்டியும் விட்டிருக்கலாம். ஆனால், அர்த்த ராத்திரியில் கொள்ளையடிக்கும் கள்ளர்களும், கள்ளக் காதலர்களும் அத்தோட்டத்தை தங்குமிடங்களாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்களென்ற செய்தி மட்டும் அடிக்கடி வரும்! இத்தகைய கீர்த்தியும், புகழும் பெற்ற தோட்டத்தின் உரிமையாளர் பழனிச்சாமி கவுண்டரின் ஏகப் புதல்விதான் ராணி! பெயர் மட்டும் ராணி அல்ல; அழகிலும் ராணி, அந்தஸ்திலும் ராணி; அறிவிலும் ராணி! சிறிய வயதிலேயே தாயை இழந்த அத்தையலைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்தார்; படிக்க வைத்தார்; பட்டமும் பெறச் செய்தார்!

செல்வச் சீமானின் கொலு மண்டபத்தில் வளர்ந்த அந்தப் பூங்கொடியும் பருவப் பூரிப்பால் பூத்துக் குலுங்கிற்று!

அந்த அழகுத் தெய்வத்தின் இதயத்திலே குடியேறினான் மூர்த்தி. அவனறிவான், ராணி மாளிகையிலே வாசம் செய்யும் மணிப்புறாவென்று! ஆனாலும் அந்த மணிப்புறா மூர்த்தியின் மடியிலேதான் சுகம் கண்டது. அச்சத்திற்கும், ஆசைக்கும்

இடையே வளர்ந்தது அவர்கள் காதல்! மாந்தோட்டம் அவர்கள் சந்திக்கும் மண்டபம்!

வளைந்து, தாழ்ந்திருந்த ஒரு கிளையில் அக்கிளி மொழியாள் அமர்ந்து, அஸ்தமனக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தாள்.

''ராணி, அஸ்தமனக் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் மூர்த்தி.

''ஆம், அழகான அஸ்தமனத் திற்குப் பின்னால் பயங்கர இருள் இருக்கிறது!''

''ஒன்றின் அஸ்தமனம் மற்றொன்றின் உதயம்தானே? இருளை விரட்ட சந்திரன் உதயமாகப் போகிறான்...''

''வையத்தைக் கவ்வியிருக்கும் இருளை விரட்ட வெண்மதி உதயமாகிறது — நம்மை சூழ்ந்திருக்கும் காரிருள் விலகுவது எந்நாள்?''

''உன் தந்தையின் மடமைக்கு அஸ்தமனம் ஏற்படும் போது!''

''அதற்குள் நான் கிழவியாகி விடுவேன்...''

''அதனாலென்ன? மல்கோவா மாம்பழத்தை நினைவுபடுத்தும் உன் கன்னங்களில் இரண்டொரு சுருக்கங்கள் — மாவடு போன்ற கண்களைச் சுற்றி கருவளையங்கள் — இன்னும்...''

''போதும் மூர்த்தி......உங்களுக்கு எப்பொழுதுமே விளையாட்டுத்தான்! உங்களுக்கு வாழ்க்கையே விளையாட்டாக இருக்கிறது! எனக்கு வேதனைக் காடாக இருக்கிறது!''

''தோல்வி கண்டு கண்டு துவண்டுபோயிருக்கும் என் இதயம், தோகை மயிலே, உன்னைக் காணும் போதுதானே சிறிது தெம்படைகிறது. எங்கேயோ பிறந்து, எப்படியோ வளர்ந்து, ஆதரவற்றவனாய், அனாதையாய், நாடோடியாய் அலைந்து திரிந்துகொண்டிருந்த நான், என் அன்னமே. உன் அன்பால் அல்லவோ இன்னும் உயிரோடு வாழ்கிறேன்! எனக்கு வாழ்க்கை விளையாட்டாக இல்லை. வெள்ளக்காடாக இருக்கிறது. உன் அன்பு என்ற படகேறிதான் வெள்ளத்தைக் கடக்க இருக்கிறேன், இன்பமே!''

''மூர்த்தி, எத்தனை நாளைக்கு நாம் இப்படி மறைந்து சந்திப்பது? ஊரார் அறிய, சதிபதி சமேதராய் வாழ்க்கையைத் துவங்க வேண்டாமா? என் தந்தை அவரது சகோதரியின் மகன் துரைக்கு என்னை மணம் முடிக்க ஏற்பாடு செய்கிறார். அவரும் என் கழுத்தில் தாலி கட்டத்துடித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் நம் காதல் ......கனவு தானா? கானல் நீர் தானா?''

''ராணி, என் இதயவேணி! உன் உள்ளத்திலே உறுதியிருக்குமானால் நம் காதல் நிச்சயம் தோல்வியைத் தழுவாது.''

''என் உறுதியை நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா?''

''இல்லை, இல்லை, சங்கீத மொழியாளே!''

''மூர்த்தி, மிக விரைவில் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்!''

''ஆமாம். ஒன்றின் முடிவு மற்றொன்றின் ஆரம்பம்!''

''ஒன்றின் அஸ்தமனம் மற்றொன்றின் உதயம்...''

''நாளை சந்திப்போம்... இருள் பரவ ஆரம்பித்துவிட்டது!''

இருள்

காதல் வலையில் சிக்கிய அந்த வானம்பாடிகள் பிரிந்தனர். இருள் 'அரக்கி' தன் முந்தானையால் வையகத்தையே போர்த்தியிருந்தாள். ராணி சென்ற திக்கையே நோக்கிக் கொண்டிருந்தான் மூர்த்தி. அவன் வாய் 'ஒன்றின் அஸ்தமனம் மற்றொன்றின் உதயம்' என முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

''ஆமாம் மூர்த்தி, ஆமாம்! உன் வாழ்வு அஸ்தமனமாகி என் வாழ்வு உதயமாகப் போகிறது'' என்று கூறிக்கொண்டே வந்தான் துரை. அந்த இருளிலும் அவன் பயங்கரமாக இருந்தான்.

''என்ன சொல்கிறாய்?''

''சொல்வதற்கு என்னடா இருக்கிறது? ஒரு வாய் சோற்றுக்கும் வழியில்லாதவனே! ராணி இந்த ஊருக்கே ராணி! அவளை மணக்கப் போகிறானும், மண்குடிசைக்கும் கதியில்லாத கபோதி...''-பயங்கரமாகச்சிரித்தான் துரை.

''காதல் மாளிகை வாசிகளுக்கு மட்டும் சொந்தமல்ல; மண் குடிசையிலும் அது பிறக்கிறது!''

''பிரசங்கம் வேண்டாம்;பிரச்சனைக்கு மட்டும் பதில் சொல்! நீயோ அனாதை; ராணியோ செல்வத் தொட்டிலிலே வளரும் செல்லக் கிளி! நீ ஏணி வைத்து ஏற முடியாத உயரத்திலே இருக்கும் முல்லை...''

''முல்லையே என் காலடியில் விழுந்தால்...''

''முல்லைக்குத் தெரியாது, செடியிலிருந்து உதிர்ந்தால் வாடிவிடுவோமென்று!''

''என் இதயப் பெட்டியில் வைத்துப் பாதுகாப்பேன்!''

''இதயம் மட்டும் போதாது... வயிறு என்று ஒன்றிருக்கிறது; அதற்கு உணவு தேவைப் படுகிறது; என்பதையும் நினைவு படுத்திக்கொள்...''

''துரை, நாங்கள் கொண்டுள்ள காதல் மாசற்ற காதல்—மாண்புமிக்க காதல்...வெற்றி பெற்றால் வாழ்வோம்; இல்லையேல் மாள்வோம்!''

''மூர்த்தி, நீ சாவதைப்பற்றி யாரும் கவலை கொள்ளவில்லை. ஆனால் ராணி, எங்கள் குடும்பத்தின்குலவிளக்கு; அது அணையத்தான் வேண்டுமா? அலலது அணைக்கத்தான் விடுவோமா? மூர்த்தி. இனிமேலாவது ஒழுங்காக நடந்துகொள். ராணியை மறந்துவிடு. அவளை சந்திப்பதையும் நிறுத்திவிடு!''

''நீயார் அதைச் சொல்ல...?''

''நான் யாரா? முட்டாளே! நான் ராணியின் அத்தான். அவளுக்கு மாலை சூட்டப் போகும் மணாளன். நினைவில் வைத்துக்கொள். நான் முரடன்...என் பாதையில் குறுக்கிடுபவர்களை நான் விடமாட்டேன்...விட்டில்பூச்சியே;விளக்கிடம் விளையாடாதே!''

''வீணாக மிரட்டாதே! வீண் கனவு காணாதே!''

''டேய் மூர்த்தி, இவ்வூரை விட்டு ஓடிவிடு. இல்லையேல் ஓடும்படிச் செய்துவிடுவேன்...''

வானத்தில் இடி இடித்தது... வையகமே நடுங்கிற்று!


செல்லப்பன்

இடி

கதிரவன் கரம்பட்டு கண் விழித்தாள் ராணி. அறையில் கீழே விழுந்திருந்த கடிதத்தை எடுத்தாள். மூர்த்தியின் கையெழுத்தை, அவளது பழகின கண்கள் புரிந்துகொண்டன. அவசர அவசரமாகப் பிரித்தாள் :

''என் இதயமே!

நான் ஓடுகிறேன்; பிறந்த பூமியைவிட்டு, பழகிய மக்களைவிட்டு ஓடுகிறேன்! என் கால்கள் என்னை எங்கு இழுத்துச் செல்லுமோ! எந்த முகத்தில் உன் சிவந்த அதரங்களைப் பதியவைத்தாயோ, அந்த முகத்தை இனிமேல்—ஏன், உன் வாழ்நாள் முழுதும் நீ பார்க்கமாட்டாய்!.....என்னை மன்னித்துவிடு, மாணிக்கமே! உன்மேல் அன்பு கொண்ட ஒரு ஜீவன் உலகத்தில் எங்கேயோ ஒரு மூலையில் நடமாடிக் கொண்டிருக்கிறதென்பதை மட்டும் உன் நினைவில் வைத்துக்கொள்! உன் வாழ்வு வளம் பெறட்டும்.

அன்பன்,
மூர்த்தி......''

இந்தப் பேரிடியை ராணியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வானத்தில் இடி இடித்து மழை பெய்ய ஆரம்பித்தது.

மழை

திடீரென்று மூர்த்தி மறைந்ததின் மர்மம் ராணிக்குப் புதிராகவே இருந்தது. அவனை நினைத்து நினைத்து அழுவாள். கண்ணீர் சிந்துவதாலேயே கைநழுவிப்போன பண்டம் திரும்பக் கிடைத்துவிடுமா?

தெருவிலே கிடக்கும் குப்பைக் கூளங்களை வெள்ளம் அடித்துக்கொண்டு போவதைப்போல, காலவெள்ளம் ராணியின் இதயத்திலிருந்து மூர்த்தியின் நினைவுகளை அடித்துக்கொண்டு சென்றது. கண்ணீர் மழைபொழிந்து காலத்தை விரட்டிக்கொண்டிருந்த ராணியின் வாழ்க்கையிலும் வானவில் தோன்றிற்று!

வானவில்

கவுண்டர் ராணியின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். முகம் சுளிக்காமல், முணுமுணுக்காமல் துரையை மணக்க ராணி சம்மதித்ததைக் கண்டு, களிப்படைந்தார் கவுண்டர்! சுபயோக சுபதினத்தில் ராணி–துரை திருமணம் மிகத் தடபுடலாக நடைபெற்றது.

திருமணம் முடிந்ததும், ராணியும் துரையும் பட்டினத்திலே குடியேறினர்கள். வாழ்க்கையின் வானவில்லை ரசிக்க ஆரம்பித்தனர், துரையும் ராணியும்!

'தூவானம்'

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப்போல ராணி மணம் முடிந்து குடும்பப் பொறுப்பை சுமந்தபோது அவளது இதயத்தின் ஒரு மூலை மூர்த்தி, மூர்த்தி என்று புலம்பிக் கொண்டுதான் இருந்தது. மூர்த்தியை நினைத்துக் கொண்டால் அவளது நெஞ்சம் நெகிழும். கண்களில் கண்ணீர்—கசியும்.

புதியதாக வெளியான படக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், புதிய தம்பதிகள். இடைவேளை வந்தது; எங்கும் விளக்குகள் எரிய ஆரம்பித்தன! தன் எதிரில் உட்கார்ந்திருந்த உருவத்தைக்

கண்டு திடுக்கிட்டாள் ராணி. அருவருப்பும், பயமும் அவள் முகத்தில் போட்டியிட்டன. இதைக் கண்ட துரை "இந்த மாதிரியானவர்கள் வெட்கமில்லாமல் வந்து விடுகிறார்கள், பொது மக்கள் கூடும் இடத்திற்கு! இந்தக் கோர சொரூபத்தைக் காண கண் கூசுகின்றதென்பதையும் மறந்து விடுகிறார்கள். பார்ப்பவர்கள் பயப்படுகிறார்களென்பதையும் அவர்கள் உணர்வதில்லை..." என்று விளக்கினான்.

தீயினால் வெந்துபோன முகமும் குழிவிழுந்த ஒற்றைக் கண்ணும் கொண்ட அந்த மனிதர் திரும்பிப் பார்த்தார். அவரது ஒற்றைக் கண் கோபத்தால் தீக்குழம்பைக் கக்கியது. ஒரு முறை துரையை ஏறிட்டுப் பார்த்தார். பின் அவசர அவசரமாக எழுந்து சென்றார். அதைக் கண்டு துரை நடுங்கினான். மழை விட்டும், தூவானம் விடவில்லை என அவன் இதயம் கூறியது.

புயல்

அந்த 'கோர மனிதன்' துரையின் அறையிலே உட்கார்ந்து கொண்டிருந்தான். துரை சிகரெட் புகையைக் கக்கிக் கொண்டிருந்தான். நீண்ட மௌனம்—மயான அமைதி!

துரை பேச ஆரம்பித்தான்...

"எவ்வளவு பணம் தேவை என்று கேள்—கொட்டுகிறேன் உன் காலடியில். எங்கள் கண்களிலிருந்து மறைந்து விடு. எங்கள் வாழ்க்கையில் புயலை உண்டாக்கி விடாதே!"

"துரை, புயலுக்குப் பின் தான் அமைதி!"

"தெரியும் எனக்கு—உனக்கு என்ன தேவை? என்னை ஏன் இப்படி அணு அணுவாக சாகடிக்கிறாய்?"

"துரை, அணு அணுவாக நான் செத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நீ அறிவாயா? பொது மன்றங்களில் நான் தலை காட்ட முடிவதில்லை. கேலி மொழிகளும், சுடு சொற்களும் என்மேல் வீசப்படுகின்றன. என்னை மனிதனாகவே மக்கள்சமுதாயம் மதிப்பதில்லை. கொடிய விலங்கைக் காண்பதைப் போல என்னைக்கண்டு பயப்படுகிறார்கள். பகல் நேரங்களில் நான் வெளிவர முடிவதில்லை. இருளிலேதான் நான் நடமாட முடிகிறது. ஏன்? ஏன்? அடப் பாவி, ஏனென்று தெரியுமா உனக்கு?"

"போதும், சப்தம் போடாதே! ராணி வந்து விடுவாள். உனக்கு எவ்வளவு பணம் தேவையானாலும் தருகிறேன்."

"துரை, எனக்குப் பணம் தேவையில்லை; பாவைதான் வேண்டும். செல்வம் வேண்டாம்; சேல் விழியாளின் குளிர்ந்த பார்வைதான் தேவை, வேதனையால் எரிந்து கொண்டிருக்கும் என் இதயத்திற்கு! உன் தங்கையை எனக்கு மணம் முடித்துவை!"

"அடப்பாவி, தங்கச் சிலையடா என் தங்கை! இந்த பயங்கர உருவத்தை எப்படி மணக்கச் சம்மதிப்பாள்?"

"உலகத்திலிருக்கும் எந்தப் பெண்ணும் என்னை மணக்க சம்மதிக்கமாட்டாள். ஆனால், உன் தங்கையை எனக்கு நீ மணம் முடித்து வைக்கலாம்."

"ஐயோ! என்னை மன்னித்து விடு. உன் காலைப் பிடித்துக் கொள்ளுகிறேன். என் தங்கையின் வாழ்வைப் பாழடித்து விடாதே!"

"துரை! மனித சமுதாயத்தின்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. எத்தனை எத்தனை வார்த்தைகளை வீசி, என் இதயத்தை புண்ணாக்கி விட்டார்கள்! பழிவாங்கும் உணர்ச்சி இல்லை; வெறி உண்டாகிவிட்டது, என் உள்ளத்தில். இரக்கத்திற்கு இடமே இல்லை என் இருதயத்தில். பட்டாடை போர்த்த பசும்பொன் மேனியாள் ஒருத்தி என் பக்கத்தில் வந்தால் என்னைக் கண்டாலே கண்ணை மூடிக்கொள்பவர்கள் ஒதுங்கிச் செல்வார்கள். என் இதய தாகமும் தணியும். எனக்கும் மணம் செய்து மந்தகாச வாழ்வு நடத்த ஆசை இருக்காதா? என் இதயத்தில் அன்பு சுரக்காதா? என்ன சொல்கிறாய்? இல்லையேல் உன் உல்லாசமண்டபத்தை தூள் தூளாக்கி விடுவேன்! என் முகத்தில் காரி உமிழ்கிறவர்கள் எல்லோரும் உன் முகத்தை எச்சிலால் கழுவுவார்கள். உன் அன்பு மனைவி ராணி, உன்னைக் கண்டாலே பயந்து ஓடுவாள்! உன் தங்கைகூட உன்னை நெருங்க மாட்டாள். போலீஸ், கைவிலங்கு, சிறைச்சாலை, தூக்கு மேடை......"

ஓங்கி ஒரு அறை விட்டான் துரை.

"அடிக்க ஆரம்பித்து விட்டாயா? நான் மனிதனல்ல; மிருகம்!" என்று கூறிக்கொண்டே துரையைத் தாக்கினான். இருவரும் கட்டிப் புரண்டனர்.

'டுமீல்! டுமீல்!' என்று இரு வெடிகள்! அந்த பயங்கர மனிதன் சுருண்டு விழுந்தான். அவனது கண்கள் வெடி வந்த திக்கை நோக்கின. ராணி கையிலே துப்பாக்கி ஏந்தி நின்று கொண்டிருந்தாள்.

"ராணி, உன் கையாலே நான் சாவதைக் கண்டு பெருமை அடைகிறேன். இந்த பாக்கியமாவது கிடைத்ததே இந்தப் பாவிக்கு! மற்றவர்கள் அடித்து உதைத்து என்னை சாகடிப்பதைவிட உன் கையாலே மாள்வது எனக்கு இன்பம்தான்! என் மூச்சு அடங்குவதற்குள் ஒரு வார்த்தை! இதோ, இக்கடிதத்தைப் படி. நான் யார் என்பதைத் தெரிந்து கொள்!" என்று கூறிக் கொண்டே கீழே சாய்ந்தான். அவன் ஆவியும் பிரிந்தது.

ராணி கடிதத்தைப் பிரித்தாள்.

"ராணியும் மூர்த்தியும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ட நான் மூர்த்தியின் முகத்தில் திராவகத்தைக் கொட்டினேன்..."

மேலே ராணியால் படிக்க முடியவில்லை......கடிதத்தின் கீழே அவளின் கண்கள் மொய்த்தன...

'துரை'

'மூர்த்தி' என்று அலறினாள். பின் நினைவிழந்தாள்.

அமைதி

ராணி இப்பொழுது ஆயுட் கைதி. அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட கொந்தளிப்பு, சூறுவளி, புயல் எல்லாமே ஓய்ந்து விட்டது. சிறைச் சாலையில் பூர்ண அமைதியைக்கண்டாள்! அந்த அமைதி அவளது வாழ்க்கையில் நிரந்தரமாக இடம் பெறட்டும்! ஃ

ஹிட்லரின் 'குருநாதர்'!

ஒரு சமயம் ஸ்விட்சர்லாந்திலே ஒருவன் வேலையில்லாமல் திண்டாடினன். எங்கு தன்னைக் கட்டாயமாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்வார்களோ என்று பயந்துகொண்டு இத்தாலியிலிருந்து அங்கு ஓடிவந்தவன் அவன்! அங்கும் அவனை வேலையில்லாத் திண்டாட்டம் பிடித்துக் கொண்டது.

ஒருநாள் அவன் நாணயம் ஒன்றை தூக்கி உயரே விட்டெறிந்தான். அதில் தலை விழுந்தால் அமெரிக்கா போவதென்றும்; பூ விழுந்தால் ஸ்விட்சர்லாந்திலேயே தங்கி விடுவதென்றும் முடிவு செய்துகொண்டான்.

கடைசியில் பூவே விழுந்தது. உலகச் சரித்திரத்திலும் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது.

அந்த மனிதன் மட்டும் அமெரிக்கா போயிருந்தால் அங்கே அவனுக்கு எப்படியும் பிழைப்பு கிடைத்திருக்கும்;பின் இத்தாலி நாடு இரண்டாம் உலக யுத்தத்தில் கலந்து கொண்டிருக்காது; ஏனெனில் அப்படித் தலையா பூவா போட்டுப்பார்த்தமனிதன் வேறு யாருமல்ல-பெனிட்டோ முசோலினிதான்!

முசோலினி இத்தாலிக்குத் திரும்பாமலிருந்தால்; அமெரிக்காவிலேயே பிழைப்பு நடத்தியிருந்தால் அவன் இத்தாலியின் சர்வாதிகாரியாக வந்திருக்க முடியாது.

முசோலினி இத்தாலியின் சர்வாதிகாரியாக வந்திருக்காவிடில் ஜெர்மனியில் இட்லர் கூட பதவிக்கு வந்திருக்கமாட்டான். ஏனெனில் முசோலினி எந்தெந்த விதத்தில் ஜனநாயக முறைகளைக் கொன்று குவித்து; பதவியைக் கைப்பற்றினனே, அதே வழிகளை அவனைப் பார்த்தே பின்பற்றி இட்லரும் பதவிக்கு வந்திருக்கிறன்!

ஸ்விட்சர்லாந்தில் முசோலினி ஒரு புகை வண்டி நிலையத்தில் கூலியாக வேலை பார்த்து; மூட்டை தூக்கியிருக்கிறன். பிறகு ஒரு கொற்றனிடம் எடுபிடி வேலை பார்த்தான்; கசாப்புக் கடையிலே ஒவ்வொரு வீட்டிற்கும் மாமிசம் கொண்டு தரும் வேலையை மேற்கொண்டிருந்தான்.

பல சமயங்களில் பசி அவனை வாட்டியிருக்கிறது; அந்தச் சமயங்களிலெல்லாம் அவன் கை நீட்டிப் பிச்சை யெடுத்திருக்கிறன்! ஒரு வேளை யாரோ இருவர் உல்லாசப் பயணம் வந்திருந்தபோது அவர்கள்

ரொட்டிகளைத் திருடியிருக்கிறான். பிறிதொரு வேளை ஒரு தங்கக் கடிகாரத்தைத் திருடியிருக்கிறான். போலீசார் அவனைக் கைது செய்து மொத்தம் பதினேரு தடவை சிறைக்கு அனுப்பியிருக்கின்றனர்.

சிறுவயதில்கூட முசோலினிக்கு நண்பன் வறுமைதான்! படுப்பதற்குப் பாய்கூட கிடையாது அவன் வீட்டில்! நாயைப் போல வைக்கோல் போரில் தான் தூங்கியாக வேண்டும்!

முசோலினியின் அப்பாகூட ஒரு புரட்சிக்காரர்தான்!

முன்பு மெக்சிகோ நாட்டிலே மாக்சிமிலியன் என்று ஒரு அரசர் இருந்தார். அவரை அரண்மனையிலிருந்து விரட்டியடித்தான் டேனிட்டோ ஜூவாரேஸ் என்ற புரட்சிக்காரன். அதன் நினைவாகத்தான் அவன் தந்தை அவனுக்கு பெனிட்டோ முசோலினி என்று பெயர் வைத்தார்!

ஆனல் அந்தப் புரட்சிக்காரனுக்கு இருந்த குணங்கள் ஒன்றும் இவனுக்குக் கிடையாது.

சிறுவயது முதலே எப்படி நாலு பேரை அடித்துக் காலை முறிப்பது; எப்படி நாலுபேரை பயமுறுத்துவது — என்பதிலே தான் அவனுக்கு அக்கரை முழுதும்!

தன் வயதுக்கும் பலத்துக்கும் குறைந்த சிறுவர்களை நன்ருக அடிப்பதிலே அலாதி ஆசை உண்டு அவனுக்கு.

இந்த ஆசை நாற்பது ஆண்டுகள் கழித்தும் அடங்கவில்லை. தன் பலத்துக்குக் குறைந்த சின்னஞ்சிறு நாடுகளான எதியோப்பியா, அல்பானியா போன்ற நாடுகளின்மீது அவன் வலுச்சண்டை பிடித்து ஆக்கிரமிப்புக் கரத்தை நீட்டினன்!

இவனது முரட்டுத்தனத்துக்காகப் பயந்த தாயார் இவனை ஒரு பாதிரியின் பள்ளிக்கூடத்திலே சேர்த்தாள். சாமியார்கள் தன் பிள்ளையைத் திருத்திவிடுவார்களென்று நினைத்தாள். ஆனல் சிறுவன் முசோலினியோ தன்சகமாணவன் ஒருவனுடன் வம்பு வளர்த்து; அவனைக் கத்தியால் குத்திவிட்டான். பிறகு பாதிரிமார்கள் அனைவரும் சேர்ந்து, "உனது ஆத்மா நரகத்தைப்போல கருப்பாக இருக்கிறது" என்று கூறி பையனை வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

முசோலினிக்கு இரக்கம் என்ற ஒரு பொருளே இன்னதென்று தெரியாது. "எனக்கு எப்படித் தெரியும்? ஏழ்மையிலே பிறந்தேன். நான் குழந்தையாக இருந்தபோதுகூட என்னிடம் ஒரு ஜீவன்கூட இரக்கம் காட்டியது கிடையாது. பிறகு நான் எப்படி இரக்கம் என்ருல் என்னவென்று தெரிந்துகொண்டிருக்க முடியும்?"—என்று அவனே கேட்டிருக்கிருன் ஒரு சமயம்!

இவ்வளவிற்கும் முசோலினியை ஒரு மாவீரன் என்று கருதுகிறீர்களா? அதுதான் இல்லை.

முதல்தரமான பயந்தாங்கொள்ளி அவன்!

ஒரு சமயம் 'அவந்தி' என்ற ஏட்டிற்கு ஆசிரியனுக இருந்தான் அவன்! அப்போதெல்லாம் எப்போதும் துப்பாக்கியும், விரித்திருக்கும் கத்தியையும் மேஜைமீது வைத்

198952